பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 மாசி 14, திங்கட்கிழமை 27.02.2017 கதிர் 114

Facial, Straightening, Bleaching, Face Massaging, Threading.
Hair Dressing Ladies & Gents
வெலா சலூன்
இல.8, நவீன சந்தை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 077 658 4453, 021 205 4116

# வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இடமேயில்லை!

## ஐ.நாவுக்கும் மேற்கு நாடுகளுக்கும் அறிவித்து விட்டாராம் ஜனாதிபதி



கொழும்பு, பெப். 27

**"போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்வதற்கு நாட்டுக்குள் வெளிநாட்டு நீதிபதிகளை அனுமதிக்க முடியாது. அதனை ஐ.நாவுக்கும் சக்தி வாய்ந்த மேற்குலக நாடுகளின் தலைவர்களுக்கும் அறிவித்துவிட்டேன்."**

**- இவ்வாறு பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தினார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.**

பொலன்னறுவை நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்

பக்கம் 16

# ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் 34 ஆவது கூட்டத்தொடர் இன்று முதல்

கொழும்பு, பெப்.27

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 34 ஆவது கூட்டத் தொடர் இன்று ஜெனீவாவில் ஆரம்பமாகவிருக்கின்றது. மார்ச் 24 ஆம் திகதி வரை இந்தக் கூட்டத்தொடர் நடைபெறும்.

இந்த ஆண்டு ஜனவரியில் ஐ.நா. பொதுச் செயலாளராகப் பதவியேற்ற அன்ரோனியா குடேர்ஸ் இந்த நிகழ்வில் உலகத் தலைவர்கள் மத்தியில் முதல் தடவையாக உரையாற்றவுள்ளார்.

இரண்டு நாள்கள் நடைபெறும் ஆரம்ப வைபவங்களில் ஏனைய உலகத் தலைவர்க

பக்கம் 18

# சு.கவின் அதிருப்தியாளர்கள் குழுவை சமரசத்துக்கு அழைக்கிறது தலைமை

## வியாழனன்று முக்கிய கூட்டம் கொழும்பில்

கொழும்பு, பெப்.27

கூட்டு எதிரணியுடன் ஒன்றுபட்டு நிற்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அதிருப்தியாளர் குழுவைச் சமாளித்து, சமரசம் செய்வதற்காக அவர்களுக்கு அழைப்பு ஒன்றை விடுத்திருக்கின்றது கட்சியின் தலைமை.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் சேர்த்து கூட்டு எதிரணியில் இயங்கிவரும் சு.கவின் எம். பிக்களையே எதிர்வரும் வியாழக்கிழமை 2 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கும் சமரச சந்திப்புக்கு வருமாறு கட்சியின் செயலாளர் அமைச்சர் துமிந்த சேனநாயக்கா தனித்தனியாகக் கடிதம் அனுப்பி அழைத்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

இந்தக் கூட்டத்தில் முன்வைக்கப்படவிருக்கும் யோசனைகள்

பக்கம் 18

## ஓட்டோவை வெட்டிக் குதறிய அராஜகக் குழு



யாழ்ப்பாணம், பெப்.27

யாழ்ப்பாணம், குருநகர் - மடத்தடிப் பகுதியில் நேற்று மாலை இருள் கவியும் வேளை சுமார் நாற்பது, ஐம்பது பேர் கொண்ட குழு ஒன்று தடி, பொல்லுகள், வாள்களுடன் அட்டகாசம் செய்து, அடாவடித்தனம் பண்

பக்கம் 18

# துணைவேந்தருக்கான தெரிவில் ஸ்ரீசற்குணராஜா முன்னிலை!



யாழ்ப்பாணம், பெப்.27

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவுக்காக பல்கலைக்கழக கவுன்ஸிலில் நடைபெற்ற தேர்தலில் விஞ்ஞான பீட பீடாதிபதி ஸ்ரீசற்குணராஜா 18 வாக்குகளைப் பெற்று முதலிடத்தில் தெரிவாகியுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் நியமனத்திற்கான தேர்தல் நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில்

பக்கம் 16

# கொழும்பில் தூதரகங்களை முற்றுகையிட்டுப் போராட்டம்!

## அனந்தி சசிதரன் அறிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

"இலங்கை அரசு ஈழத் தமிழ் மக்களையும், சர்வதேசத்தையும் ஏமாற்றி வருகின்றது. அந்த அரசுக்கு முண்டு கொடுத்து அதைக் காப்பாற்றுகின்ற நாடுகளின் கொழும்புத் தூதரகங்களுக்கு முன்னால் அடுத்த வாரத்தில் ஒன்றுகூடி முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்துவோம்."

- இவ்வாறு அறிவித்திருக்கின்றார்

பக்கம் 16




# நெல்லியடியில் 78 குண்டுகள் மீட்பு!



யாழ்ப்பாணம், பெப். 27

நெல்லியடி, வதிரி - புலவரோடைப் பகுதியில் தனியார் காணி ஒன்றில் இருந்து உள்ளூரில் தயாரிக்கப்பட்ட - அதிசக்தி வாய்ந்த - 78 குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

பக்கம் 18

## பாடகர் சாந்தன் காலமானார்



யாழ்ப்பாணம், பெப். 27

பிரபல புரட்சிப் பாடகர் எஸ்.ஜே.சாந்தன் (வயது - 57) நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரியில் காலமானார்.

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருந்த சாந்தன், சிகிச்சை பலனின்றி நேற்று மரணமானார்.

சாந்தன் ஒரு நாடகக்

பக்கம் 18

# இது 'சிங்களவர் தேசம்' என்றால் இங்கு 'தமிழர் தேசமும்' இருக்கும்

## கொழும்பு பல்கலையில் சுமந்திரன் ஆணித்தரம்



கொழும்பு,பெப்.27

இலங்கைத் தீவில் சிங்கள, பௌத்த தேசம் என்ற ஒன்றுக்கு மேன்மையான, உயர்ந்த, தனித்துவமான இடம் வழங்கப்பட வேண்டும் என்று இந்த நாட்டின் பெரும்பான்மையினர் தொடர்ந்தும் வலியுறுத்துவார்களேயானால், இங்கு பக்கம் பக்கமாகத் தமிழர் தேசமும் இருக்கும். அந்த எண்ணக்கருவை - கருத்துநிலைப்பாட்டை - தமிழர்கள் கைவிட முடியாத நிலையே ஏற்படும்.

- இப்படி தென்னிலங்கைக்குத் திட்டவட்டமாகவும் ஆணித்தரமாகவும் எடுத்துரைத்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

பக்கம் 16

# உலக வங்கியின் பணிப்பாளர் தலைமைக் குழு இலங்கைக்கு!

கொழும்பு, பெப்.27

இலங்கையின் பொருளாதார நிலை மற்றும் நிதிச் சந்தை தொடர்பில் ஆராய்வதற்காக உலக வங்கியின் பணிப்பாளர் கிறிஸ்டீனா லெகார்டி தலைமையிலான உயர்மட்டக் குழு மார்ச் முதல் வாரத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது என்று அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

1.5 பில்லியன் அமெரிக்க டொலரை இலங்கைக்குக் கடனாக வழங்க சர்வதேச நாணய நிதியம் கடந்த வருடம் ஜூலை மாதம் இணங்கியிருந்தது.

கட்டம் கட்டமாக இந்த நிதியை வழங்குவதாகவும் அறிவித்திருந்தது. அதன்படி முதல் கட்டமாக 325 மில்லியன் அமெரிக்க டொலரை சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கியது.

இதன் அடுத்த கட்டமாக 162.5 மில்லியன் நிதி இலங்கைக்கு வழங்கப்படவுள்ளது. மூன்று வருட காலப் பகுதிக்குள் இந்த நிதியானது வழங்கப்படும் என்று சர்வதேச நாணய நிதியம் முன்னதாக இலங்கைக்கு உறுதியளித்திருந்தது.

இந்த நிலையிலேயே, இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் நிதிச் சந்தை தொடர்பில் ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்டக் குழு விஜயம் செய்யவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# 9 லட்சம் பேருக்கு வறட்சி நிவாரணம்

## அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தகவல்



கொழும்பு, பெப்.27

இலங்கையில் 16 மாவட்டங்களில் 9 லட்சம் பேர் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது. இவர்களுக்கான வறட்சி நிவாரணங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வறட்சி காரணமாக விவசாயநிலங்களும் அழிவடைந்துள்ள நிலையில், அதனை மதிப்பீடு செய்யும் நடவடிக்கை பிரதேச செயலக மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரிய தர்ஷன யாப்பா கூறியுள்ளார்.

மார்ச் மாதத்தில் இருந்து நான்கு மாதங்களுக்கு விவசாய செய்கை அழிவடைந்தகாணிகளின் உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏக்கர் ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்கப்படும் அதேவேளை ஏனைய தானியச் செய்கையில் ஈடுபட்டோருக்கும் இழப்பீடு வழங்கப்படவுள்ளது என்றும் விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை கூறியுள்ளது.

இதன் பிரகாரம் 16 மாவட்டங்களின் 103 பிரதேச செயலர் பிரிவுகளில் 2 லட்சத்து 28 ஆயிரத்து 906 குடும்பங்களைச் சேர்ந்த 8 லட்சத்து 99 ஆயிரத்து 235 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, புத்தளம், களுத்துறை, கம்பஹா, அம்பாந்தோட்டை, மொனராகலை, அனுராதபுரம், கேகாலை, குருநாகல், கண்டி மாத்தளை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களேவறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடி தண்ணீரை வழங்குவதற்கென ஏற்கனவே 50 மில்லியன் ரூபா நிதியை நிதி அமைச்சு ஒதுக்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஐ.நாவிடம் கால அவகாசம் கோரிய மகஜரில் குளறுபடி!

## தாங்கள் கையொப்பமிடவில்லை என்கின்றனர் பலரும் தகவல்!!

இலங்கைக்கு ஐ.நாவின் கால அவகாசம் வழங்கக் கோரி அனுப்பப்பட்ட மகஜரில் கையெழுத்திட்டோரது முழுமையான விவரம் வெளியாகியுள்ள நிலையில், அந்த மகஜரில் உள்ள ஒப்பங்களில் குளறுபடிகள் இடம்பெற்றுள்ளன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதில் ஒப்பமிட்டனர் என்று தெரிவிக்கப்பட்ட பலர் அவ்வாறு தாம் ஒப்பமிடவில்லை என்று தெரிவித்துள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவந்துள்ளதாவது:-

மன்னார் பிரஜைகள் குழு தலைவர் அருட்தந்தை சூ.செபமாலை தாம் அந்த மகஜரில் கையெழுத்திடவில்லை என்று முற்றாக மறுத்துள்ளார். ஒப்பமிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள பலர் மனித உரிமைகள் ஆர்வலர்கள். அரசுக்கு எதிராக பல போராட்டங்களை முன்னெடுத்தவர்கள்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவர் அரிகரன் சுப்பிரமணியவேல் இலங்கை அரசுக்கு மேலதிகமாக கால அவகாசம் வழங்க வேண்டும் என்று இலங்கையில் இருந்து வழங்கப்பட்ட அறிக்கையில் தனது பெயரும் இணைக்கப்பட்டுள்ளது என்றும் அது தனது அனுமதி இல்லாமல் இணைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். அதற்கு தான் காரணம் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது ஐ.நாவின் செயற்றிட்டங்கள் மூடப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் மக்கள் பாதிப்படைவார்கள் என்ற நோக்கில் இவ்வாறு கூறியிருந்தார் என்றும் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

முற்போக்கு தமிழ் தேசிய கட்சி வடக்கில் நடாத்தும்

மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

(Over Game / Step Up Game)

- முதல் பரிசு ரூபா 30,000
- 2ம் பரிசு ரூபா 20,000
- 3ம் ஆறுதல் பரிசு
- 4ம் ஆறுதல் பரிசு

5 விளையாட்டு வீரர்கள் 3 சுற்று (Over Game)
கால் இறுதி சுற்று 5, இறுதி சுற்று 5
ஒரு உதை மட்டுமே (One Shot Game)

6 விளையாட்டு வீரர்கள் 3 சுற்று (Step Up Game)
கால் இறுதி சுற்று 5, இறுதி சுற்று 5

● போட்டிக் கட்டணம் இலவசம் ● முடிவு திகதி :-10.03.2017

அணிகள் தொடர்புகொள்ள :-

தலைமை அலுவலகம் வடக்கு மாகாணம் :- 0213200716,717
கிளின்ரன் :- 0770393384
மொறைஸ் :- 0775427375
பூலோகராஜா :- 0770489549

நடுவரின் தீர்ப்பே இறுதியானது

மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி

- முதல் பரிசு ரூபா 30,000
- 2ம் பரிசு ரூபா 20,000
- 3ம் ஆறுதல் பரிசு
- 4ம் ஆறுதல் பரிசு

7 விளையாட்டு வீரர்கள் 6 பந்து பரிமாற்றம்

● போட்டிக் கட்டணம் இலவசம் ● முடிவு திகதி :-10.03.2017

அணிகள் தொடர்புகொள்ள :-

தலைமை அலுவலகம் வடக்கு மாகாணம் :- 0213200716,717
மாதவன் :- 0770781437
முல்லைத்தீவு (திவாகர்) :- 0763884038
கிளிநொச்சி (பூலோகராஜா) :- 0770489549



நடுவரின் தீர்ப்பே இறுதியானது

தகவல் :- முற்போக்கு தமிழ் தேசிய கட்சி விளையாட்டுப் பிரிவு
இல.46 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

## காணாமற்போனோரின் உறவினருக்கு ஆதரவாக

# பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி வவுனியா போராட்டத்தில் பங்கேற்பு



வவுனியா, பெப்.27

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டத்தில், தென்னிலங்கையில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் என்னெலிகொடவில் மனைவி சந்தியா எக்னெலிகொட நேற்று கலந்துகொண்டார்.

மேற்படி காணாமற்போனோரின் உறவினர்கள் வவுனியாவில் கடந்த வெள்ளிக் கிழமை ஆரம்பித்த உணவு தவிர்ப்பு போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்து இடம் பெற்றது.

இந்த நிலையில், தென்னிலங்கையில் இருந்து நேற்று போராட்ட இடத்திற்கு வருகை தந்த சிங்கள, முஸ்லிம் மக்கள் சிலர் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்களுடன் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவியும் வருகை தந்து வவுனியாவில் காணாமற்போனோரின் உறவினர்களுக்கு தமது ஆதரவை வெளியிட்டமையுடன் போராட்டத்திலும் ஈடுபட்டார். (ம-100)

## கீரிமலை முத்துமாரிக்கு மகோற்சவம் ஆரம்பம்

கீரிமலை ஸ்ரீ மகா முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை மாசி மக தீர்த்த உற்சவமும் நடைபெறும். 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பூங்காவனமும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை கப்பல் திருவிழாவும் நடைபெறும். (ம)

## மன்னாரிலும் போராட்டம்

மன்னார், பெப்.27

கேப்பாபிலவு காணி மீட்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும், மன்னார் - முள்ளிக்குளம் கிராம மக்களின் காணி அபகரிப்புக்கும் எதிராகவும் மன்னார் மாவட்ட மக்கள் இன்று கண்டனப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர்.

இந்தப் பேரணி இன்று முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை முருங்கன் பேருந்து நிலையத்திற்கு முன்பாக இடம் பெறவுள்ளது. (ம-81)

## கேப்பாபிலவில் போராடும் மக்களுக்கு நேற்று நடமாடும் மருத்துவ சேவை



முல்லைத்தீவு, பெப்.27

கேப்பாபிலவு பிலக்குடியிருப்பில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்கள் நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு நேற்று நடமாடும் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

தொடர்ந்து 27 நாள்கள் பகலில் வெயில், இரவில் கடும் பனிக்கு மத்தியிலும் போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் நோய்த் தாக்கங்களுக்கு ஆளாகியுள்ளனர். குறிப்பாக, சிறுவர்கள், முதியோர் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் நன்மை கருதி முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் ஏற்பாட்டில் நேற்று நடமாடும் மருத்துவ சேவை நடத்தப்பட்டது. (ம-81)

## முல்லையில் போராடும் மக்களுக்கு அம்பாறை செய்தியாளர்கள் ஆதரவு



தமது காணிகளை விடுவிக்கக் கோரி போராட்டத்தில் ஈடுபடும் கேப்பாபிலவு மற்றும் புதுக்குடியிருப்பு மக்களுக்கு அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் தமது ஆதரவை வெளியிட்டுள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவுக்கு வருகைதந்த அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் குழுவினர் போராட்டத்தில் ஈடுபடும் மக்களுடன் கலந்துரையாடினர்.

மக்களுக்காக தாங்களும் குரல் கொடுப்பார்கள் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (ம-81)

# மக்களின் போராட்டம் தொடர்பில் தமிழ் மக்கள் பேரவை ஆராய்வு

## நாளை அவசர கலந்துரையாடலுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம் பெப்.27

முல்லைத்தீவு பிலக்குடியிருப்பு மற்றும் புதுக்குடியிருப்பு மக்களின் போராட்டத்தை வலுப்படுத்தல் தொடர்பான அவசர கலந்துரையாடலுக்கு தமிழ் மக்கள் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

இந்தக் கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு பலாலி வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள சேவாலங்கா நிறுவன கேட்போர்கூடத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழ் மக்கள் பேரவை நேற்று விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

நில ஆக்கிரமிப்புக்கெதிரான குறியீட்டு வடிவமாக மாறியுள்ள கேப்பாபிலவு, பிலக்குடியிருப்பு மற்றும் புதுக்குடியிருப்பு மக்களின் போராட்டம் ஒரு மாதத்தை எட்டியுள்ளது.

அந்த மக்கள் தமது கொள்கையில் மிகத்தெளிவாகவும் உறுதியாகவும் சுய எழுச்சியுடன் முன்னெடுத்துள்ள இந்த நியாயமான போராட்டத்துக்கு ஆதரவு வழங்கி மேலும் மக்கள் மயப்படுத்த வேண்டியது நம் அனைவரினதும் கடமையாகும்.

இது தொடர்பாகத் தமிழர் தாயகப்பகுதிகளில் நாம் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கு மக்கள் அமைப்புகளுடன் கலந்துரையாடத் தீர்மானித்துள்ளோம்.

இந்தக் கலந்துரையாடலுக்கு அனைத்துபொது அமைப்புகள், தொழிற்சங்கங்கள் மற்றும் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-81)

# வவு. வளாகத்தை பல்கலைக்கழகமாக தரமுயர்த்த கோரி நாளை போராட்டம்

## அனைத்து தரப்பினரையும் இணையுமாறு அழைப்பு

வவுனியா, பெப்.27

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தை வன்னிப் பல்கலைக்கழகமாக தரமுயர்த்தக் கோரி நாளை வவுனியாவில் இடம்பெறவுள்ள போராட்டத்தில் அனைத்து தரப்பினரும் கலந்துகொண்டு ஆதரவு வழங்க வேண்டும் என வடமாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கில் இன்னுமொரு பல்கலைக்கழகம் உருவாகுவது எமது இளம் சந்ததியினரை சிறந்த புத்திஜீவிகளாக உருவாக்குவதற்கு பெரும் பங்களிப்பை வழங்கும்.

எமது எதிர்கால சந்ததி பல்கலைக்கழகத்தில் படித்து பட்டம் பெற்று உலகிற்கு எடுத்துக்காட்டாகத் திகழவேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பும் ஆகும்.

எனவே, வவுனியா வளாகத்தை பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தக் கோரி நாளை முற்பகல் 10 மணியளவில் வவுனியா குருமன்காட்டில் இருந்து ஆரம்பமாகும் பேரணியில் கல்விச்சமூகத்தினர், பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள், பொது அமைப்புகள், தொழிற்சங்கங்கள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், பெண்கள் அமைப்பினர் என அனைவரும் அணிதிரண்டு ஆதரவு வழங்குங்கள். - என அவர்கள் கோரியுள்ளனர். (மேலும் ஒரு செய்தி 13ஆம் பக்கத்தில்)

(ம-70,81)

# நியாய விலையில் பொருள்களைப் பெற்றுத் தர அரச அதிபரைக் கோருகிறது யாழ்.ப.நோ.கூ. சங்கம்

யாழ்ப்பாணம், பெப்.27

கூட்டுறவுச் சங்கத்தின் மொத்தக் களஞ்சியத்தின் விற்பனைக்குத் தேவையான அத்தியாவசிப் பொருள்களை நியாய விலையில் பெற்றுத் தருவதற்கு யாழ். அரச அதிபர் நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

- இவ்வாறு யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் மு.ஜெ.சுஜீந்திரன் அரச அதிபருக்கு அனுப்பிவைத்துள்ள சடிதம் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

அரசாங்கம் அத்தியாவசிய உணவுப்பொருள்களான அரிசி வகைகள்; சீனி, பருப்பு மற்றும் பயறு போன்ற பொருள்களுக்குக் குறைந்தபட்ச சில்லறை விலை நிர்ணயம் செய்துள்ளது. அதன் பிரகாரம் சீனி ஒரு கிலோ ரூபா 93/- க்கும், இறக்குமதி செய்யப்படும் அரிசி வகைகளில் நாட்டரிசி கிலோ ஒன்று 72/- க்கும், சம்பா அரிசி கிலோ ஒன்று 80/- க்கும், வெள்ளைப் பச்சை அரிசி கிலோ ஒன்று 70/- க்கும் விற்பனை செய்யப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டது. இவ்விலைக் குறைப்பால் நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியது.

ஆனால், எமது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமானது அத்தியாவசியப் பொருட்களைக் கொழும்பு மாவட்டத்திலுள்ள மொத்த வியாபாரிகளிடமும், யாழ். மாவட்டத்திலுள்ள மொத்த வியாரிகளிடமும் கொள்வனவு செய்தே சங்கத்தின் நுகர்ச்சிக் கிளைநிலையங்களுக்கு ஊடாக விற்பனை செய்து வருகின்றது.

எமது சங்கத்தின் மொத்தக் களஞ்சியத்தின் விற்பனைத் தேவைக்குத் தேவையான நுகர்ச்சிப் பொருட்களை நியாய விலையில் - அரச நிர்ணய விலையில் - தாராளமானதாகத் தாங்களோ (தங்களின் அரச மொத்தக் களஞ்சியத்தின் ஊடாக) அல்லது அரச கூட்டுறவு மொத்த விற்பனை நிலையமோ (சதோசா) வழங்க நடவடிக்கை எடுப்பதில்லை.

இதனால், நாம் தனியார் மொத்த வியாபாரிகளிடமே அவர்கள் தரும் விலைக்குப் பொருட்களைக் கொள்வனவு செய்து எமது அங்கத்தவர்கள் மற்றும் பயனாளிகளுக்கு, மக்களுக்குப் பொருள்களை வழங்க வேண்டிய கட்டாய சூழலில் உள்ளோம்.

அத்துடன், அரசால் விலை நிர்ணயம் செய்யப்படும்போது சங்கங்கள் நுகர்ச்சிக் கிளை நிலையங்களில் உள்ள பொருள்களுக்கு விலைக் குறைப்புச் செய்து பாவனையாளருக்கு விற்பனை செய்கின்றன. உடனும் விலை குறைப்புச் செய்யாமல் கொள்வனவு செய்த பொருள்களின் இருப்பு முடியும் வரை பழைய விலைக்கு விற்பனை செய்யும் சங்கங்களுக்கு மட்டுமே பல அரச தரப்பினரால் குற்றங்கள் சுமத்தப்பட்டு, நீதிமன்றங்களில் தண்டமும் அறவீடு செய்யப்படுகின்றன.

ஆனால், வெளி வியாபாரிகளுக்கு இதில் சிக்கிக் கொள்ளும் வாய்ப்பு மிகக் குறைவு. காரணம் சிட்டையிட்டுப் பொருள்கள் வழங்கும் நடைமுறை. சங்கங்களுக்கு ஏற்படும் நிதி இழப்பும் வியாபாரத்தைத் தொடர்வதற்கு ஓர் குழப்ப நிலையினையும் ஏற்படுத்துவதால் சங்கத்தின் முன்னேற்றத்திற்குப் பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது.

மேலும், விலை நிர்ணயிக்கும் போது, அப்பொருட்களைச் சங்கங்கள் வெளிச் சந்தையில் உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடிந்தால், அவற்றைப் பெற்று நுகர்வோருக்கு, அரசு நிர்ணயித்த விலையில் பொருட்களை வழங்க முடியும். ஆனால், உடனடியாக அப்பொருள்களை வெளிச்சந்தையில் அப்படிப் பெற்றுக் கொள்ள முடிவதில்லை.

இவற்றைத் தங்கள் கருத்தில் கொண்டு சங்கங்கள் நுகர்வோருக்குத் தடையின்றி, தட்டுப்பாடு இன்றி, கறுப்புச் சந்தை உருவாகாமல் பொருள்கள் விநியோகிப்பதற்கு ஏற்ற தங்களின் ஆலோசனையினையும், ஏற்ற [illegible] நடவடிக்கையினையும் [illegible] உதவுமாறு தங்களை [illegible] கேட்டுக் கொள்கிறேன். - [illegible]றுள்ளது. (ம)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## தமிழ்த் தேசமும் சிங்களத் தேசமும்

தென்னிலங்கை சிங்களப் பெரும்பான்மை மக்களின் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் முக்கிய விடயம் ஒன்றை ஆணித்தரமாக முன்வைத்திருக்கின்றார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் அது மிக மிக முக்கியமானதாகும்.

தமிழ்த் தேசம், தமிழ்த் தேசியம் என்பவை குறித்தெல்லாம் தமிழ் மக்கள் மத்தியில் நின்று கொண்டு முழங்குபவர்கள், தென்னிலங்கையில் போய் நின்று கொண்டு அதுவும் - பழுத்த சிங்கள, பௌத்த பேரினவாத சிந்தனை கொண்ட மக்கள் கூட்டத்துக்கு மத்தியில் நின்று கொண்டு - சுமந்திரன் புரிந்த கர்ஜனையையும், சற்றுக் கவனிக்கத்தான் வேண்டும்.

தீர்வுக்கான முயற்சியில் சம்பந்தப்பட்ட இரு தரப்புகளுக்கும் இடையில் சமரசம் செய்வோர் விநோதமான ஒரு பண்பியலைக் கொண்டிருப்பது அவசியமானதாகும்.

அது, இரண்டு தரப்புகளிடமும் பேசும்போதும் எதிர் எதிர்த் தரப்புகளிடம் உள்ள நியாயத்தை எடுத்துரைப்பதாகும். அதன் மூலம்தான் இரண்டு தரப்புக்களையும் ஒன்று மற்றைய தரப்பின் நியாயத்தைப் புரிந்து கொண்டு இணக்கத்துக்கு வர வழிசமைக்க முடியும்.

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் தீர்வுக்கான அமைதி முயற்சிகளில் - சமாதான எத்தனங்களில் - ஈடுபடும் பெரும் பொறுப்பு இன்றைய நிலையில் சுமந்திரனிடமே ஒப்படைக்கப் பட்டிருக்கின்றது.

ஆகவே, இனவாதத்தை ஏற்படுத்தும் முயற்சியில் அவர் மேற்படி தந்திரோபாயத்தைப் பின்பற்ற வேண்டியவராக இருக்கின்றார் என்பதும் நியாயமே.

தமிழர்களிடம் வந்து சிங்களவர் பக்க நிலைப்பாட்டைக் கூறுவதும், சிங்களத் தலைமையிடம் போய் தமிழர் பக்க நியாயங்களை வலியுறுத்துவதும் இணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிக்கான நல்ல தந்திரோபாயம்தான்.

ஆனால், அது இரண்டு தரப்பிலுமே அவருக்குக் கெட்ட பெயரைத்தான் வாங்கிக் கொடுக்கும். இவர் என்ன தமக்கு மாற்றான தரப்பின் நியாயத்தை விளக்குகின்றாரோ என்று இரு தரப்புக்களுமே அவர் மீது கோபம் கொள்ளும். அதுதான் இப்போது நடக்கின்றது போலும்.

தமிழர் தரப்பிடம் வந்து சிங்களவர் பக்க நிலைப்பாட்டை எடுத்துரைக்கும்போது தமிழர்கள், இவர் சிங்களவருக்கு விலை போய்விட்டார் என்று வைவார்கள்.

சிங்களத் தலைமையிடம் போய் தமிழர் பக்க நியாயத்தை உறுதியுடன் கூறும்போது, சிங்களத் தலைவர்களினால் தமிழ்த் தேசியவாதி என்றும், தமிழ்த் தேசிய தீவிரப் போக்கு உடையவர் என்றும் அவர் விமர்சிக்கப்படுவார். அது இயல்பானதே.

கடந்த வாரம், கொழும்பு பல்கலைக்கழகத்தில் சிங்களப் பீட மாணவர்கள் மத்தியில் சிறப்புரையாற்றிய அவர், "இந்தத் தீவில் பௌத்த சிங்கள தேசம் என்று ஒன்று தனியாக நிலை நிறுத்தப்பட்டிருப்பதாக நீங்கள் தொடர்ந்து கருதுவீர்களானால், அதற்கு சமானமானதாக, அதே பாரம்பரிய மரபுரிமை வம்சாவழியுடன் தமிழர் தேசமும் இங்கு நிலை நிறுத்தப்பட்டிருக்கின்றது என்பதும் வலியுறுத்தப்படும். அதை மறந்து விடாதீர்கள். இந்தத் தீவில் சிங்கள பௌத்த தேசம் இருக்குமானால் அதற்குப் பக்கத்தே தமிழர் தேசமும் உள்ளது." - என்று ஆணித்தரமாக - அடித்துக் கூறியிருக்கின்றார் அவர்.

1970 களில் இருந்து தமிழர் தரப்பு வலியுறுத்தும் இறைமை, தாயகம், தேசியம் குறித்தெல்லாம் தமிழ் மக்கள் மத்தியில் நின்று விடாது பேசியபடி - குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டுவது போல கருத்துக் கூறியபடி - அரசியல் நடத்தும் நமது சில தலைவர்களின்றும் இந்த விடயத்தில் சுமந்திரன் வேறுபடுகின்றார்.

இந்த விடயங்களை மீண்டும் மீண்டும் தமிழர்கள் மத்தியில் கூறி, அவர்களை உசுப்பேற்றி, அதன்மூலம் தனது தனிப்பட்ட ஆதரவைத் திரட்டுவதை விடவும், அந்த விடயங்களைத் தென்னிலங்கை பௌத்த, சிங்களப் பேரினவாதத் தரப்பிடம் ஆணித்தரமாக எடுத்துரைப்பது பயன்தரவல்லது என்று கருதி செயற்படுகின்றார் போலும் சுமந்திரன்.

1926 இல், 1931 இல், 1934 இல், 1946 இல் எல்லாம் தமிழர் மத்தியில் சமஷ்டி குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது. ஆனால், அப்போதெல்லாம் தமிழர்கள் அதனைப் பொருட்டாகவே மதிக்கவில்லை.

1949 இல் சமஷ்டிக் கட்சி (இலங்கைத் தமிழரசுக் கட்சி) பிறந்தது. அதனைத் தமிழர் ஆதரித்தனர். சமஷ்டி வேண்டும் என்றனர். ஆனால், தமிழ் மக்கள் அச்சமயத்திலும் தங்களின் தேசம் பற்றியோ, அதன் இறைமை பற்றியோ பேசவேயில்லை.

தமது மரபு ரீதியான தேசத்தை, தாம் பேணிவந்த இறைமையை, மீட்டெடுப்பது என்ற சிந்தனையை தனிச் சிங்களச் சட்டம் மற்றும் பௌத்தத்துக்கும் சிங்களத்துக்கும் மேன்மை ஸ்தானம் வழங்கும் குடியரசு அரசமைப்பு ஆகியவற்றைக் கொண்டு வந்ததன் மூலம் சிங்கள தேசம்தான் தமிழர்களுக்கு நினைவூட்டி உசுப்பேற்றி, உருவாக்கியது என்ற சரித்திர உண்மையையும் சுமந்திரன் சிங்கள பௌத்தர்களிடமே நேரில் தெரிவித்திருக்கின்றார்.


அவர் கூறுகின்றமை போல, இந்தத் தீவில் பௌத்த, சிங்கள தேசம் என்ற ஒன்று இருக்குமானால், அதற்குப் பக்கத்தில் - அதற்குச் சமானமான - அதே தொன்மையும் நீண்ட வரலாறும் கொண்டதான தமிழர் தேசமும் இருந்தே தீரும்.

தென்னிலங்கைப் பெரும்பான்மையினருக்கு இது புரிந்தால் சரி.




## அரச, தனியார் பட்டப்படிப்புகள் தொடர்பில் தரப்படுத்தலை மேற்கொள்ள புதிய சட்டம்

### விரைவில் அறிமுகமாகும் என்கிறார் உயர் கல்வி அமைச்சர்



கொழும்பு, பெப்.27

தனியார்துறை நிறுவனங்களில் வழங்கப்படும் உயர் கல்வி தொடர்பில் சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களால் வழங்கப்படும் பட்டப் படிப்புகள் தொடர்பில் தரப் படுத்தலை மேற்கொள்ள புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உலக வங்கி உதவியுடன் தயாரிக்கப்பட்டு வரும் இந்தப் புதிய சட்டமூலம் இன்னும் இரு மாதங்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், புதிய சட்ட மூலத்தின் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சட்டத்துக்கு அமையவும் மற்றும் அரச பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களின் ஆலோசனைகளுக்கு அமைவாகவும் இந்தச் சட்டமூலம் உருவாக்கப்படுகின்றது.

இந்தச் சட்டமூலம் சைட்டம் கல்லூரியால் வழங்கப்படும் மருத்துவக் கல்விக்கும் உட்பட்டதாக இருக்கும்.

நாட்டில் எண்ணில் அடங்காத பட்டப்படிப்புக்களை வழங்கும் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. குறிப்பாக 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் தலைமைத்துவத்துக்கான பட்டப் படிப்புகளை தனியார் நிறுவனங்களில் பயின்று வருகின்றனர்.

எனவே அவர்களின் கல்வித் தரத்தை உத்தரவாதப்படுத்தும் வகையில் இந்தப் புதிய சட்ட மூலம் கொண்டு வரப்பட உள்ளது.- என்றார். (எ)

## அரசமைப்பு மாற்றம் தேவையில்லை; சீர்திருத்தம் செய்தால் போதும்!

### அதற்கு ஜனாதிபதி அதிகாரங்களைக் கையில் எடுக்க வேண்டும்



**டிலான் பெரேரா கூறுகிறார்**

கொழும்பு, பெப்.27

இலங்கைக்கு அரசமைப்பு சீர்திருத்தமே அவசியம். அதனை விடுத்து அரசமைப்பு மாற்றம் தேவையில்லை. இதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிகாரங்களைக் கையில்எடுக்க வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஹாலிஎல பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய கட்சியின் பேச்சாளரான இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

இணக்க அரசியல் பொது மக்கள், அரசியல்வாதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் என சகல தரப்பினருக்கும் புதியதே. இந்த நிலையில் புதியது புதியது என்று கூறிக்கொண்டு சில இடங்களில் சிக்கல்களுக்கு இலக்காக நேரிடுகின்றது. சில நேரங்களில் நல்ல விடயங்கள் இடம்பெற்ற சம்பவங்களும் உள்ளன.

எவ்வாறாயினும் இரண்டு வருடங்கள் முடிந்த பின்னரே இந்தக் கூட்டு அரசு தொடர்பான அடுத்தக் கட்டம் தொடர்பாக தீர்மானிக்கப்படும்.

எவ்வாறாயினும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் அரசமைப்புத் திருத்தத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். நடவடிக்கைகளைத் துரிதப் படுத்தினாலே இது முடியும்.

இதனை மேற்கொள்ள வேண்டும் என்றால் ஜனாதிபதி அதிகாரத்தைக் கையில் எடுக்க வேண்டும். பல்வேறு தரப்பினர் அதனைச் செய்ய வேண்டும். இதன்படி நாமும் அவர் அதிகாரத்தைக் கையில் எடுக்க வேண்டும் என்றே கூறுகின்றோம்.

அதிகாரத்தைக் கையில் எடுத்து, வேண்டுமென்றால் அமைச்சரவையையும் மாற்றி அமைக்கலாம். இதற்கிணங்க ஜனாதிபதி அதிகாரத்தைக் கையில் எடுத்து செயற்படுவார் என்று கருதுகின்றோம். -என்றார். (எ)

**நாளை**
28.02.2017
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம் : உத்தரட்டாதி பி.இ 6.28 வரை
திதி : துதிகை 6.58 வரை
சுபநேரம் : 10.58 - 12.28 வரை
இராகுகாலம் : 3.28 - 4.58 வரை




முல்லைத்தீவு கேப்பாபிலவு மக்களின் நில மீட்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து கவனவீர்ப் புப் போராட்டம் நேற்று மல்லாகம் பழம் பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக இடம்பெற்றபோது... (ஐ)





முல்லைத்தீவு கேப்பாபிலவு மக்களின் நில மீட்பு போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து உரும்பிராயில் நேற்று இடம்பெற்ற கவனவீர்ப்பு நிகழ்வின் போது....

## விளையாட்டுக் கழக திறப்பு விழா

யாழ்ப்பாணம்,பெப்.27

பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நிர்மாணிக்கப்பட்ட கழகத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறும்.

யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின்பேர்ணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை இதனைத் திறந்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினராக வடமாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்வார்.

திறப்பு விழாவைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் மற்றும் கௌரவிப்பு நிகழ்வு என்பன இடம்பெறும். (ச)

## ஐ.தே.கட்சியைப் பலப்படுத்தும் நடவடிக்கையை தெளிவுபடுத்துங்கள்

### சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு ரணில் காலக்கெடு

கொழும்பு, பெப்.27

அரசின் நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியைப் பலப்படுத்தும் நடவடிக்கைகள் குறித்துத் தெளிவுபடுத்துமாறு அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு இன்றுவரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க காலக்கெடு விதித்துள்ளார்.

அத்துடன், இந்த வருடத்தில் கட்சியாக இருந்து முன்னெடுக்க வேண்டிய செயற்றிட்டங்கள் தொடர்பிலும் அறிவிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

அமைச்சர் மலிக் சமரவிக்ரம, உதவிச் செயலாளர் ருவன் விஜேவர்தன, மகளிர் பிரிவுத் தலைவி அனோமா கமகே, இளைஞர் முன்னணியின் தலைவர் அகிலவிராஜ் காரியவசம், தொழில் நுட்பப் பிரிவு பணிப்பாளர் சுதத் சந்திரசேகர ஆகியோரிடமே பிரதமர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இதேவேளை, அம்பாந்தோட்டை துறைமுகத்தின் நிர்மாணப் பணிகளுக்



காகப் பெற்ற கடன் தொகையில் 80 வீதத்தை இந்த வருடத்தில் செலுத்தி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சீனாவுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை இதற்கு உதவியது.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் அபிவிருத்தியடையும் போது தெற்குக்கான சுற்றுலாத்துறையும் அபிவிருத்தியடையும் என்று பிரதமர் ரணில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## இலங்கை தொடர்பான தீர்மானங்களை நடைமுறைப்படுத்த நேர அட்டவணை

### சமர்ப்பிக்கக் கோருகிறது கண்காணிப்பகம்

கொழும்பு, பெப்.27

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நேர அட்டவணை ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று மனித உரிமைகள் கண் காணிப்பகம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையால் இலங்கை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்துக்கு இலங்கையும் இணை அனுசரணையும் வழங்கியிருந்தது.

எனினும் தீர்மானத்தில் செய்யப்பட்டுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா? என்பது தொடர்பில் ஆராயும் பொது கால அட்டவணையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

25 முக்கிய விடயங்கள் தொடர்பில் பரிந்துரை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சத்திர சிகிச்சை செய்த நோயாளியுடன் வைத்தியர் நேரம் செலவிட வேண்டும்

### அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

கொழும்பு, பெப்.27

சத்திர சிகிச்சையின் பின்னர், வைத்தியர் நோயாளியுடன் ஒரு மணி நேரத்தைச் செலவிட வேண்டும் என்று சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவத் துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

எத்தகைய தனியார் வைத்தியசாலைகளிலும் நோயாளர்கள் தொடர்பான வைத்திய பரிசோதனைகளின் போது வைத்தியர் ஒருவர் நோயாளியை 10 நிமிடங்கள் பரிசோதனை செய்ய வேண்டும். தற்போது இந்தச் சட்டம் நடைமுறையில் உள்ளது.

நோயாளிடம் இருந்து 2 ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத தொகையே



அறவிடப்படவேண்டும். விசேடமாக அரச விஷேட வைத்திய நிபுணர்களுக்காக இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் நோயாளர்களின் உரிமை மற்றும் வைத்தியர்களின் சேவை தொடர்பில் கூடுதலாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நோயாளர்களின் உரிமைக்காக எதிர் காலத்தில் மேலும் பல சட்டங்களைக் கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அதிகாரத்துக்குவரும் அரசு பொதுமக்களின் சுகதுக்கங்களைக் கவனிக்கவில்லை என்றால் மக்கள் ஆட்சிக்கு எதிராக கிளர்ந்தெழ வேண்டும்.

மக்கள் நாட்டின் அரசை அமைக்கின்றார்கள். அவ்வாறு அமைக்கப்படும் அரசு மக்களின் நலன்களின் அக்கறை செலுத்த வேண்டும்.

அவ்வாறு இல்லையேல் மக்கள் அரசுக்கு எதிராகப் போராடுவார்கள்.

இல்லையேல் அடுத்த சந்ததியினர் அரசமைப்புக்கு எதிராகவே கிளர்ந்தெழுவார்கள் .- என்றார். (ஐ)


## மணமக்கள் விபரம்

☎ 0777164524
திங் - வெள் : 08.30 a.m - 05.00 p.m
சனி : 08.30 a.m - 02.00 pm

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
|---|---|
| **7134 \| வே**<br>1977 \| கைதடி \| 170 cm<br>Development Office \| இலங்கை<br>அவிட்டம் (மகரம்) \|கி.பா: 30\|செவ்: 4 | **5668 \| வே**<br>1984 \| உரும்பிராய் \| Divorced<br>Teacher \| இலங்கை \| 170 cm<br>ரேவதி (மீனம்) \| கி.பா: 13\| செவ்: 2 |
| **6336 \| கோ**<br>1982 \| யாழ்நகர் \|167 cm<br>Electrician \| இலங்கை<br>அனுஷம் (விருச்சிகம்) \|கி.பா: 3\|செவ்: 1 | **4407 \| வே**<br>1985 \| நீர்வேலி \| 163 cm<br>Development Officer \| இலங்கை<br>கார்த்திகை (ரிஷபம்) \| கி.பா: 61 \|செவ்:7 |
| **4603 \| வே**<br>1983\| யாழ்நகர் \|165 cm<br>Assistant Manager \|இலங்கை\|கி.பா: 29<br>அனுஷம் (விருச்சிகம்) \| சூரி.செவ்: 3 | **5599 \| வே**<br>1985 \| மயிலிட்டி \| 160 cm<br>Private Bank \| இலங்கை<br>பூரட்டாதி (கும்பம்) \| கி.பா:37 \| செவ்: 1 |
| **6290 \| கு**<br>1983 \| பருத்தித்துறை \| 165 cm<br>Clerk \| இலங்கை<br>மகம் (சிம்மம்) \|கி.பா: 16\|செவ்: 12 | **5872 \| வ**<br>1986 \| கிளிநொச்சி \| 152 cm<br>Nurse \| இலங்கை<br>புனர்பூசம் (மிதுனம்)\|கி.பா: 28\|செவ்: 4 |
| **5956 \| ந**<br>1984 \| அளவெட்டி \| 167 cm<br>Driver \| இலங்கை<br>சுவாதி (துலாம்) \| கிறிஸ்தவம் | **4549 \| வே**<br>1986 \| மானிப்பாய் \|150 cm<br>Computerized Book Printing \| இலங்கை<br>உத்திரட்டாதி (மீனம்)\| கி.பா: 23\|செவ்: 1 |

அருந்ததி
இணைய திருமண சேவை
www.arunthathee.com
480 /2c, காலி வீதி, வெள்ளவத்தை 011 406 32 82 | 20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் 021 492 75 27

# வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இன்னும் ஒரு லட்சத்து 30 ஆயிரம் வீடுகள் தேவை!

## அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இன்று வீடில்லாமையே பிரதான பிரச்சினையாக இருக்கிறது. யுத்தம் காரணமாக இங்குள்ள வீடுகள் சேதமடைந்தன. இதன் அடிப்படையில்

இந்த மாகாணங்களில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் வீடுகள் தேவையாக உள்ளன.

-இவ்வாறு மீள்குடியேற்ற புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

யுத்தத்தால் பாதிப்புற்றோருக்கான காசோலைகளை வழங்கல் மற்றும் புனர்வாழ்வு அதிகார சபையின் கடன் திட்டத்தின் கீழ், கடன் பெற்றவர்களின் வாழ்வாதார உற்பத்திப் பொருள்கள் கண்காட்சி நிகழ்வில் நேற்றுக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இதனை மூன்றாண்டுகளுக்குள் நிர்மாணிப்பதற்கு, அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அதில் 50 சதவீதமான வீடுகளை 2016 ஆம் மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்க முயன்ற போதிலும், துரதிஷ்டவசமாக அது நடக்கவில்லை அதற்கான நிதியெல்லாம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அது நடக்கவில்லை. இதில் யாரையும் நான் குற்றஞ் சுமத்த முன்வரவில்லை. இதனால் பாதிக்கப்படுவது மக்கள்தான் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

2016 ஆம் ஆண்டு 15 ஆயிரம் வீடுகளும், 2017ஆம் ஆண்டு 25 ஆயிரம் வீடுகளும் நிர்மாணித்திருக்க வேண்டும். அதற்கான திட்டங்களே வகுக்கப்பட்டன. இந்த 50 சதவீதமான வீடுகளை நிர்மாணித்ததன் பின்னர், 2018 ஆம் ஆண்டில் அடுத்த 50 சதவீதமான வீடுகளையும் நிர்மாணிக்கவே, எமது அமைச்சு திட்டமிட்டிருந்தது.

பல்வேறு தடைகள் மற்றும் சவால்களுக்கு மத்தியில் எமது அமைச்சு, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்தவர்களுக்கான நஷ்டஈடுகளை வழங்கி வருகின்றது. எதிர்காலத்திலும் இவ்வாறான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.-என்றார். (ச)

## டெங்குக் காய்ச்சலால் யுவதி உயிரிழப்பு



கிண்ணியா,பெப்.27

கிண்ணியா 4 ஆம் வட்டாரத்தில் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட யுவதி ஒருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு உயிரிழந்தார்.

எம்.ஜே. இப்திசாம் (வயது -20) என்ற யுவதியே உயிரிழந்தவர் ஆவார்.

இவர் காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்திருந்தார். இந்த நிலையிலேயே சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## ஆலய உண்டியலை உடைக்க முயன்றவர் சிக்கினார்!



மட்டக்களப்பு,பெப்.27

மட்டக்களப்பு லூத்து மாதா தேவாலயத்தின் காணிக்கை உண்டியலை உடைத்து திருட முற்பட்ட இளைஞன் ஒருவரை அப்பகுதிப் பொது மக்கள் பிடித்து பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

நேற்று ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது போன்ற திருட்டுச் சம்பவங்கள் ஏற்கனவே இரு தடவைகள் இடம் பெற்றுள்ளன என தேவாலய அருட்தந்தை தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்புப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச)

## அடம்பன பகுதியில் நால்வர் கைது

திருகோணமலை, பெப்.27

திருகோணமலை அடம்பன பகுதியில் கட்டுத்துவக்கு மற்றும் வெடி பொருள்கள் ஆகியனவற்றுடன் பயணித்த மூவரை, நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கோமரங்கடவெலப் பொலிஸார் கைதுசெய்தனர்.

குச்சவெளியைச் சேர்ந்த 18 வயதுடைய இருவரும், 39 வயதுடைய ஒருவருமே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

குச்சவெளிப் பிரதேசத்திலிருந்து ஓட்டோவில் பயணித்த பிரஸ்தாப நபர்களைப் பொலிஸார் நிறுத்திச் சோதனையிட்டபோதே இவர்கள் மூவரும் கைதுசெய்யப்பட்டனர் என கோமரங்கடவெல பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மோட்டார் சைக்கிளில் வந்த அதே இடத்தைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவரைச் சோதனையிட்ட போது, அவரிடமிருந்து 2 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது. (ச)

## போக்குவரத்து வசதியின்மை: சூரங்கல் மக்கள் சிரமம்

சூரங்கல் பகுதியில் போக்குவரத்து வசதி இன்மை காரணமாக இப்பகுதி வாழ் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் இருந்து செல்கின்ற இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ்களை, சூரங்கல் சந்திக்குச் சென்று, அங்குள்ள தூரப் பிரயாணம் செய்யக்கூடிய மக்களை ஏற்றிச் செல்லுமாறு அப்பகுதி வாழ் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீண்டதூர சேவையில் ஈடுபடுகின்ற பஸ்கள், கிண்ணியா துறையடி வீதியினூடாகச் செல்வதால் வான்எல, சூரங்கல் மற்றும் நடு ஊற்று, மணிராசங்குளம், ஆலங்கேணி, குரங்குபாஞ்சான், சுங்கான்குழி, காக்காமுனை, குறிஞ்சாக்கேணி, கச்சக்கொடித்தீவு ஆகிய பிரதேச மக்கள், பல சிரமங்களுக்கும் அசௌகரியங்களுக்கும் முகங்கொடுத்து வருகின்றனர்.

மேற்குறிப்பிட்ட பிரதேசங்களிலிருந்து ஓட்டோவுக்கு 300 ரூபாவை செலுத்தி, கிண்ணியா பிரதான பழைய ஆஸ்பத்திரிச் சந்திக்குச் செல்ல வேண்டிய நிலையுள்ளது என மக்கள் சுட்டிக்காட்டினர்.

இந்த பஸ் சேவையை சூரங்கல் வரையாவது செல்ல, உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

## கோடரி வெட்டுத் தாக்குதல்; முன்னாள் மேயரின் கணவர் கைது!




மட்டக்களப்பு,பெப்.27

மட்டக்களப்பு முன்னாள் மேயர் சிவகீதா பிரபாகரனின் வீட்டில் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை இடம்பெற்ற கோடரி வெட்டுத் தாக்குதல் சம்பவத்தில் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

இந்தச் சம்பவத்தில் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் முன்னாள் மேயரின் கணவர் கனகசபை பிரபாகரன் (வயது-47) கைது செய்யப்பட்டுள்ளார் என மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி மட்டக்களப்பு முன்னாள் மேயரின் வீட்டில் வெட்டுக் காயங்களுக்குள்ளான நிலையில் நபர் ஒருவர் இருக்கின்றார் என பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து, காயம்பட்ட நபரை பொலிஸார் மீட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

இதனை அடுத்து, முன்னாள் மேயரின் கணவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

மாலை 4 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து சிவகீதாவின் வீட்டில் பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## சம்பூரில் கசிப்பு நிலையம் முற்றுகை

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேனையூர் காட்டுப் பகுதியில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டது.

இதன்போது, 50 லீற்றர் வடிசாராயம், வடிசாராயம் காய்ச்சப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டன என சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட இந்த திடீர் முற்றுகை நடவடிக்கையின் போது 22 வயதுடைய இளைஞன் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (ச)

## கிரான்குளத்தில் நேற்றுக் கவனவீர்ப்பு; பணிப்பாளர் மீதான சூட்டைக் கண்டித்து



மட்டக்களப்பு,பெப்.27

மட்டக்களப்பு மாவட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் என். விமல்ராஜ் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதைக் கண்டித்து, கிரான்குளத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு கிரான்குளம் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் கிரான்குளம் விஷ்ணு ஆலயத்துக்கு முன்பாக இடம்பெற்ற இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

கடந்த 22 ஆம் திகதி இரவு மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகள் இருவர், வீட்டில் வைத்து பணிப்பாளர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றிருந்தனர் என்பது தெரிந்ததே. (ச)

## கிணற்றிலிருந்து சடலம் மீட்பு; இருவர் கைது



மட்டக்களப்பு வாகரைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பந்தா வெளி கிராமசேவகர் பிரிவில், காணாமற் போனதாகக் கூறப்பட்ட குடும்பஸ்தர், உயிரிழந்த நிலையில், பாழடைந்த கிணறு ஒன்றில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில், இருவரை வாகரைப் பொலிஸார் கைது செய்தனர்.

அம்பந்தாம்வெளி கிராம அபிவிருத்திச் சங்க செயலாளராகிய விநாயகமூர்த்தி பிரேமகாந்த (வயது-29) என்பவரின் சடலமே மீட்கப்பட்டது.

இவரது உடல் கிணற்றுக்குள் இருந்து மீட்கும் போது, பாரம் கூடிய கல் உடலில் கட்டப்பட்டுக் காணப்பட்டதால், இவர் கொலை செய்யப்பட்டுக் கிணற்றில் போடப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். இந்த நிலையில் சம்பவம் தொடர்பாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவரை வாகரைப் பொலிஸார், சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இது திட்டமிட்ட கொலை என்றும், குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டுமென்றும், உயிரிழந்தவரின் உறவினர்கள், கோரிக்கை விடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## நோயாளியின் உரிமைகளை மீறுகிறது 'சைட்டம்' கல்லூரி

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

நோயாளிகளின்வாழும் உரிமைக்கு குந்தகம் ஏற்படும் வகையில் 'சைட்டம்' தனியார் மருத்துவக் கல்லூரி, செயற்படுவதாக, அகில இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இதேவேளை, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் மாகாண ரீதியாக மேற்கொள்ளப்படும் தொழிற்சங்கப் போராட்டம் இன்று வடமேல் மாகாணத்தில் இடம்பெறவுள்ளது. இதன்படி, வடமேல் மாகாணத்தில் உள்ள சகல மருத்துவமனைகளிலும் அடையாள பணிப்புறக்கணிப்புப் போராட்டம் மேற்கொள்ளப்படும் என்று சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் சமந்த ஆனந்த தெரிவித்துள்ளார். (எ)

# மாகாண சபைகளை கலைக்க, அதிகாரங்களை மீளப்பெற மத்திய அரசுக்கு அதிகாரம்; வழிப்படுத்தல் குழு இணக்கம்

## நாடாளுமன்றத்தில் ஜயம்பதி விக்கிரம ரட்ண

கொழும்பு, பெப்.27

மாகாண சபைகளைக் கலைக்க அல்லது அவற்றின் அதிகாரங்களை மீளப்பெற மத்திய அரசுக்கு அதிகாரம் உள்ளது என்ற விடயத்தில் அரசமைப்புச் சபையின் வழிப்படுத்தல் குழு இணக்கம் தெரிவித்திருக்கின்றது என்று அரசமைப்புச் சட்டத்தரணியும் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயம்பதி விக்கிரமரட்ண தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டின் ஐக்கியம், ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் நாட்டின் சுதந்திரம் என்பவற்றுக்கு எதிராகச் செயற்படும் எந்த ஒரு மாகாண சபையையும் கலைப்பதற்கோ அல்லது அதன் அதிகாரங்களை மீளப் பெறுவதற்கோ ஏற்றவகையில் மத்திய அரசுக்கு வலுசேர்க்கக்கூடிய யோசனை ஒன்று புதிய அரசமைப்பில் உள்ளடக்குவதற்காக யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசமைப்பில் இந்த உள்ளடக்கம் இல்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இந்த யோசனையை வரவேற்றிருக்கின்றனர்.

வழிப்படுத்தல் குழுவில் 'அதிகாரப் பகிர்வு' என்ற தலைப்பு மிகநீண்ட நேரத்துக்கு விவாதிக்கப்பட்டது. இதேவேளை, இதில் கலந்துகொண்ட ஏழு மாகாணங்களின் முதலமைச்சர்களும் அதிகாரப் பகிர்வு நேர்மையான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும். ஆளுநரின் அதிகாரங்கள் ஒடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர்.



ஆளுநருக்கு உள்ள பொது நிர்வாக அதிகாரங்களை மத்திய அரசால் நியமிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுவிடம் ஒப்படைப்பதையே அவர்கள் விரும்புகின்றார்கள்.

இதன்போது மஹிந்த ஆதரவு அணியினரும் கலந்து கொண்டனர். -என்றார். (எ)

## நாடாளுமன்றில் அதிக நேரம் பேசவே வீரவன்ஸவின் அண்மைய முடிவு

இவ்வாறு கூறுகிறார் அமைச்சர் சரத் அமுனுகம



கொழும்பு, பெப்.27

நாடாளுமன்றில் கூடுதல் நேரம் உரையாற்ற வேண்டும் என்ற நோக்கில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ சுயாதீனமாகியுள்ளார் என்று அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணிக்கட்சி நாடாளுமன்றில் சுயாதீனமாக இயங்குவதாக அண்மையில் அறிவித்திருந்தது.

கூடுதலான நேரம் நாடாளுமன்றில் உரையாற்றுவதை நோக்காகக் கொண்டு இவ்வாறு விமல் வீரவன்ஸ சுயாதீனமாகவுள்ளார் என்று அமைச்சர் அமுனுகம கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அதிகமாகப் பேசுவதற்கு நேரம் தேவை என்றால் வாசுதேவ நாணயக்கார மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகியோரின் நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு விமல் வீரவன்ஸ உரையாற்ற முடியும்.

நாடாளுமன்ற மரபு நியதிகளுக்கு அனைவரும் மரியாதை செலுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

2021 ஆம் ஆண்டில் தேர்தல் நடைபெறும் எவருக்கும் கட்சி அமைக்க உரிமை உண்டு. கருணாவும் கட்சி அமைத்துள்ளார். அவ்வாறு ஏனைய தரப்பினரும் கட்சி அமைக்க முடியும். அதற்கு எவ்வித தடையையும் அரசு ஏற்படுத்தாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

## பிரதான இரு கட்சிகளாலும் பயனில்லை

அனுரகுமார கூறுகிறார்

நாட்டின் பிரதான இரண்டு கட்சிகளும் நாட்டு மக்களுக்குச் சேவையாற்றுவதில்லை. எனவே, அந்தக் கட்சிகளை நம்பிப் பயனில்லை என்று ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இந்த அரசை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கிடையாது. எனினும், மரபுரீதியில் ஐக்கிய தேசியக் கட்சியை விரட்டி ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி ஆட்சிப்பீடம் ஏற்றக் கூடாது.-என்றார்.

## எல்லை நிர்ணய அறிக்கைக்கு எதிராக வழக்குத் தொடரப்படும்

அமைச்சர் ரிஷாட் தெரிவிப்பு



கொழும்பு, பெப்.27

உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணய அறிக்கை வர்த்தமானி அறிவிப்புக்கு எதிராக வழக்குத் தொடரப் படும் என்று கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வார இறுதிப்பத்திரிகை ஒன்றுக்கே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எல்லை நிர்ணயமானது, அரசியல் கட்சிகளைப் போன்றே அனைத்து இன சமூகங்களுக்கும் நியாயமான வகையில் அமைய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், இந்த உத்தேச அறிக்கையில் அனைத்து இன சமூகங்களினதும் அபிலாசைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எல்லை நிர்ணயம் குறித்த வர்த்தமானி அறிவித்தல் கைகளில் கிடைக்கப் பெற்றவுடன் நீதிமன்றத்தின் உதவி நாடப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(எ)

# முறிகள் விநியோகம் குறித்த விசேட வர்த்தமானி; அனைத்து தகவல்களும் அடங்கிய அறிக்கை தயார்

## இன்று ஜனாதிபதி ஆணைக்குழு முன் சமர்ப்பிக்கப்படும் என்கிறார் அச்சக அதிபர்

கொழும்பு, பெப்.27

முறிகள் விநியோகம் தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு சிக்கலாக அமைந்த, அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் அனைத்துத்தகவல்களையும் வழங்குவதற்கான அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக அரச அச்சக அதிபர் தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி தொடர்பில் ஏற்பட்ட சிக்கலே கடந்த வியாழக்கிழமை ஆணைக்குழுவால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளை இன்று திங்கட்கிழமை வரை ஒத்திவைப்பதற்கு காரணமாக அமைந்தது.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி ஊடாக, அந்த வருடத்துக்கான முறிகள் விநியோகம் தொடர்பில் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டமை குறித்து, முறிகள் விநியோகம் தொடர்பில் விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு கடந்த வியாழக்கிழமை கூடிய சந்தர்ப்பத்தில் சட்டமா அதிபர்திணைக்களத்தின் சார்பில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணிகளால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

பதிவு செய்யப்பட்ட சம பங்கு பிணையங்கள் கட்டளைச்சட்டத்தின் அதிகாரங்களுக்கு அமைய, அப்போதைய நிதி அமைச்சரான மஹிந்த ராஜபக்ஷவின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விடயங்களை வினாவிய சந்தர்ப்பத்தில், இதுகுறித்து தாம் எதனையும் அறிந்திருக்க வில்லை என்றும் நிதி அமைச்சின் செயலாளர் கூறினார்.

அதன் பிரகாரம், அரச அச்சக அதிபரிடம் இந்த விடயம் தொடர்பான அறிக்கை ஒன்றைக் கோரி, ஆணைக்குழுவின் செயற்பாடுகள் இன்று திங்கட்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முறிகள் கொடுக்கல் வாங்கல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் கையொப்பம் இடவில்லை எனின் மத்திய வங்கியின் அதிகாரிகள், நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சருக்கு எதிராக உடனடியாக பொலிஸில் முறைப்பாடு செய்ய முடியும் என்று ஊழலுக்கு எதிரான முன்னணி தெரிவித்தது.

இலங்கைவரலாற்றில் இடம்பெற்ற பெரிய நிதி மோசடி என்று கருதப்படும் மத்திய வங்கியின் முறிகள் மோசடி குறித்து, மஹிந்த ராஜபக்ஷ 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டிருப்பார் என்பதை நம்ப முடியாதுள்ளதாக, அறிக்கை ஒன்றின் ஊடாக ஊழலுக்கு எதிரான முன்னணியின் ஆலோசகர் கீர்த்தி தென்னக்கோன் குறிப்பிட்டார்.

முறிகள் மோசடி தொடர்பான விடயங்களை வேண்டும் என்றே மறைப்பதற்காகவும் அதற்கான பாதுகாப்பைப் பெற்றுக் கொள்வதற்காகவும் இந்த வர்த்தமானி அறிவித்தலைப் பயன்படுத்து வதற்கு முறிகள் மோசடியின் முக்கியஸ்தர்கள் முயற்சிக்கின்றனர் என்பது புலப்படுவதாக ஊழலுக்கு எதிரான முன்னணி சுட்டிக் காட்டியது.

இந்நிலையில், பிரச்சினைக்குரிய அதிவிசேட வர்த்தமானி தொடர்பான அறிக்கை தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இன்று திங்கட்கிழமை ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் அதனைச் சமர்ப்பிக்கவுள்ளதாக அரச அச்சக அதிபர் கங்கானி கல்பனிலியனகே, தெரிவித்தார்.

இந்த அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் தம்மிடம் பல்வேறு விடயங்கள் வினவப்பட்டன. அவை தொடர்பான அனைத்துத் தகவல்களுமே அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றும் அச்சக அதிபர் மேலும் கூறினார்.

## உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விகிதாசார முறைப்படி நடத்துக

அமைச்சர் டலஸ் வலியுறுத்து



கொழும்பு, பெப்.27

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசார முறையிலாவது நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுகூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப் பெரும தெரிவித்தார்.

அரசு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாது காலம் தாழ்த்துவது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டு இரு வருடங்கள் கடந்துவிட்டன. எனினும் தேர்தலை விரைவில் நடத்துவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன.

தேர்தல் நடத்தப்பட்டால் ஜனநாயகம் சீர்குலைக்கப்படுவதைவிட தற்போது நடைமுறையிலுள்ள விகிதா சார முறையிலாவது தேர்தலை நடத்த வேண்டும்.- என்றார். (எ)

## தினசரி ராசி பலன் 27.02.2017

துர்முகிவருஷம் 2017ஆம் ஆண்டு மாசித் திங்கள் 15 ஆம் நாள் பிரதமை இரவு 7.06 வரை. பின்துவிதீயை. சதயம் காலை 6.49 வரை. அதன்மேல் பூரட்டாதி. பி.இ 5.56 வரை. பின் உத்தரட்டாதி. சித்தயோகம் காலை 6.49 வரை. அதன்மேல் மரணம் பி.இ 5.56 வரை. பின்னர் சுபயோகம். ராகுகாலம்: காலை 7.55 முதல் 9.24 வரை. சுபநேரம்: பகல் 12.26 முதல் 1.55 வரை. இன்று கரிநாள். இன்று திவசம் செய்ய வேண்டிய திதி: மாசிமாத வளர்பிறை பிரதமை.

### 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** இன்பமான நாள். உறவினர்கள், நண்பர்களின் உதவிகளும், ஒத்துழைப்பும் கிட்டும். வெளிநாட்டு உறவினர் வருகை மகிழ்ச்சி தரும்.

**ரிஷபம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. குடும்பத்தில் சிறு சிறு பிணக்குகள் தோன்றி மறையும். உத்தியோகத்தில் பொறுப்புகள் கூடுவதால் கடினமாக உழைக்க வேண்டிவரும்.

**மிதுனம்:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. புதிய முதலீடு செய்து தொழிலை விரிவுபடுத்துவார்கள். பழைய கடன்கள் தீரும்.

**கடகம்:** யோசனையான நாள். மாணவர்களுக்குக் கல்வியில் நாட்டம் குறையும். உத்தியோகத்தில் அலைச்சல்கள் அதிகரிக்கும்.

**சிம்மம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. தேவையற்ற செலவுகளைக் குறைப்பது நல்லது. உத்தியோகத்தில் தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்

**கன்னி:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. உத்தியோகத்தில் சாதகமான போக்கு காணப்படும். மணவாழ்க்கையை எதிர்பார்த்தவர்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் கூடிவரும்.

**துலாம்:** அனுகூலமான நாள். வருமானம் வளமாக இருக்கும். புதிய தொழில் முயற்சி நற்பலனைத் தரும். திருமண காரியங்கள் இலகுவில் அனுகூலமாகும்.

**விருச்சிகம்:** ஏமாற்றமான நாள். வருமானத்தை விடச் செலவுகள் எல்லைமீறிப் போகும். வெளிநாடு செல்ல முயன்றவர்கள் முகவர்களால் ஏமாற்றப்படுவார்கள்.

**தனுசு:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. குடும்பத்தில் கோபதாபங்களும், குதர்க்கப் பேச்சுகளும் தோன்றும். உத்தியோகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**மகரம்:** யோகமான பலன்கள் காணப்படுகின்றன. மாணவர்களுக்கு வெளிநாடு செல்வதற்கு வாய்ப்புகள் உண்டாகும். பெண்களுக்கு திருமண யோகம் கனிந்துவரும்.

**கும்பம்:** அதிஷ்டமான நாள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வியாபாரத் தொழில் உன்னத நிலையை அடையும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வுடன், வாகன வசதிகள் சேரும்.

**மீனம்:** சலனம் மிகுந்த நாள். குடும்பத்தில் குழப்ப நிலைகள் காணப்படும். பணி செய்யும் இடத்தில் தேவையற்ற விவாதங்களைத் தவிர்க்கவும்.

சந்திராட்டமநாள்: உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்களில் பிறந்தோர் இந்நாளில் சுபகருமங்கள் மேற்கொள்வதைத் தவிர்க்கவும்.

# தலைக்கவசம் குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராகத் தடை!

## மோட்டார் சைக்கிள் உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.27

தலைக்கவசம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் ஊடாக முகத்தை முழுமையாக மூடும் தலைக்கவசத்தைப் பயன்படுத்துவதற்குத்தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் சங்கச் செயலாளர் ஹிரந்த அமரசிங்க தெரிவித்துள்ளார்.

சந்தையில் விற்பனைக்காக உள்ள முகத்தை முழுமையாக மூடும் தலைக்கவசத்துக்கும் தரம் இல்லை என்று அகில இலங்கை மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் ஹிரந்த அமரசிங்க தெரிவித்துள்ளார்.

தலைக்கவசம் அணிவது தொடர்பான 10 ஒழுங்குவிதிகள் அடங்கிய விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் செலுத்துகின்ற மற்றும் அதில் பயணிக்கின்ற ஒவ்வொருவரும் பாதுகாப்பான தலைக்கவசத்தை அணிந்திருக்க வேண்டும்.

இந்தத் தலைக்கவசம், அணிபவரின் தலைக்கு அளவானதாக இருக்க வேண்டும். அத்துடன், நாடிப் பட்டி பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்றும் அந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அத்துடன், அணிபவரின் முகத்தை மறைக்கும் வகையில் பாதுகாப்பான தலைக் கவசம் அமையக் கூடாது.

பாதுகாப்பான தலைக்கவசம் ஒளித்தெறிப்பு எதுவும் இன்றி, சுலபமாகப் பார்க்கக் கூடியதாகவும் தொண்ணூறு சதவீதம் தனியொரு நிறத்தில் இருத்தல் வேண்டும்.

தலைக்கவசம் தொடர்பான இலங்கையின் தராதரங்களுக்கு அமையப் பாதுகாப்பான தலைக் கவசங்கள் அமைய வேண்டும் என்றும் வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், முகத்தை முழுமையாக மூடும் தலைக் கவசம் அணிவதற்குத் தடை விதிக்கும் வகையில் புதிய வர்த்தமானி அறிவித்தல் உள்ளது. எனவே அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அகில இலங்கை மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (எ)

# இலங்கைத் தமிழர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார்

## பிரிட்டன் தொழிற்கட்சி தெரிவிப்பு

கொழும்பு, பெப்.27

இலங்கைத் தமிழர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க உள்ளதாக பிரிட்டன் தொழிற்கட்சி தெரிவித்துள்ளது.

பிரிட்டன் தொழிற்கட்சியின் தலைவர் ஜெர்மி கொரி பின் உள்ளிட்டவர்கள் இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுக்க உள்ளனர்.

2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் நிறைவேற்றப்பட்டிருந்த தீர்மானங்கள் இலங்கையில் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அடுத்த வாரம் நாடாளுமன்றில் நடைபெறவுள்ள நிகழ்வில் தமிழர்களுக்காக தாம் குரல் கொடுக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அடுத்த மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான கூட்டத் தொடர் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் அவரின் இந்தக் கருத்துக்கள் முக்கியத்துவம் வாய்ந்தன என்று கருதப்படுகிறது. (எ)

## மண் மேடு சரிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழப்பு

மாத்தளை - லக்கல - களுகங்கை வேலைத் திட்டத்தில், அகழ்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த கல்குவாரியில் மண்மேடு சரிந்து விழுந்ததில், ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் சிறு காயங்களுக்கு இலக்காகியுள்ளார். அத் துடன், மற்றும் ஒருவர் மண் மேட்டினுள் சிக்கியுள்ளார் என்றும் தெரியவந்துள்ளது.

அவரை காப்பாற்றும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (எ)

# மக்களிடையே ஒற்றுமையின்மையே உரிமைகளைப் பெறுவதில் சிக்கல்!

## தொண்டமான் எம்.பி.கூறுகிறார்



கொழும்பு, பெப்.27

பெருந்தோட்ட மக்கள் மத்தியில் ஒற்றுமையின்மையால் அனைத்து உரிமைகளையும் பெறுவதில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. எனவே முதலில் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நானு ஓயா கிளாசோ ஆடிவன் பிரிவில் சனசமூக மண்டபம் மக்கள் பாவனைக்காக நேற்றுமுன்தினம் வைபவ ரீதியாகத்திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றியவை வருமாறு:-

ஒற்றுமையைப் பலப்படுத்தும்போது வெற்றிகளைப் பெற முடியும் என்பதில் தொழிலாளர் காங்கிரஸ் தெளிவாக இருக்கின்றது. மலையக அபிவிருத்திக் கென காங்கிரஸால் கொண்டுவரப்பட்ட திட்டங்களை இன்று உள்ளவர்கள் நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

மக்களின் ஒற்றுமை ஓங்க வேண்டும். அப்போது நாம் நினைத்த காரியங்களை வெற்றிகொள்ள முடியும் என்பதில் ஐயம் இல்லை. மலையகத்தின் அபிவிருத்தியை முன்னெடுக்க பத்தாண்டு அபிவிருத்தித் திட்டத்தை முதலில் அறிமுகப்படுத்தியது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தான். இந்தத் திட்டம் குறித்து பேசுவதற்கு வேறு யாருக்கும் அருகதை யில்லை.

பெருந்தோட்டப் பகுதிகளில் தொழிலாளர்கள் தொழில் நடவடிக்கையில் ஈடுபடுகின்றமை குறைவாகவே காணப்பட்டு வருவதாக தெரிய வருகின்றது. இதற்குக் காரணம் இன்றைய வாழ்வாதார நிலையில் அவர்களின் சம்பளம் அவர்களுக்கு முறையாக வழங்கப்படுவதில்லை. தோட்ட நிர்வாக அதிகாரிகள் கூட்டு ஒப்பந்த விதிமுறைகளை மீறுகின்றனர் இதனால் ஏற்படும் சிக்கல்களை இந்த மக்கள் எதிர் கொள்கின்றனர்.-என்றார். (எ)


# ஐ.நா. தீர்மானம், ஜி.எஸ்.பி.+, தமிழர் தன்னாட்சியுரிமை:

## பிரித்தானிய நாடாளுமன்றில் அவசர மாநாடு!











ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தின் உடனடி அமுலாக்கம், ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்குக் கிடைப்பதைத் தடுத்து நிறுத்துதல், தன்னாட்சியுரிமையின் அடிப்படையில் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு ஆகிய முக்கிய விடயங்களை ஆராயும் அவசர மாநாடு நாளை செவ்வாய்க் கிழமை இரவு 7 மணிக்கு பிரித்தானிய நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற இருக்கின்றது.

தொழிற் கட்சிக்கு ஆதரவான தமிழர்கள் அமைப்பின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் தொழிற்கட்சியின் தலைவரும், பிரித்தானிய மகாராணியின் அதிகாரபூர்வ எதிர்க் கட்சியின் தலைவருமாகிய ஜெரமி கோர்பின் சிறப்புரை வழங்கவுள்ளார்.

அத்தோடு பிரித்தானிய மகாராணியின் அதிகாரபூர்வ நிழல் அமைச்சரவையின் உறுப்பினர்களான நிழல் நிதியமைச்சர் ஜோன் மக்டொனல், நிழல் வெளியுறவுத்துறை அமைச்சர் எமிலி தோன்பெரி, நிழல் பன்னாட்டு அபிவிருத்தித்துறை அமைச்சர் கேற் ஒசேமோர், முன்னாள் நிழல் பல்லின விவகார அமைச்சர் டோன் பற்லர் ஆகியோர் உட்பட பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துரைகளை ஆற்றவுள்ளனர்.

தமிழினத்தின் அரசியல் வேணவாவைப் பிரித்தானிய ஆட்சிபீடத்துக்கு எடுத்துரைக்கும் வகையில் இந்த மாநாட்டில் பெருவாரியாகப் பங்கேற்குமாறு அனைத்துப் பிரித்தானியத் தமிழ் உறவுகளுக்கும் தொழிற் கட்சிக்கு ஆதரவான தமிழர்கள் அமைப்பு அறைகூவல் விடுத்துள்ளது. (ஐ)

## கேப்பாபிலவு மக்களுக்கு ஆதரவாக பிரான்ஸில் தொடர் கவனவீர்ப்பு!

தமிழீழ தாயகத்தில் கேப்பாபிலவு மக்களால் 27 நாள்களால் தொடரும் வெகுசனப் போராட்டத்தில் வீட்டுக்கொருவர் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் நிலையில் புலம்பெயர்ந்த நாடுகளிலும் தமிழீழ மக்களால் கவனவீர்ப்பு ஜனநாயகப் போராட்டம் கேப்பாபிலவு மக்களுக்கு ஆதரவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பிரான்ஸின் தலைநகர் பரிஸில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பல லட்சம் மக்கள் உல்லாசப் பிரயாணிகளாக வந்து செல்லும் சுதந்திர சதுக்கத்திலும் பிரான்ஸ் வாழ் தமிழ் மக்களால் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நாடாளுமன்றம் முன்பாகவும் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி புதன் கிழமை பிரான்ஸ் குடியரசுச் சிலைக்கு முன்பாக மாலை 3 மணிக்கு கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

தமது இனப்படுகொலையை நியாயப் படுத்தும் வகையிலும் இலங்கை அரசு பகீரதப்பிரயத்தனப்பட்டுகொண்டிருக்கும் நிலையில் பொய்யான வாக்குறுதிகளையும், கொடுத்த வாக்குறுதிகளை இதுவரை சரிவர நிறைவேற்ற முடியாத நிலையில் மேலும் தனது ஏமாற்று நாடகத்துக்குக் கால அவகாசம் கேட்கும் நிலையில் தற்பொழுது ஜெனீவா மனித உரிமைகள் செயலகத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கும் கூட்டத் தொடரில் தமிழினத்துக்கெதிராகவே தமிழர்களைப் பயன்படுத்தி பொய்யான வாக்குறுதிகளையும், உண்மைக்கு புறம்பான சாட்சியங்களை தயார் செய்து வழங்கி வருவதாகவும் செய்திகள் வெளிவந்த வண்ணமுள்ள நிலையில் புலம் பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழீழ மக்களால் இக் காலப்பகுதியில் பல கவனவீர்ப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ஐ)



## கேப்பாபிலவு மண் மீட்புக்கு ஆஸ்திரேலியாவில் ஆதரவு




*கேப்பாபிலவு மக்களுக்கு ஆதரவாக பிரான்ஸ், ஜேர்மன், கனடா உள்ளிட்ட பல நாடுகளில் புலம்பெயர்ந்த மக்களால் தொடர்ச்சியாகக் கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.*

முல்லைத்தீவு கேப்பாபிலவு மக்களின் காணி விடுவிப்புத் தொடர்பான போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், கேப்பாபிலவு மக்களின் காணி விடுவிப்புப் போராட்டத்துக்கு ஆதரவாக புலம்பெயர்ந்த மக்களும் தொடர்ச்சியாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில் நேற்று முன்தினம் மாலை மேற்கு ஆஸ்திரேலிய நகரான பேர்த்திலும் கேப்பாபிலவு மக்களுக்கு ஆதரவாகப் போராட்டம் இடம்பெற்றுள்ளது.

கேப்பாபிலவு மக்களுக்கு ஆதரவாக பிரான்ஸ், ஜேர்மன், கனடா உள்ளிட்ட பல நாடுகளில் புலம் பெயர்ந்த மக்களால் தொடர்ச்சியாகக் கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## லண்டன் திரைப்பட விழாவில் இலங்கைப் பெண் இயக்குநருக்கு விருது!

பிரித்தானியாவில் நடைபெற்ற திரைப்பட விழாவில் இலங்கையைச் சேர்ந்த பெண் இயக்குநர் ஒருவர் விருது பெற்றுள்ளார்.

கடந்த வாரம் லண்டனில் நடைபெற்ற 70 ஆவது பெப்டா திரைப்பட விருது விழாவில், சிறந்த குறு அனிமேஷன் திரைப்படத்துக்காக விருது வழங்கப்பட்டுள்ளது.

அனுஷ்கா கிஷானி நாணயக்கார என்ற இலங்கைப் பெண்ணால் இயக்கப்பட்ட A LOVE STORY என்ற குறுந்திரைப் படத்துக்கு விருது கிடைத்துள்ளது.

விமானப் பொறியியலாளராக பிரித்தானியாவில் பணியாற்றும் ரத்நாயக்க மற்றும் அமிதா ரத்நாயக்கவின் கடைசி மகளான கிஷானி, தனது ஆரம்பக்கல்வியைப் பிரித்தானியாவில் கற்றுள்ள நிலையில் சாதாரண தரக் கல்வியை மாத்தறை சுஜாதா வித்தியாலயத்தில் கற்றுள்ளார்.

ஆங்கில தினப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் பல வெற்றிகளை அந்தப் பாடசாலைக்காக பெற்றுக் கொடுத்துள்ளார்.

சிறு வயது முதல் கலைத் துறையில் விசேட திறமையை வெளிப்படுத்தி அவர் தனது உயர் கல்வி நடவடிக்கைக்காக மீண்டும் பிரித்தானியாவுக்குச் சென்றுள்ளார். அதன் பின்னர் அவர் லண்டன் கல்லூரியில் தனது முதலாவது பட்டத்தைப் பெற்றுள்ளார்.

அதன் பின்னர் பெக்கன்பீல்ட் நகரத்தில் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பாடசாலையில் கல்வியை ஆரம்பித்த அவர் திரைப்பட இயக்குநர் தொடர்பான கற்கையை நிறைவு செய்த பின்னர் அவர் இயக்கிய இந்த திரைப்படம் பல்வேறு நாடுகளில் பல்வேறு விருதுகளை வென்றுள்ளது.

BAFTA விருது விழாவில் பரிந்துரை செய்யப்பட்ட அவரது திரைப்படம் முதலாவது இடத்தைப்பெற்றுள்ளமை இலங்கைக்கு கிடைத்த பெருமையாக கருதப் படுகிறது.

# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?" 103

பொன்.வேணு கிருஷ்ணா

ISIS மற்றும் ''தீவிர இஸ்லாமியத்தை'' அடியோடு ஒழிப்பதற்கான ஒரு திட்டமாக தனது பதவியேற்பு உரையில், அவர் ''பூமியிலிருந்து முற்றிலும் அவற்றை இல்லாதொழிக்க வேண்டும்'' என்ற நோக்கத்துடன், பலூஜா மீதான 2004 தாக்குதலில் கணக்கிலடங்காத குடிமக்கள் ஆயிரக் கணக்கில் கொல்லப்பட்டமை உட்பட, ஈராக்கில் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு காரணமாக இருந்த பல எண்ணிக்கையிலான போர் குற்றங்களுக்கு பொறுப்பாளியான மாட்டிஸால் இது வகுக்கப்பட வுள்ளது என அறிவித்தார்.




செல்வாக்கை வளர்த்துக்கொண்டு ஈரானுக்கான ஒரு குதிரையே தவிர வேறொன்றுமில்லை என்று மாட்டிஸ் கூறினார். ஒபாமா நிர்வாகத்தில் விடுபட்ட கட்டளையையே மாட்டிஸ் தொடருகிறார் என்று பரவலான வதந்தி நிலவுகிறது, ஏனென்றால் ஈரான் மீதான ஒரு மிகுந்த போர்வெறி கொண்ட அணுகுமுறைக்கு அவர் பெரிதும் ஆதரவளித்தார்.

ட்ரம்பின் உத்தரவு பொதுமக்களுக்கு கிடைப்பதற்கு முன்பு, மாட்டிஸ் சிரியாவில் ஒரு பெரும் போர் அதிகரிப்புக்கு திட்டமிடுகிறார் என்று இராணுவத்துக்கு உள்ளும் வெளியிலும் உள்ள பிரமுகர்களால் ஊகிக்கப்பட்டது.

ஸ்காட் முர்ரே, ஓர் ஓய்வுபெற்ற விமானப்படை தளபதியாக ISIS இன் முந்தைய வான்வழி குண்டுவீச்சுத் தாக்குதலில் ஈடுபட்டு, பொது மக்கள் நடவடிக்கைகள் என்பது பற்றி முறைப்பாடு கூறினர். கடந்த ஆண்டு சிரியாவுக்கு அனுப்பப்பட்ட 203 சிறப்புபடை வீரர்களின் படைப்பிரிவைச் சோர்ந்த "ஒவ்வொரு தனி மனிதனும் ஒப்புதல் பெறப்பட்டிருக்கவேண்டும்,'' என்று ஒரு பெயர் குறிப்பிடப்படாத பாதுகாப்புத்துறை அதிகாரி தெரிவித்தார்.


**உள்நாட்டு கையாள்களுக்கு பதிலாக மிக அதிகளவில் அமெரிக்க சிப்பாய்களே சிரியாவில் நிலை நிறுத்தப்படுவார்கள்**

நடத்தி வருகிறது.


**ட்ரம்பின் குடியேற்ற எதிர்ப்பு உத்தரவின் பேரில் சிரியாவில் ஒரு போர் விரிவாக்கம் ஏற்படும் என்று முன்கணிக்கப் பட்டிருக்கிறது**

ட்ரம்பின் குடியேற்ற எதிர்ப்பு உத்தரவின் பேரில் சிரியாவில் ஒரு போர் விரிவாக்கம் ஏற்படும் என்று முன்கணிக்கப்பட்டிருக்கிறது. இது, நெருக்கடி நிலையிலிருந்து தப்பி ஓடும் அகதிகளைத் தடுப்பதை முன்

Pentagon Confirms It Is 'Considering' Deploying Ground Troops to Syria
by EDWIN MORA16 Feb 2017Washington, D.C.




The Department of Defense (DOD) is "considering" sending American ground combat troops to Syria as part of the Trump administration's efforts to "hasten the defeat" of the Islamic State (ISIS/ISIL), a Pentagon spokesman has confirmed. Citing an unnamed U.S. defense official, CNN first reported that the Pentagon "might propose that the US send conventional ground combat forces into northern Syria for the first time to speed up the fight against ISIS."




**அமெரிக்கா தற்போது ISIS மீது போர் தொடுக்கும் அதே நேரத்தில், லிபியா மற்றும் சிரியாவில் ஆட்சி மாற்றத்துக்கான நடவடிக்கைகளில் அல்குவைதாவுடன் இணைந்த அமைப்புக்களுக்கு அது நிதியுதவியளித்து இயக்கி வருகிறது**

அமெரிக்கா தற்போது ISIS மீது போர் தொடுக்கும் அதே நேரத்தில், லிபியா மற்றும் சிரியாவில் ஆட்சி மாற்றத்துக்கான நடவடிக்கைகளில் அல்குவைதாவுடன் இணைந்த அமைப்புக்களுக்கு அது நிதியுதவியளித்து இயக்கிவருகிறது. ஆயினும், கடந்த கோடையில் உரையாற்றுகையில், பாதுகாப்புச் செயலர் பதவிக்கு அவரை




பரிந்துரைப்பதற்கு முன்பு, அவரது பார்வையில், ISIS என்பது மத்திய கிழக்கு பகுதி முழுவதிலும் தனது மீது இலக்குவைப்பதைத் தடுக்கும் விதிகளை விலக்குவதால் இதனை செய்யமுடியும் என்று NRR இற்கு தெரிவித்தார்.

''ISIL இலக்குகளைத் தாக்கும் போது இராணுவத்திற்கு அபாயம் ஏற்படும்போது பொது மக்கள் இறப்புக்கள் மீதான வரம்புகள் குறித்து தளபதிகள் மறுஆய்வு செய்யமுடியும்.'' - என்று NPR அறிக்கை சொல்லியது. ''எதிரிகள் அல்லாத மதிப்பு என்று அறியப்படுவது,'' என்ற விதிமுறையின்படி ஒரு வான்வழி தாக்குதலில் இவ்வளவு பேருக்கு ஆபத்து இருக்கலாம் என்ற வரையறை பொது மக்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துகிறது.

அமெரிக்க அரசாங்கத்தின் வெளிநாட்டு வானொலி ஒலிபரப்பு நிறுவனமான அமெரிக்காவின் குரல் (Voice of America - VOA) உடன் அதிகாரிகள் பேசியபோது ஒபாமா நிர்வாகத்தினர் சிரியாவில் ''மிகநுண்ணிய-ஒப்புதல்''

ஓர் உயர்மட்ட இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் டேவிட் பேர்னோ NPR இன் காலை பதிப்பில், உள்நாட்டு கையாள்களுக்கு பதிலாக மிக அதிகளவில் அமெரிக்க சிப்பாய்களே சிரியாவில் நிலைநிறுத்தப்படுவார்கள் என்று தெரிவித்தார். ''ஜனாதிபதி ட்ரம்ப் சில விரைவான முடிவுகளுடன் ஏதோவொன்றை எதிர்நோக்குகிறார், அதன் மூலமாக அவரது அதிகாரத்தில் சில புதிய விருப்பங்களை கொண்டு வரமுடியும் என்று நான் நினைக்கிறேன்,'' என்றும், ''களத்தில் நிறுத்துவதற்கான பெரியளவிலான அமெரிக்கர்களின் எண்ணிக்கையை அவர் தேர்வு செய்ய முடியும்'' என்றும் பேர்னோ தெரிவித்தார்.

தற்போது இந்தப் பிராந்தியத்தில் பெரும்பாலும் 6,000 அமெரிக்க இராணுவ அதிகாரிகள் ஈராக்கில் தான் குவிந்திருக்கின்றனர், அங்கு, ஈராக் படைகளும் இணைந்து, அவர்களும் மொசூல் நகரத்தை ஒரு பெரும் தாக்குதலுக்கு உட்படுத்துவதற்கு இலக்கு வைத்துள்ளனர். அண்டை நாடுகளில் தனித்தனியான போர் அரங்குகள் உள்ளன என்ற கட்டுக்கதையை ட்ரம்பின் உத்தரவுகள் இல்லாது செய்யலாம்.

குர்திஷ் மக்களின் பாதுகாப்புப் பிரிவு (Kurdish People's Protection Units - YPG) அமைப்பை அமெரிக்கா முயற்சிக்கலாம் என்ற ஊகமும் இருந்தது. இது நேட்டோ நட்பு நாடான துருக்கியுடன் பதற்றங்களை அதிகரிக்கவே செய்யும், ஏனென்றால் துருக்கி YPG-ஐ குர்திஷ் தொழிலாளர் கட்சியின் (Kurdish Workers Party - PKK) ஒரு பிரிவாகவே பார்ப்பதுடன், அதற்கெதிராக ஒரு சுதந்திர குர்திஸ்தான் வெளிப்படுவதை தடுக்க, கிட்டத்தட்ட ஒரு நான்கு தசாப்த கால எழுச்சி எதிர்ப்பு போரை னிட்டு வெளிப்படையான நோக்கத்துடனும், சிரிய இறையாண்மையையும், சர்வதேச சட்டத்தையும் அப்பட்டமாக மீறுகின்ற செயலாகவும், அமெரிக்க இராணுவத்தால் நடத்தப்படும் ''பாதுகாப்பு வலையங்களின்'' உருவாக்கத்துக்கு மேலும் திட்டமிடுகிறது. இந்த திட்டத்தின் கீழ், சிரிய அகதிகள், அனைத்துமே பெயரளவிற்கு உள்ளதான, அமெரிக்க நிர்வாகத்திற்கு உட்பட்ட முகாம்களில், அமெரிக்க இராணுவ மேற்பார்வையில் வைக்கப்படுவார்கள்.


**ட்ரம்ப் பத்திரிகைகள் மற்றும் நீதிமன்றங்களுக்கு எதிராக இராணுவத்துக்கு முறையிடுகிறார்**

திங்களன்று (16.02.2017) புளோரிடாவின் தாம்பாவில் உள்ள மாக்டில் (MacDill) விமானப்படை தளத்திற்கான ஒரு சிறப்பு விஜயத்தில், ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஓர் அரசியல் உரை வழங்கி ஜனநாயக மரபை மீறினார். பத்திரிகைகளைக் கண்டித்த அவர், நீதிமன்றங்கள் மற்றும் அரசமைப்புக்கு எதிராக ஜனாதிபதி பதவிக்கும் - இராணுவத்திற்கும் இடையே ஒரு கூட்டணியை உருவாக்க மறைமுகமாக அறிவுறுத்தினார். (In an extraordinary appearance Monday at MacDill Air Force Base in Tampa, Florida, President Donald Trump dispensed with democratic protocol to deliver a political speech. He denounced the press and implicitly suggested the formation of a presidential - military alliance against the courts and the Constitution.)

(கேள்வி தொடரும்...)



# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.

தமது துணைவியார் அடேல் பாலசிங்கம் 'சுதந்திர வேட்கை' என்ற நூலில் வரைந்த விடயங்கள் சிலவற்றை அவர் இந்தத் தொடரில் மேற் கோள்காட்டுகின்றார். அந்தப் பகுதிகள் இங்கு பிரசுரமாகின்றன.






–அடேல் பாலசிங்கம்

70

## ஹமீதின் பங்கு

ஹமீதுவைத் தேர்ந்தெடுத்தமை பிரேமதாசாவுடைய இராஜதந்திரத்தினதும் அரசியலினதும் கூர்மதி என்றே கூறவேண்டும். ஹமீது இதில் சம்பந்தப்படாதிருந்தார் என்றால், இந்தியப் படை தொடர்ந்தும் வடக்கு - கிழக்கில் இருந்திருக்கும் என்றே கூறவேண்டும். ஹமீது தெரியப்பட்டதற்குக் காரணம், அவர் இலங்கை முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதாகும். நாட்டின் தமிழ் பேசும் இனங்களின் உறுப்பினர்கள் என்ற வகையிலே, விடுதலைப் புலிகள் அணிக்கும் ஹமீதுவுக்கும் இடையில் ஒரு நல்லிணக்கமும் கூடிப்பணிபுரிவதற்கான சுமுக நிலையும் ஏற்படும் என்று பிரேமதாசா கருதினார். இது பொருத்தமானதாகவே பட்டது. ஆனால், விடுதலைப் புலிகளுடன் நடந்த பேச்சிலே ஹமீது வெற்றி கண்டார் என்றால், தமிழ் மக்கள்பால் அவர் கொண்டிருந்த பரிவுணர்வு மட்டுமே என்று குறைத்து எடைபோடக் கூடாது. அவரிடம் இருந்த சிறந்த தனிப்பட்ட பண்புகளுமே காரணம் என்று கூற வேண்டும். உருவத்தில் ஹமீது குட்டையானவரே. ஆனால், ஆளுமையில் அவர் பெண்ணம்பெரியவர் என்பதே எனது அனுமானமுமாகும். அவருடைய திறமைமிக்க இராஜதந்திரத்துக்கும், பொறுமைதான் காரணமா அல்லது வெளியுறவு அமைச்சராக அவர் பெற்ற நீண்டகால அனுபவம் அவரிடம் எல்லையற்ற பொறுமையைப் படிய வைத்ததா என்பதைத் தீர்மானிக்க எனது அறிவு போதாது என்பேன். ஆனால், ஹமீதுவுடைய வியக்கத்தகு பண்பாக அவருடைய பொறுமையையும் நிச்சயம் குறிப்பிடலாம். பொறுமை, அவரை ஓர் அறிவாளியாகவும் ஆக்கியிருந்தது. அவருடைய உள்ளுணர்வு, கத்திமுனைக் கூர்மையானது. பேச்சு அரங்கிலே அவர் வந்து அமரும்போது, குறித்த சில நோக்கங்களுடனேயே வருவார். அவற்றைச் சாதிப்பதற்கான, நன்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தந்திரோபாயமும் அவரிடம் இருக்கும். உண்மையில் ஒரு சதுரங்க ஆட்டத்தில் ஈடுபட்டிருப்பது போல, தமது வாதத்தையும் அவர் திட்டமிட்டிருப்பார். ஹமீது, தாம் திட்டமிட்ட பாதையில் பேச்சை வழிநடத்திச் செல்வதை ஒரு பார்வையாளராக இருந்து கவனித்துக் கொண்டிருக்கும் வாய்ப்பு, விடுதலைப் புலி அணியின் செயலர் என்ற வகையிலே எனக்குக் கிடைத்தது. எத்தகைய கருத்து வெளியிடப்படும் என்ற எதிர்பார்ப்போடு ஒவ்வொரு வார்த்தையையும் அளந்தே பேசுவார். உடனடிப் பதிலும் அவரிடம் தயாராக இருக்கும். இப்படி, தமது இலக்கை நோக்கிய முடிவை எய்த, தமது விவாதத்தை அவர் நகர்த்திக் கொண்டிருப்பார். ஹமீதுவுடைய இலக்கு எது என்று புரிந்துகொண்டு பாலா தம்மைத் தயாராக்குவார். இருவருக்குமிடையே இடம்பெறும் அறிவுசார் மோதல், எமக்கு விருந்தாக அமையும். தமக்கு சமநிலையான சவாலை எதிர்கொண்டதும் மோதலை மெல்லத் துண்டித்துக் கொள்ளும் தருணமும் ஹமீதுவுக்குத் தெரியும். சிறிலங்கா குழுவின் தலைவர் என்ற நிலையில், தமது அணித் தோழர்களுடைய கருத்தமைவும் உணர்வுகளும் எப்படி இருக்கின்றன என்று நாடி பிடித்துக் கொண்டே இருக்கும் ஹமீது, முரண்பாடுகள் தலை தூக்கும் போது, அவற்றைச் சதுரியமாக தவிர்த்து விடுவார். பேச்சின் தொனி பழுதுபடாமலும் இணக்கப்பாட்டுக்கு வருவது ஊறுபடாமலும் பார்த்துக் கொள்வார். பிரேமதாசா மேலும் ஒரு புத்திசாதுர்யமான காரியம் செய்திருந்தார். கடும் போக்கு இனவாதிகளான லலித் அத்துலத்முதலியையும் காமினி திசாநாயக்கவையும் பேச்சு அணியிலே சேர்க்காது விட்டிருந்தார். அவர்களுக்கும் எமக்கும் இடையே கடும் கசப்புணர்வு நிலவியமையால், பேச்சு அரங்கிலே எதிரெதிர் இருக்கைகளில் நாம் அமர்ந்தோமேயென்றால், முதல் சுற்றுப் பேச்சையே நாம் கடந்திருப்போமா என்பது சந்தேகமே.

வெளிப்படையான அரங்கிலே பேசப்படுவதும் குறிப்பிடப்படுவதும் எப்போதும் முழுமை பெற்றுவிடுவதில்லை என்பது பெரும்பாலான, அனுபவம் மிக்க இராஜதந்திரிகளுக்குத் தெரியும். தனியாக நடைபெறும் பேச்சு சிலவேளைகளில் பகிரங்க பேச்சை விட முக்கியமானதாக அமைந்துவிடும். தனியாக நடத்தும் இராஜதந்திர முயற்சியிலே ஹமீது பெருமளவு நம்பிக்கை வைத்திருந்தார். சிக்கலானதும் உள்ளார்ந்ததும், பிரச்சினையைத் தோற்றுவிப்பதுமான விடயங்களை மற்றவர்களுடைய பார்வையிற்படாது பிரத்தியேகமான சூழலில், நம்பிக்கை அடிப்படையில் நடத்தப்படுவதையே அவர் விரும்பினார். இந்த அணுகுமுறையோடு மாலை வேளைகளில் எமது விடுதியில் பாலாவுடன் தனிப்பட்ட கலந்துரையாடல்களை அவர் அடிக்கடி நடத்தினார். இப்படியான சந்திப்புக்களின் போதே பாலாவும் ஹமீதுவும் ஓர் ஆரோக்கியமான புரிந்துணர்வையும் ஒருவருக்கு ஒருவர் இடையிலான மரியாதையையும் கட்டியெழுப்பினார்கள். வடக்குக் கிழக்கு நிர்வாகம் போன்ற விடயங்களை இந்தியப் படைகள் வெளியேற்றப்பட்ட பின்னரே அணுக ஹமீது விரும்பினார். இது தொடர்பாகவும் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன என்பதை பாலாவும் தெளிவுபடுத்தினார். இருவரிடமும் முதிர்ச்சி இருந்தது. ஆகவே, முக்கிய கருத்து வேறுபாடு தொடர்பாகத் தரங்கெட்ட பொது விவாதத்துக்கோ, பாதகம் ஏற்படக்கூடிய அரசியல் பிளவுக்கோ இடம் இருக்கவில்லை. தனிப்பட்ட முறையிலே பாலாவும் நானும், இனிப் பொதுவாக ஏனைய விடுதலைப் புலிகளும் ஹமீது மீது மதிப்பு வைத்திருந்தோம்; அவரை விரும்பினோம். விடுதலைப் புலி அணிக்கென்று சுவை சொட்டத் தயாரிக்கப்படும் முஸ்லிம் புரியாணிகளையும் ஆட்டிறைச்சிக் கறியையும் அவர் வழங்குவார். வெறும் அரசியல் தொடர்புக்கு மேலாக, மிக முக்கியமானதான மானுட பந்தத்தை அது எம்மிடையே ஏற்படுத்தியது. மேலும் பிரபாகரனும் ஹமீது மட்டில் பெரும் மரியாதை வைத்திருந்தார். இது இரு தரப்பினரையும் உரையாடலில் இணைத்தது. பேச்சு தேவைப்பட்ட அளவு நீடிக்கவும் இது இடமளித்தது. எதிர்பாராத வகையில் நேர்ந்த ஹமீதுவுடைய மரணம், துயர் தருவதாக அமைந்தது. அத்தகைய ஆற்றலும் ஆளுமையும் கொண்டவர்கள் சிறிலங்கா அரசியலில் இல்லாமற்போனமை ஈடுசெய்ய முடியாத இழப்பேயாகும்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பேச்சு முன்னேறிக் கொண்டிருந்தது. தமிழர் தாயகத்தில் இந்திய இராணுவத்தின் அத்துமீறல்கள் மீதே முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. இது புதுடில்லிக்கு அங்கலாய்ப்போடு எரிச்சலையும் மூட்டியது. ராஜீவ் நிர்வாகத்துக்கு ஒரு கடுமையான இராஜதந்திர பாதிப்பு நிலையை இது ஏற்படுத்தியது. ஹமீதுவுடைய கவன மான தணிக்கையால் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்ட போதிலும், பகிரங்கமாக வெளியிடப்பட்ட கூட்டறிக் கைகள் உள்நாட்டிலும் அனைத்துலகிலும் இந்தியப் படைகள் புரிந்த போர்க்குற்றங்களை அம்பலப்படுத்தின. புதுடில்லியின் அதிருப்தி 1989 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி கொழும்பில் இருந்த இந்திய உயர் ஸ்தானிகர் லக்கன் லால் மெக்ரோத்ராவுடைய ஊடகச் செவ்வியில் கடுப்போடு தெரிவிக்கப்பட்டது. அதில், இந்திய அமைதிப் படையின் பணியை அவர் ஆதரித்துப் பேசினார் என்பதோடு, தவறான செய்தி களை வெளியிடுகின்றனர் என அவர் புலிகளைக் கண்டித்தும் இருந்தார். மெக்ரோத்ராவுடைய செவ்வி, உள்ளூர் ஊடகங்களால் பரவலாகப் பிரசித்தப்படுத்தப்பட்டது. தவறான எதிர்க்கருத்தையும் பரப்பியது. எனவே, அமைச்சர் அணியுடனான சந்திப்பு மே மாதம் 16 ஆம் திகதி இடம்பெற்ற போது, விடுதலைப் புலிகள் அணி, அந்த விடயத்தைப் பற்றிக் குறிப்பிட்டதோடு தங்கள் பதிலுரை கூட்டறிக்கையிலே கடும் தணிக்கையின்றி உள்ளடக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டது.

வடக்குக் கிழக்கிலே அமைதியும் சுமுக நிலையும் இந்தியப் படைகளால் மீள நிறுவப்பட்டுவிட்டன என இந்தியத் தூதர் முன்வைத்த கருத்தை விடுதலைப் புலிகள் அணி முற்றாக நிராகரித்தது. நேர்மாறாக அந்தப் படைகள் வன்செயலையும், பயங்கரத்தையும் தீவிரப்படுத்தியிருக்கின்றன எனவும் தமிழ் மாநிலங்களில் தணிவின்றிப் போர் நடந்து கொண்டிருப்பதாகவும் புலிகள் வாதிட்டார்கள். விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஆயுதக் களைவு நடவடிக்கை



யில், இந்தியப் படைகள் குறைந்தபட்சப் பலத்தையே பயன்படுத்துவதாகத் தெரிவித்த இந்தியத் தூதரின் கூற்றை நிராகரித்த புலிகளின் பிரதிநிதிகள், அதிகபட்சப் பலத்தை இந்தியப் படைகள் பயன்படுத்துவதோடு கனரக ஆயுதங்களான பீரங்கி, பெரிய மோட்டார் ஆகியவற்றையும் கவசவாகனங்களையும் இயந்திரத் துப்பாக்கி பொருந்திய உலங்கு வானூர்திகளையும் பயன்படுத்துகின்றனர் எனக் கூறினார்கள். பொதுமக்கள் குறைந்தபட்சத் தொகையினரே தாக்குதலுக்கு உள்ளாகினர் என்று உயர்ஸ்தானிகர் அறிக்கையிட்டிருப்பது, வேண்டும் என்றே உண்மையை மறைக்கப் பார்க்கும் ஒரு முயற்சி என்று விளக்கிய புலிகள், ஐயாயிரத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருப்பதைத் தாம் ஏற்கனவே உறுதியான ஆதாரங்களுடன் நிரூபித்திருக்கின்றனர் எனக் கூறினார். இந்தியர் மேற்கொண்ட ஆயுதக் களைவு முயற்சி வெற்றியளித்து இருப்பதாகவும், விடுதலைப் புலிகள் போராடும் வீச்சை இ[illegible] காடுகளுக்குள் ஓரங்கட்டப்பட்டிருக்கின்றனர் எனவும் இந்திய தூதர் கூறியிருக்கின்றமையைப் புலி அணியினர் நிராகரித்தனர். தமது கெரில்லாப் போராளிகள் வடக்கு கிழக்கு முழுவதிலும், இந்தியப் படைகளுடன் பொருதிக் கொண்டிருக்கின்றனர் எனவும், கணிசமான உயிர்ப் பாதிப்பை அவர்கள் ஏற்படுத்துகின்றனர் எனவும் இந்திப் படைகள் மனம் தளர்ந்து போகச் செய்யப்பட்டிருக்கிறார்கள் எனவும் புலிகள் கூறினர். விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆயுதக் களைவை நடத்தும் இந்திப் படைகள் தமிழ்க் குழுக்களுக்கு ஏன் ஆயுதங்கள் வழங்கிக் கொண்டிருக்கின்றன என்றும், தமிழ்த் தேசிய இராணுவம் என்ற பெயரில் தொண்டர் படை ஒன்றை ஏன் திரட்ட வேண்டும் என்றும் கேட்டார்கள். இத்தகைய நடவடிக்கைகள் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் உண்மையான நோக்கத்தையும் அதன் முக்கிய கடப்பாடுகளையும் மீறுவதாகும் என்றும் புலிகள் வாதிட்டார்கள். தமிழ் மக்களின் அன்றாடப் பொருளாதார நடவடிக்கைகள் மீது இந்திய இராணுவம் விதிக்கும் வெவ்வேறு கட்டுப்பாடுகளாலும், தடைகளாலும் வடக்கு - கிழக்கில் உள்ள விவசாயம், கைத்தொழில், மீன்பிடி ஆகியவை வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றமையையும் இதன் விளைவாகத் தமிழ் மக்கள் மோசமான துயரங்களையும் அனுபவிக்கிறார்கள் என்றும் புலிகளின் அணி விரிவாக எடுத்துரைத்தது. கூட்ட முடிவிலே இந்திய உயர்ஸ்தானிகருக்குப் பதிலளிக்கும் வகை[illegible]யிலே எமது கருத்துக்களைக் கூட்[illegible] கையிலே உள்ளடக்குமாறு ஹமீது[illegible] வாதாடி வெற்றி பெற்றோம்.


(தொ[illegible])

## ரயிலுக்கு கல் எறிந்த மூவர் வவுனியாவில் வைத்துக் கைது!

யாழில் இருந்து கொழும்பு நோக்கி நேற்று முன்தினம் இரவு சென்ற ரயில் மீது கல்வீச்சு நடத்தப்பட்டிருந்தது. இந்தச் சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் வவுனியாவைச் சேர்ந்த 20 வயது மதிக்கத்தக்க இளைஞர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இவர்களை வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்றும் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## மெய்வன்மைப் போட்டி பதிவுகள்



யாழ். கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலையின் இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் அதிபர் கு.அகிலன் தலைமையில் நடைபெற்றன. (ஐ)



வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலையின் அதிபர் நடராஜா வாகீசன் தலைமையில் நடைபெற்றன.

முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் வெற்றியீட்டிய வீர வீராங்கனைகளுக்கு கேடயம் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

# பூந்தோட்டம் முகாம் மக்கள் பிரச்சினை: ஆராய்ந்துள்ளனர் தெற்கு இளைஞர்கள்!





வவுனியா, பெப்.27

வவுனியா பூந்தோட்டம் முகாம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தென்பகுதி இளைஞர், யுவதிகள் கேட்டறிந்தனர். 20 வருட முகாம் வாழ்க்கை அறிந்து நெகிழ்ச்சியடைந்தனர்.

தென்பகுதியில் இருந்து வருகை தந்த இளைஞர், யுவதிகள் நேற்று முன்தினம் அவர்களைப் பார்வையிட்டதுடன் அவர்களது பிரச்சினைகள் தொடர்பிலும் கேட்டறிந்தனர்.

அன்புக்கும் நட்புக்குமான இளைஞர் வலையமைப்பின் ஏற்பாட்டில் தெற்கின் மாத்தறை, மொனராகலை ஆகிய பகுதிகளில் இருந்து வருகைதந்த சிங்கள மற்றும் தமிழ் இளைஞர், யுவதிகள் 20 பேரே இவ்வாறு அங்கு சென்றனர்.

இதன்போது அந்த மக்களின் அடிப்படை வசதிகளின் நிலை, மாணவர்களின் கல்வி நிலை, வாழக்கூடிய சூழல் தொடர்பிலும் அவர்கள் ஆராய்ந்தனர்.

இது தொடர்பில் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்:-

பூந்தோட்டம் முகாமில் தற்காலிக கொட்டகைக்குள் தங்கியுள்ள மக்களைச் சந்தித்தோம். அவர்கள் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இங்கு இருக்கிறார்கள். அவர்களுக்காக ஒழுங்கான வீடு, மலசலகூடம், மின்சாரம், குடிதண்ணீர் என்று எதுவும் இல்லை.

இங்குள்ள மாணவர்கள் கூட கல்வியைத் தொடர முடியாத நிலையில் பாடசாலை கல்வியை இடை விடுபவர்களாக வுள்ளனர்.

எம்மைப் போன்ற தென் பகுதிகளில் வாழும் பலருக்கும் இது தெரியாது.

இங்குள்ள மக்களின் நிலைமை மற்றும் வடக்கின் உண்மை நிலை தொடர்பில் நிச்சயமாக தெற்கில் தெரியப்படுத்தி மக்கள் மத்தியில் உள்ள சில தவறான எண்ணங்களை நீக்க நாம் முயற்சிப்போம்.

இங்குள்ள மாணவர்கள் உள ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் கல்வியைத் தொடர முடிந்த உதவிகளையும் பெற்றுக் கொடுக்க முயல்வோம்.- என்றனர். (ஐ-100)

## அரிசிக்கு அதிக விலை; 1900 பேர் கைது!

அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த ஆயிரத்து 900 வர்த்தகர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இவர்களில் ஆயிரத்து 300 பேருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் நாடு முழுவதும் சுற்றிவளைப்புக்களை மேற் கொண்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

# முன்னாள் புலனாய்வுப் பொறுப்பாளரின் வங்கிக் கணக்கில் 32 இலட்சம் ரூபா!

### பல பிரதேசங்களில் இருந்தும் வைப்பிலிடப்பட்டுள்ளது

கொழும்பு, பெப்.27

இலங்கையின் முன்னாள் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளரின் வங்கிக் கணக்கில் 3.2 மில்லியன் ரூபாவைப் பிலிடப்பட்டுள்ளது என்று நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரணவின் இலங்கை வங்கியில் உள்ள வங்கிக் கணக்கிலேயே பல பிரதேசங்களில் இருந்து பணம் வைப்பிலிடப்பட்டமை தெரியவந்துள்ளது.

அந்தவகையில் அவரது நடப்புக் கணக்கில், யாழ்ப்பாணம், கொட்டாஞ்சேனை, அக்கரைப்பற்று, தம்பிலுவில், நுகேகொட, கொள்ளுப்பிட்டி, திருநெல்வேலி, பம்பலப்பிட்டி ஆகிய இடங்களில் இருந்து வைப்பில் இடப்பட்டுள்ளது.

இவ்வாறு வைப்பிலிட்ட பணம் மேஜர் ஜெனரல் ஹெந்தவிதாரண, மற்றும் ஐ.எம்.ஜி.குமார, பராகொடகம கே.வசந்த டயஸ், மற்றும் வஜிர லியனகே ஆகியோரால் மீளப் பெறப்பட்டுள்ளது என்று சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

## மஹிந்தவின் ஆட்சியிலும் பார்க்க அரிசி விலை தற்போது குறைவே!

### நிதி அமைச்சர் கருணாநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, பெப்.27

அரிசியின் விலை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தை விடத் தற்போது குறைந்துள்ளது என்று நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித் துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பொன்றின் போதே அமைச்சர் இதனை கூறியுள்ளார். இதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் வாழ்க்கைச் செலவு அதிகரிக்க வில்லை. அத்தியாவசியமான சில பொருள்களின் விலைகள் மாத்திரமே அதிகரித் துள்ளன.

கடந்த அரசின் காலத்தை விட 23 அத்தியாவசிய பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

முழு வாழ்க்கை செலவும் தற்போது அதிகரிக்கவில்லை. அரிசியின் விலையை மாத்திரமே குறைக்க முடியவில்லை.

எனினும், கடந்த ஆட்சிக் காலத்தில் 80 ரூபா முதல் 105 ரூபா வரையான விலையில் விற்பனை செய்யப்பட்ட அரிசி தற்போது 72 ரூபா முதல் 100 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகிறது.-என்றார்.

# அரசு- ஹெல உறுமயவின் இரகசியங்கள் அம்பலத்துக்கு!

### விரைவில் வரும் என்கிறார் ரத்னதேரர்



கொழும்பு, பெப்.27

அரசுக்கும் ஜாதிக ஹெல உறுமய கட்சிக்கும் இடையிலான சகல இரகசியங்களும் அம்பலப்படுத்தப் படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்வண. அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

வார இறுதிப் பத்திரிகை யொன்றுக்கு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நாடாளுமன்றில் சுயாதீனமான நாடாளுமன்ற உறுப்பினராக அமர்வதற்கு பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்தின.

அரசின் நடவடிக்கைகள் குறித்து மக்களின் நம்பிக்கை நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து செல்கின்றது.

நாட்டை மீளவும் கட்டியெழுப்ப முடியாத வகையில் நாடு சீரழிந்து செல்கின்றது. இந்த நிலைமையின் கீழ் தற்போதைய அரசை ஆட்சிப் பீடத்தில் ஏற்றிய தரப்புக்கள் தொடர்ந்தும் அமைதி பேண முடியாது.

ஜாதிக ஹெல உறுமய என் மீது சுமத்தும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான பல உண்மைகளை அம்பலப்படுத்துவேன்.

எதிர்வரும் நாள்களில் இந்த உண்மைகள் அம்பலப்படுத்தப்படும்.- என்றார். (ஐ)

# ஊடகவியலாளரை இலக்கு வைத்து செயற்பட்ட விசேட இராணுவப் பிரிவு!

## கொழும்பு ஊடகம் வெளியிட்டுள்ள தகவல்

கொழும்பு, பெப்.27

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் ஊடகவியலாளர்களை இலக்கு வைத்து விசேட இராணுவப் புலனாய்வுப் பிரிவு ஒன்று செயற்பட்டமை அம்பலத்துக்கு வந்துள்ளது என்று கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஊடகவியலாளர் கீத நொயார் மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பில் குற்றப்புலனாய்வு ப்பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளில் இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம்தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளவை வருமாறு:-

இலங்கை இராணுவ புலனாய்வுப் பிரிவின் கீழ் செயற்பட்ட அதிகாரிகளால் இந்த விசேட பிரிவு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

வடக்கு, கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் இடம்பெறும் செயற்பாடுகள் தொடர்பில் ஊடகங்களுக்குச் செய்தி வெளியிடும் ஊடகவியலாளர்களை இலக்கு வைப்பதே இந்தப் பிரிவின் செயற்பாடாகும்.

அரசை விமர்சிக்கும் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தல், தாக்குதல், கடத்திச் சென்றுகாணாமல் ஆக்குவது மற்றும் கொலை செய்தல் ஆகிய நடவடிக்கைகள் இந்தப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 30 இற்கும் அதிகமான ஊடகவியலாளர்கள் மற்றும் தெற்கில் லசந்த விக்கிரமதுங்க கொலை மற்றும் கீத் நொயார் மற்றும் உபாலி தென்னக்கோன் ஆகிய ஊடகவியலாளர்களைத் தாக்கிய சம்பவங்கள் இந்தப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் பிரகித் எக்னெலிகொடவை கடத்திச் சென்று காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துக்கும் இந்தப் பிரிவுக்கும் இடையில் தொடர்பு இருந்ததாக தகவல் வெளியாகியுள்ளது என்றும் பொலிஸ் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கீத் நொயாரை தாக்கியமை தொடர்பில் தற்போது வரையில் கைது செய்யப்பட்டுள்ள இராணுவப்புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்கள் ஐவரும் தங்கள் செயற்பாடுகள் தொடர்பில் மேலும் சில தகவல்களை பகிரங்கப் படுத்தவுள்ளனர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.- என்று அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

(ஐ)







யாழ்.சர்வோதய நிலையத்தில் எம்.ஜி.ஆரின் 100 ஆவது ஜனன தின விழா நடைபெற்றபோது 120 கலைஞர்களுக்கு கலைமாமணி விருது வழங்கப்பட்டது. கலைஞர் தாஜ்மகான் முதலாவது விருதைப் பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவர் ஆர். நடராஜன் விருதுகளை வழங்கினார். (ஐ-19)

## ஐ.தே.கவின் துணைத் தலைவராக பொன்சேகாவை நியமிக்கத் திட்டம்

பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத் தலைவராக நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரம் தொடர்பான செயற்பாடுகளை வைத்துக் கொண்டே நியமனம் வழங்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, வடக்கு, கிழக்கில்இடம்பெற்ற யுத்தத்தில் கடமையாற்றியவர்.

எனவே பொன்சேகாவால் கட்சியின் பிரகாரங்களில் சிறந்த பங்களிப்புக்களை செய்ய முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத் தலைவர் நிலையை உடனடியாகக் கட்சித் தலைவர் மாற்றவுள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது கட்சியின் துணைத் தலைவராக அமைச்சர் சஜித் பிரேமதாசவும் அவருக்கு பின்னர், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவும் அங்கம் வகித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வவுனியா வளாகத்தைப் பல்கலைக் கழகமாக்கக் கோரும் கவனவீர்ப்புக்கு அணி திரளுங்கள்

**சிவசக்தி ஆனந்தன் எம்.பி. வேண்டுகோள்**

வவுனியா, பெப்.27

யாழ். பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகத்தை வன்னிப் பல்கலைக் கழகமாகத் தரமுயர்த்த வேண்டும்என்பது வன்னி வாழ் மக்களின் நீண்டநாள் கோரிக்கை. இது தொடர்பில் நாளை செவ்வாய்க்கிழமை வவுனியாவில் இடம்பெறவுள்ள கவனவீர்ப்புப் போராட்டத்தில் அனைவரும் அணிதிரளுங்கள்.

-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நான் நாடாளுமன்றத்திலும் இது குறித்து தொடர்ந்து உரையாற்றி வந்துள்ளேன். கடந்த செப்ரெம்பர் 22 ஆம் திகதி அன்று நாடாளுமன்றத்தில் பல்கலைக் கழகத் திருத்தச் சட்ட மூல விவாதத்தில் வன்னிப் பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்பட வேண்டும் என்று கோரிக்கையை முன்வைத்து உரையாற்றிய போதே, உயர்கல்வி அமைச்சர் அதற்கான சம்மதத்தை தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் பல்கலைக் கழகமாக தரமுயர்த்துவதற்கான நடவடிக்கைகளைத் துரிதப் படுத்து மாறு வலியுறுத்தி நாளை கவனவீர்ப்புப் பேரணி ஒன்று நடத்தப் படவுள்ளது.

வன்னிக்கென்று தனியான பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்பதில் நாம் அனைவரும் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளோம் என்பதை வெளிப்படுத்த வேண்டிய தருணம் இது.

எமது எதிர்கால சந்ததிகள் எமது பல்கலைக்கழகத்தில் படித்து பட்டம் பெற்று உலகுக்கு எடுத்துக் காட்டாகத் திகழ வேண்டும் என்பதே நம் அனைவரதும் எதிர்பார்ப்பாகவும் வேண்டுதலாகவும் இருக்கின்றது.

இந்த நிலையில், நாளை முற்பகல் 10 மணிக்கு வவுனியா குருமன்காட்டிலிருந்து ஆரம்பமாகும் கோரிக்கை பேரணியில் வன்னியைச் சேர்ந்த கல்விச் சமூகத்தினர், பல்கலைக்கழக ஆசிரியர் மாணவர்கள், பொது அமைப்புகள், தொழிற் சங்கங்கள், பொது மக்கள், சமூக ஆர்வலர்கள், பெண்கள் அமைப்பினர் என்று அனைவரையும் அணிதிரளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

எமது இளைய சமுதாயத்தினருக்காக நாம் நடத்தும் வேள்வியில் அனைவரும் அர்ப்பணிப்புடன் அணிதிரள்வோம்.- என்றார்.



(ஐ-100)

## பொதுச் சபைக் கூட்டம்

வெற்றிலைக்கேணி, பெப்.27

வடமராட்சி கிழக்கு கடல் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளன என்று சமாசத்தினர் அறிவித்துள்ளனர்.

இன்று முற்பகல் 10 மணிக்கு சமாசத்தின் தலைமை அலுவலகத்தில் அதன் தலைவரும் மருதங்கேணிப் பிரதேசசெயலருமான க.கன கேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கவுள்ளார். (ஐ-[illegible])

# வவுனியா இளைஞன் கொலை சந்தேகத்தில் ஒருவர் கைது!

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் கடந்த மாதம் இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் 11 ஆம் திகதி பிற்பகல் வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து இளைஞன் ஒருவனின் சடலம் மீட்கப்பட்டிருந்தது.

தீவிர விசாரணைகளை நடத்திய பொலிஸார் கொலையெனக் கண்டறிந்த நிலையில் சந்தேக நபரைத் தேடிவந்தனர். இந்த நிலையில், கொலை நடந்த தினத்தன்று அந்த வீட்டில் நின்ற ஒருவரையே பொலிஸார் தேடி வந்தனர். அவர் மருதானை பகுதியில் விடுதி ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த நபர் மீதான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் நபரை வவுனியா நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப் பட்டது.

(ஐ-100)

## பத்மநாப சுவாமி கோயிலில் நேற்றுக் காலை தீ விபத்து



திருவனந்தபுரம், பெப்.27

கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில் உள்ள பத்ம நாப சுவாமி கோயிலில் நேற்றுக் காலை திடீரென தீவிபத்து ஏற்பட்டது.

கோயிலின் வடக்கு வாயிலில் இருந்து 25 மீற்றர் தொலைவில் உள்ள குடோனில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டது. இதுகுறித்து தகவல் அறிந்ததும் 16 தீயணைப்பு வாகனங்களுடன் அங்கு சென்ற தீயணைப்புத் துறையினர் தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இந்தத் தீ விபத்தில் 2 பேர் காயமடைந்துள்ளனர். இந்த விபத்துக் குறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. (எ)

# ஈழத்தமிழர் விவகாரத்தை இளைஞர் மத்தியில் கொண்டு செல்லத் தீர்மானம்

## பா.ம.க. இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவிப்பு



சென்னை, பெப்.27

ஈழத் தமிழர் பிரச்சினையை இளைஞர்கள் மத்தியில் கொண்டு செல்லத் திட்டமிட்டு இருப்பதாக பா.ம.க. இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

பசுமை தாயகம் சார்பில், ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 34 ஆவது கூட்டத் தொடர் குறித்த கலந்துரையாடல் சென்னையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு, அன்புமணி ராமதாஸ் தலைமை ஏற்று, "ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை-அடுத்தது என்ன?" என்ற கையேட்டை வெளியிட்டு வைத்து பேசிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் எமது தொப்புள்கொடி உறவுகள் ஒரு இலட்சம் பேர் இனப்படுகொலை செய்யப்பட்டனர். இந்த விவகாரம் குறித்து, பசுமை தாயகம் சார்பில் 2009 ஆண்டில் இருந்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அழுத்தம் கொடுத்து வருகிறோம்.

2015ஆம் ஆண்டு, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் பேசும் போது, இலங்கை விவகாரத்தில் இந்தியா மௌனமாக இருக்கிறது என்று பகிரங்கமாக எடுத்துரைத்தேன்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், முதல்முறையாக இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நடைபெற்றன. அதில் தமிழர்கள் பாதிக்கப்பட்டனர் என்று கூறப்பட்டிருந்தது.

இனப்படுகொலை என்றுதெரிவிக்கவில்லை என்றாலும், அதற்கு இணையான அத்தனை கருத்துகளும் அதில் இடம் பெற்றிருந்தன. இருப்பினும் அவற்றை இலங்கை அரசு நீர்த்துப் போகச் செய்தது. பின்னர், இலங்கை அரசு ஒரு தீர்ப்பாயத்தை அமைத்து, 25 தீர்மானங்களை நிறைவேற்ற இருப்பதாகக் கூறி, இதுவரை பயனற்ற 3 தீர்மானங்களை மட்டுமே நிறைவேற்றி இருக்கிறது.

இவற்றுக்குக் காரணம், இந்திய அரசின் மெத்தனப் போக்குதான். தற்போதைய பா.ஜ.க. அரசு இலங்கை அரசின் வணிகத் தேவைக்காக ஈழத் தமிழர்கள் விடயத்தில் தயக்கம் காட்டுகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் எதிர் வரும் மார்ச் 22 ஆம் திகதி ஒரு தீர்மானம் கொண்டுவரப்படுகிறது. 2015 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தீர்மானத்தில் உள்ள அம்சங்களை புதிய தீர்மானத்தில் எந்தளவும் குறைக்கக் கூடாது. ஐ.நா. பாதுகாப்புக் குழுவால் மட்டுமே இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க முடியும்.

எனவே, ஈழத்தமிழர் பிரச்சினையை ஐ.நா. பொதுச்சபை மூலமாக ஐ.நா. பாதுகாப்புக் குழுவுக்குக் கொண்டு செல்ல வேண்டும். ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் இந்திய அரசு தீர்மானம் கொண்டு வர வேண்டும்.

ஏறுதழுவுதல் பிரச்சினைக்கு இளைஞர்கள் அழுத்தம் கொடுத்ததன் காரணமாக மத்திய அரசு அடிபணிந்தது. ஆகையால், ஈழத்தமிழர் பிரச்சினையையும் இளைஞர்கள் மத்தியில் கொண்டு செல்லத்திட்டமிட்டு இருக்கிறோம்.- என்றார். (எ)

# ஏறுதழுவுதலுக்காக போராடிய இளைஞர்களால் 'என் தேசம் என் உரிமை' புதிய கட்சி உதயம்



சென்னை, பெப்.27

சென்னை, மெரினா கடற்கரையில் ஏறுதழுவுதலுக்காக போராட்டம் மேற்கொண்ட இளைஞர்கள் இணைந்து புதிய கட்சி ஒன்றை நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளனர்.

புதிய அரசியல் கட்சிக்கு "என் தேசம் என் உரிமை' என்று பெயரிட்டுள்ளனர். கட்சியின் ஒருங்கிணைப்பாளர்கள் கட்சியின் பெயரை அறிவித்துள்ளனர். அத்துடன் கட்சிக் கொடியையும் அறிமுகம் செய்தனர். தேசியக் கொடியின் வண்ணமும், கொடியின் நடுவில் இளைஞர் ஒருவர் அடிமைச் சங்கிலியை உடைப்பது போன்ற படமும் இடம் பெற்றுள்ளது. புதிய கட்சிக்கு உறுப்பினர்களை இணைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

## மணிப்பூரில் பா.ஜ.க.ஆட்சியேற்றால் பொருளாதார முடக்கத்துக்கு முடிவு

### பிரசாரக் கூட்டத்தில் உறுதியளித்தார் மோடி

மணிப்பூரில் பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வந்தால் பொருளாதார முடக்கத்துக்கு முடிவு கட்டப்படும் என்று பிரதமர் மோடி உறுதியளித்துள்ளார்.

வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான மணிப்பூரில் எதிர்வரும் மார்ச் மாதம் 4 மற்றும் 8 ஆம் திகதிகளில் சட்டசபைத் தேர்தல் இடம்பெறவுள்ளது.

இதில் போட்டியிடும் பாரதீய ஜனதாக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் நரேந்திர மோடி நேற்றுமுன்தினம் பிரசாரம் முன்னெடுத்துள்ளார்.

இம்பால் மேற்கு மாவட்டத்துக்கு உட்பட்ட லாங்ஜிங் அச்சவுபா மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மாநில காங்கிரஸ் அரசையும், முதலமைச்சர் இபோபி சிங்கையும் கடுமையாக விமர்சித்தார்.

5 ஆண்டுகள் ஆட்சி செய்ய பாரதீய ஜனதாவுக்கு ஒருவாய்ப்புத்தாருங்கள். காங்கிரஸ் கட்சியால் செய்ய முடியாததை நாங்கள் செய்வோம். அவர்கள் 15 ஆண்டுகளில் செய்ய முடியாததை 15 மாதங்களில் செய்து முடிப்போம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

## பழனிச்சாமி முதல்வராக இருக்கும்வரை நான் தமிழனாக இருக்க மாட்டேன்!

### உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி வேதனை

எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக இருக்கும் வரை நான் தமிழனாக இருக்க மாட்டேன் என்று உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி மார்கண்டேய கட்ஜூ தெரிவித்தார்.

இந்தநிலையில் அவர் தனது 'பேஸ்புக்' பக்கத்தில், சசிகலாவின் தீவிர ஆதரவாளரான பழனிச்சாமி முதலமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளநிலையில் மக்கள் எதையும் செய்யாதது குறித்து கவலை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர், நீங்கள் மாபெரும் சேர, சோழ, பாண்டியர்களின் சந்ததியினர். திருவள்ளுவர், இளங்கோ அடிகள், கம்பர், ஆண்டாள், சுப்பிரமணிய பாரதி ஆகியோரின் பரம் பரையினர். ஆனால் எந்த எதிர்ப்பும் காட்டாமல், இதை (பழனிச்சாமி முதலமைச்சர் ஆக்கப்பட்டதை) ஏற்றுக் கொண்டது வெட்கமாக இல்லையா? என்று கேள்வி எழுப்பி உள்ளார்.

அத்துடன், நானும் ஒரு தமிழன் என்று பெருமையுடன் கூறி வந்துள்ளேன். ஆனால் எந்த முகத்தை வைத்துக் கொண்டு நான் இனி இப்படிச் சொல்வேன்? - என்றார். (எ)

# உத்தரப் பிரதேசத்தில் இன்று ஐந்தாவது கட்டத் தேர்தல்

51 தொகுதிகளில் வாக்குப் பதிவு-நடக்கும்



உத்தரப் பிரதேசத்தில் 5 ஆவது கட்டத் தேர்தலை சந்திக்கவுள்ள 51 தொகுதிகளில் இன்று திங்கட்கிழமை வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது.

உத்தரப் பிரதேச சட்ட சபைத் தேர்தல் நாடு முழுவதும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் ஏழு கட்டமாக தேர்தலை சந்திக்கும் அந்த மாநிலத்தில் 4 கட்டத் தேர்தல் முடிவடைந்தநிலையில், 5 ஆவது கட்டமாக இன்று 51 தொகுதிகளில் வாக்குப்பதிவு இடம் பெறவுள்ளது.

இந்தத் தேர்தலில் முக்கிய வேட்பாளர்களில் 9 அமைச்சர்களும் சட்ட சபை சபாநாயகர் மாதா பிரசாத் பாண்டேயும் போட்டியிடுகின்றார்.

ஒரு கோடியே 84 இலட்சம் வாக்காளர்கள் தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றவுள்ள நிலையில், அவர்களுக்காக 19 ஆயிரத்து 167 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

வாக்களிப்பு இன்று காலை 8 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டு, மாலை 5 மணி வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது.

வாக்குப்பதிவு நடைபெறவுள்ள தொகுதிகளுக்கு மின்னணு வாக்கு இயந்திரங்களையும், பிற பொருள்களையும் வாக்குச்சாவடிகளுக்கு எடுத்துச் செல்லும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, 6 ஆவது கட்டமாக 49 தொகுதிகளில் எதிர்வரும் மார்ச் 4 ஆம் திகதி வாக்குப் பதிவு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## வெள்ளை மாளிகை விருந்தில் பங்கேற்கேன்!

### அமெ.ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவிப்பு

வொஷிங்டன், பெப்.27

வெள்ளை மாளிகை விருந்தில் கலந்து கொள்ளப்போவதில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில், 2017 ஆம் ஆண்டுக்காக, ஊடகவியலாளர் சபையால் ஒருங்கிணைக்கப்படும் விருந்திலேயே தாம் கலந்துகொள்ளப் போவதில்லை என்றும் அவர் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவில் ஆண்டு தோறும் ஊடகவியலாளர்களுடன் இராப்போசனவிருந்து வெள்ளை மாளிகையில் இடம் பெற்று வருகிறது.

இந்தநிலையில், ட்ரம்பின் இந்த அறிவிப்பு அமெரிக்காவில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.


இதனையடுத்து அமெரிக்காவின் பாரம்பரியத்தை ட்ரம்ப் மீறுகிறார் என்று விமர்சனங்கள் எழுந்துள்ளன.

நேற்றுமுன்தினம் வெள்ளை மாளிகையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றுக்கு பிபிசி, சி.என்.என் உட்படபல ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

அமெரிக்க ஊடகங்கள்தவறானசெய்திகளைப் பரப்புகின்றன என்றும் ஊடகங்கள் அரசுக்கு எதிரானவையாக இருக்கின்றன என்றும் ட்ரம்ப் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில், ட்ரம்ப் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் இந்த ஆண்டுநடைபெறஇருக்கும் வெள்ளை மாளிகை ஊடகவியலாளர்கள் ஆணையத்தின் விருந்து நிகழ்வில் நான் கலந்து கொள்ளமாட்டேன்என்றும் பதிவிட்டுள்ளார். (எ)

## ட்ரம்புக்கு எதிராகத் திரண்ட ஹொலிவூட் பிரபலங்கள்!




அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஹொலிவூட் திரைப்பட உலகினர் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் குடியேற்றக் கொள்கைகளுக்கு எதிராக நேற்றுமுன்தினம் போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டத்தில் மைக்கேல் பாக்ஸ், ஜோடி போஸ்டர், வில்மர் வால்டெர்ரமா உள்ளிட்ட 500 இற்கும் மேற்பட்ட ஹொலிவூட் நட்சத்திரங்கள் கலந்து கொண்டனர்.

## தெரேசா மேயின் கட்சி இடைத் தேர்தலில் வெற்றி



லண்டன், பெப்.27

பிரிட்டனில் நடைபெற்ற இடைத்தேர்தலில் பிரதமர்தெரேசாமே தலைமையிலான பழமை வாதக் கட்சிவெற்றிபெற்றுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டனை வெளியேற்றும் தெரேசா மேயின் திட்டத்துக்குக் கிடைத்த முதலாவது வெற்றியாக இந்த வெற்றி கருதப்படுகின்றது.

பிரிட்டனின் வடமேற்குப் பகுதியான கோப்பேலாண்ட் தொகுதி 1935 ஆம் ஆண்டு முதல் தொழிற் கட்சியின் வசமே இருந்து வந்துள்ளது.

35 ஆண்டுகளுக்குப் பின்னர் இடைத் தேர்தல் ஒன்றில் ஆளும் கட்சி வெற்றிபெற்றுள்ளது இதுவே முதல் தடவை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்தத் தோல்வி தொழிற் கட்சியின் தலைவர் ஜெரமி கோபினுக்குப் பெரும் நெருக்கடியைத் தோற்றுவிக்கும் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (எ)

# குடியேற்றவாசிகள் 2,750 பேர் இத்தாலிக் கடற்பரப்பில் மீட்பு!

### கடந்த நான்கு தினங்களில் மட்டும்

இத்தாலிய கடலோர காவற்படையினரால் 2 ஆயிரத்து 750 குடியேற்றவாசிகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

கடந்த நான்கு நாள்களில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதே அவர்கள் மீட்கப்பட்டுள்ளார்கள் என்றும் அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மத்திய தரைக்கடலூடாக அதிகளவான குடியேற்றவாசிகள் ஐரோப்பாவை நோக்கிப் படையெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு ஐரோப்பாவுக்குச் செல்லும் குடியேற்றவாசிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



அத்துடன் கடந்த நான்கு நாள்களுக்குள் மீட்கப்பட்ட குடியேற்றவாசிகளின்எண்ணிக்கை, கடந்த வருடம் பெப்ரவரி மாதத்தில் மீட்கப்பட்ட குடியேற்றவாசிகளின் மொத்தத் தொகையையும் விட அதிகம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஐந்து வெவ்வேறான மீட்பு நடவடிக்கைகளின் போது சுமார் 250 குடியேற்றவாசிகள் மீட்கப்பட்டனர் என்றும் கடலோர காவலதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, 2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து கடற்பயணம் மூலம் இத்தாலியை வந்தடைந்த குடியேற்றவாசிகளின்எண்ணிக்கை 10 ஆயிரத்து 700 என இத்தாலியின் உள்துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு குடியேறுபவர்கள் லிபியாவினூடாகவே ஐரோப்பாவுக்குள் நுழைகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, குடியேற்றவாசிகளின் வருகையைக் கட்டுப்படுத்தும் பொருட்டு இத்தாலி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பன லிபியாவில் உள்ள குடியேற்றவாசிகளின் முகாம்களுக்கு நிதியுதவி வழங்க தீர்மானம் மேற்கொண்டமை சுட்டிக்காட்டத்தக்கது. (எ)

# வடகொரிய ஜனாதிபதியின் சகோதரரை கொலை செய்ய 90 அமெரிக்க டொலர்!

வடகொரிய ஜனாதிபதியின் அண்ணனைக் கொலை செய்ய 90 அமெரிக்கடொலர்(6ஆயிரம் ரூபா) கூலி வழங்கப்பட்டதாக கொலையாளிப் பெண் வாக்குமூலம் அளித்துள்ளார்.

வடகொரிய ஜனாதிபதிகிம் ஜாங்-யங் உன் அண்ணன்கிம்ஜாங்-நம். இவர் மலேசியதலைநகர் கோலாலம்பூர் விமான நிலையத்தில் கடந்த 13 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார்.

அவரது முகத்தில் வி.எக்ஸ் என்னும் கொடிய இரசாயன விஷத்தை வீசி இந்தக் கொலை நடத்தப்பட்டது. இந்த இரசாயனப் பொருளை விமான நிலையத்தில் அமர்ந்திருந்த கிம்ஜாங்-நம் முகத்தில் ஒரு பெண் வீசியது அங்கிருந்த கண்காணிப்புக்கமராவில் பதிவாகி இருந்தது.

அதைத் தொடர்ந்து தேடப்பட்டு வந்த இந்தோனேசியப்பெண்ணான சிதி அய்சியாவை பொலிஸார் கைது செய்தனர். அவரிடம் பொலிஸார் விசாரித்தனர்.

அப்போது விமான நிலையத்தில் இருந்த தன்னிடம் 4 பேர் ஒரு விதமான பொருளைக் கொடுத்தனர். வி.வி. வேடிக்கை நிகழ்ச்சிக்காக அதனை ஒரு நபர் மீது வீசவேண்டும் என்றனர். அந்தப்பொருள் குழந்தைகள் உடலில் தடவும் வாசனை எண்ணெய் என்றும் கூறினர்- என்றார்.

அதற்காக தனக்கு 90 அமெரிக்க டொலர் (6 ஆயிரம் இந்திய ரூபா) தந்தனர் என்றும் அவர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

இந்த வழக்குத் தொடர்பாக வியட்நாமைச் சேர்ந்த டோன்திஹுவாங் என்ற பெண்ணும் கைது செய்யப்பட்டார்.

### கொலையாளிப் பெண் வாக்குமூலம்!!

கொலை செய்யப்பட்டகிம்ஜாங்-நம் வடகொரிய முன்னாள் ஜனாதிபதி கிம் ஜாங்-இல்லின் முதலாவது மனைவியின் மகன் ஆவார். இவரை குடும்பத்தில் இருந்தும், அரசியலில் இருந் தும் அதிபர் கிம் ஜாங் -இல் ஒதுக்கி வைத் திருந்தார்.

மேலும் இளைய மகனான தற்போதைய ஜனாதிபதி கிம் ஜாங்-யங்கை தனது அரசியல் வாரிசாக அறிவித்தார். அதையடுத்து வடகொரியாவில் இருந்து வெளியேறிய கிம்ஜாங்-நம் சீனாவின் மக்காவ் பகுதியில் தங்கியிருந் தார்.

இந்தநிலையில், அவர் கடந்த 13 ஆம் திகதி மலேசியாவின் கோலாலம் பூரில் கொலை செய்யப்பட்டார். என்றாவது ஒருநாள் தனக்கு அவர் அரசியல் போட்டியாக வரலாம் என்று கருதி வடகொரிய ஜனாதிபதி கிம்ஜாங்-யங் கூலிப் படையை ஏவி அவரை கொன்று இருக்கலாம் என்ற வதந்தியும் பரவி வருகிறது. (எ)

## இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிங்கள பீடத்தில், 'தமிழ்த் தேசிய இனத்துவம்' என்ற தலைப்பில் சில தினங்களுக்கு முன்னர்தாம்வழங்கியகருத்துரையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்திருந்தார்.

பல்கலைக்கழக சிங்கள பீட மாணவர் மத்தியில் உரையாற்றிய அவர், "1926 இல், 1931 இல், 1934 இல், 1946 இல் சமஷ்டியை ஏற்கவோ, தமது தமிழர் தேசத்தை வலியுறுத்தவோ, இழந்த தமது இறைமையை நிலைநிறுத்தக் கோரவோ மறுத்த தமிழர்கள், இறுதியில் தமது தேசத்துக்காகப் போராட முற்பட்டார்கள்" என்பதைச் சுட்டிக்காட்டினார்.

தமிழர் தேசம் என்ற எண்ணக்கருவை – கோட்பாட்டை – தமிழர் மனதில் கிளர்ந்தெழ வைத்தவர்கள் சிங்கள, பௌத்த மேலாதிக்கத்தை பிரயோகிக்க முயன்ற சிங்களவரே என அவர் குற்றம் சுமத்தினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

### பண்டாரநாயக்கா முன்வைத்த சமஷ்டி

இலங்கைக்கு மிகச் சிறந்த செயற்பாட்டு ஏற்பாடாக, மிக நேர்த்தியான அரச கட்டமைப்பு முறையாக, சமஷ்டி முறைமையை 1926 இல் பிரேரித்த எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க அது குறித்து 'த மோர்னிங் லீடர்' பத்திரிகையில் ஐந்து கட்டுரைகளை வரைந்தார். அப்படிப் பத்திரிகையில் எழுதியமையுடன் அவர் நின்றுவிடவில்லை. அது குறித்து ஒரு பகிரங்க உரையும் அவர் நிகழ்த்தினார். அந்தப் பகிரங்க உரையும் கொழும்பில் நிகழ்த்தப்படவில்லை; மாத்தறையில் நிகழ்த்தப்படவில்லை; கண்டியில் நிகழ்த்தப்படவில்லை; ஆனால் யாழ்ப்பாணத்தில்தான் நிகழ்த்தப்பட்டது.

சமஷ்டி முறைமையே பொருத்தமானது என்ற அவரது அந்த ஒரேயொரு பகிரங்க உரை யாழ்ப்பாணத்தில்தான் நிகழ்த்தப்பட்டது. அப்படி அவர் யாழ்ப்பாணம் சென்று உரையாற்றியமைக்கு, சமஷ்டி முறைதான் இந்த நாட்டுக்கு சிறந்தது என்பதை யாழ்ப்பாணத்தமிழர்களுக்குவிளக்கி, அவர்களை அதற்கு இணங்க வைப்பதே நோக்கமாக இருந்தது என நான் நினைக்கிறேன். நாம் போக வேண்டிய பாதை சமஷ்டிதான் என்பதற்குத் தமிழர்களை இணங்க வைக்கும் முயற்சியில் அவர் இருந்தார். ஆனால், தமிழ் மக்கள் அதற்கு அப்போது இணங்கவே இல்லை.

இன்னும் கொஞ்சம் நான் விரிவுபடுத்திக் கூறுவதானால், அவர்கள் (தமிழர்கள்) ஒரு தேசம் கொண்ட நாடு அல்லது தேசங்கள் கொண்ட ஒரு நாடு இருப்பது போதுமானது, அதிகாரத்தைப் பகிர வேண்டிய தேவை இல்லை என்று அப்போது கருதினார்கள். அதனால், சமஷ்டி யோசனையை அவர்கள் நிராகரித்தார்கள். ஏன் அப்படிக் கூறுகின்றேன் என்றால், 1931 இல் கண்டியன் லீக் டொனமூர் ஆணைக்குழுவின் முன்னால் சென்று, மிகக் குறிப்பாக சமஷ்டி ஆட்சி முறைமையைக் கொண்ட மூன்று அலகுகளைக் குறிப்பிட்டுப் பிரேரித்த போது அதனைத் தமிழ் மக்கள் ஆதரிக்கவில்லை.

### சமஷ்டிக் கோரிக்கையை ஏற்க மறுத்த கோரிக்கைகள்

கண்டியன் லீக் திரும்பவும் ஒரு தடவை அதே சமஷ்டி யோசனையை சோல்பரி ஆணைக்குழு முன்வைத்தது. அப்போதும் கூட தமிழர்கள் அதனை ஆதரித்திருந்தால் இன்று நாம் பெரும்பாலும் சமஷ்டி ஆட்சி முறைமை ஏற்பாட்டில் இருந்திருப்போம்.

மீண்டும் 1934 இல் சுதந்திர இலங்கைக்கான பிரேரணை ஒன்றை சிலோன் கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்தது. வைத்திலிங்கம் – கெனமன் யோசனைத்திட்டம் என்று அழைக்கப்பட்ட அதுவும் கூட சமஷ்டி ஒழுங்கையே பிரேரித்து நின்றது.

பழைய – பிரபலமான – பல கட்சிகள், பிற்காலத்தில் தேர்தல் முறைகள் மூலம் வடக்கிலும் அக்கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்களை மக்கள் தெரிவு செய்திருந்த போதிலும், அக்கட்சிகளைச் சேர்ந்தோரும், கண்டியின் தலைவர்களும், பண்டாரநாயக்க போன்றோரும் சமஷ்டியை ஒரு யோசனைத் திட்டமாக முன்வைத்த போதெல்லாம் அவற்றைத் தமிழ் மக்கள் ஏற்கவேயில்லை. நிராகரித்தே வந்தார்கள். ஏனென்றால், அப்போதைய அந்த இலங்கையை ஒரு தேசம் கொண்ட நாடாகவே அவர்கள் கருதிவந்தார்கள் என்பதால்தான்.

### நிலைமை தலைகீழானது

ஆனால், இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர்தான் எல்லாம் மாறியது. சோல்பரி அரசமைப்பு ஒற்றையாட்சியைத் திட்டவட்டமாக மறுக்காவிட்டாலும், தனித்துப் பெரும்பான்மை ஆட்சி முறைமையின் கீழ், முதலில் கொண்டுவரப்பட்ட சட்டங்கள், (ஒரு தலைப்பட்சமாக) மக்களின் குடி உரிமைகளைப் பறிக்கின்றவையாக நிறைவேற்றப்பட்டமையால் முதன்முதலில் சமஷ்டிக் கோரிக்கை எழுந்தது.

நான் அங்கம் வகிக்கும் ஒரேயொரு கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி 1949 டிசெம்பர் 19 ஆம் திகதி பிறந்தது. அதன் பெயர் இலங்கைத் தமிழரசுக் கட்சி என்றாலும், அது சமஷ்டிக் கட்சி என்றே அழைக்கப்பட்டது. 1950கள், 60கள், 70களில் வெளியான உத்தியோக பூர்வ தேர்தல் முடிவுகளில் கூட அது சமஷ்டிக் கட்சி என்றே பதியப்பட்டது.

பெரும்பான்மையினரின் திணிப்பாகத்தான் அந்தக்கட்சி உடனடியாக உருவானது.

இருந்தாலும், அப்போதும் கூட சமஷ்டி என்பது இன்னொரு தேசம் என்று அர்த்தப்படும் என யாரும் கருதவே இல்லை. சமஷ்டி என்பது பிரிப்பு என்றாலும் அதனை யாரும் இன்னொரு தேசமாகக் கருத விழையவில்லை. அப்போது அத்தகைய சிந்தனை இருக்கவேயில்லை. இனியும் இருப்பது நல்லதல்ல என்பதுதான் எனது கருத்து.

### பௌத்த, சிங்கள மக்களுக்கான அரசமைப்பு

சிங்கள தேசத்துக்கு அப்பால் இன்னொரு தேசமும் இங்கு இருக்கின்றது என்ற எண்ணம் எழுபதுகளில்தான் எழுந்தது.

புதிய குடியரசு அரசமைப்பை உருவாக்குதற்காக தேசிய அரசுப் பேரவை ஸ்தாபிக்கப்பட்டு அங்கு சாதாரண பெரும்பான்மை வாக்குகள் மூலம் பலமான ஒரு தனித்த மக்கள் கூட்டத்தை மேம்படுத்தும் விதமான அரசமைப்பு அங்கீகரிக்கப்பட்ட போதே அது நிகழ்ந்தது.

அது சுதேசியத் தயாரிப்பு அரசமைப்பு என்று கூறப்பட்டாலும் கூட அது, சிங்கள மக்களுக்கு, இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால் சிங்கள, பௌத்த மக்களுக்கான சுதேசிய அரசமைப்புத்தான். அதுதான் அரசமைப்பு ரீதியாக முதல் தடவையாக சிங்களத்தை மட்டுமே அரச கரும மொழியாகவும் பௌத்தத்துக்கே மேன்மை இடம் கொடுக்கும் நிலையையும் கொண்டுவந்தது.

அதை நிறைவேற்றிய கணம் முதலே நீங்கள் ஏனையோரை இரண்டாம் தரப் பிரஜைகளாக்கினீர்கள்.

அவ்வாறு ஒரு தரப்புக்கு மேன்மையான உயர்ந்த இடம் கொடுக்கும் நிலைமை அரசமைப்பு ரீதியாக உருவாக்கப்பட்டு, உறுதி செய்யப்பட்டமை ஏனையோருக்கு தாங்கள் இந்தத் தேசத்தைச் சார்ந்தவர்கள் அல்லர் என்ற எண்ணத்தை உருவாக்கியது. அவர்கள் வெளியே விடப்பட்டார்கள். தாங்கள் ஏனையோருக்கு சமமாக மதிக்கப்படும் பிரஜைகள் அல்லர் என்ற எண்ணத்தை அது ஏற்படுத்தியது.

அதாவது, இந்த நாட்டில் சிங்கள பௌத்தர்களுக்கு மிக மேன்மையான, உயரிய இடம் உறுதிப்படுத்தப்பட்டது. அது சிங்களவர்கள் அல்லாத, பௌத்தர்களல்லாத மக்களுக்கு தாங்கள் இந்தத் தேசத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்ற சிந்தனையை ஏற்படுத்தியது.

### சிங்களவர்களின் கேள்வி

சிங்களத் தொலைக்காட்சி நிகழ்வு ஒன்றில் நான் கலந்து கொண்டபோது ஒருவர் என்னுடன் தொடர்புகொண்டு கேள்வி எழுப்பினார்.

"நீங்கள் ஸ்ரீலங்காவில் வசிக்கின்றீர்கள். ஸ்ரீலங்கா பிரஜை ஆகையால் உங்களை சிங்களவர் என்று அழைக்காமல் ஏன் வேறு பெயர் கொண்டு குறிப்பிட விரும்புகின்றீர்கள்?" – என்று அவர் கேட்டார்.

நான் அவருக்கு பதில் கூறினேன். "சரித்திர காலத்திலிருந்து இங்கு சிங்களம் என்ற பெயருடன் பழைமையான இனம் வாழ்ந்து வருவது எனக்குத் தெரியும். சிங்கள தேசம் இங்கு இருப்பதும் எனக்குத் தெரியும். நான் அதை மதிக்கிறேன். ஆனால், துரதிஷ்டவசமாக நான் அதனை சார்ந்தவன் அல்லன். அந்தத் தேசத்தைச் சார்ந்தவன் அல்லன். நான் என்னை சிங்களவன் என்று அழைக்க முடியாது. நான் தமிழன். எனது வம்சா வழி, இங்குள்ள சிங்களவர் போன்று அதேயளவு இத்தீவில் பழைமையானது. ஆனால் அது வேறுபாடானது" – என்றேன்.

### சிங்கள தேசம் இருக்குமானால் தமிழர் தேசமும் இருக்கும்

இந்த நாட்டில் ஒரு சிங்களதேசம் இருக்கின்றது என்பது வலியுறுத்தப்படுமானால், அந்த வலியுறுத்தலே இந்தத் தீவில் சிங்கள, பௌத்த தேசம் அல்லாத இன்னொரு தேசமும் இருக்கின்றது என்ற எண்ணப்பாட்டையும் உருவாக்கி வலியுறுத்தும் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

தனியாக சிங்கள மொழிக்கும், பௌத்தத்துக்கும் மேன்மை இடம் கொடுக்கும் சட்டங்களும் எண்ணக்கருவுமே இந்த நாட்டில் அந்த சிங்கள தேசத்துக்குள் அடங்காத இன்னொருதேசம் இருக்கின்றது என்ற கருத்தை ஏற்படுத்துகின்றது.

இந்த நாட்டில் சிங்கள தேசம் அல்லாத ஒரு தேசம் இருக்கின்றது என்ற கருத்தியலை உருவாக்கித் தீர்மானிக்க வைத்தவர்கள் தமிழர்கள் அல்லர். தேசிய வாழ்விலிருந்து ஏனையோர் அனைவரையும் தனிமைப்படுத்தி, புறமொதுக்கும் சிங்கள, பௌத்த சிந்தனையே அத்தகைய உரிமைக் குரல் எழுவதைத் தீர்மானிக்கும் அடிப்படையாக அமைந்தது.

அதுவே, தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகத்தை அந்த அரசமைப்பைத் தமிழர்கள் ஏற்கவில்லை என்பதை காங்கேசன்துறைத் தொகுதி இடைத்தேர்தல் மூலம் உலகுக்குப் பறைசாற்றச் செய்தது.

சிறிலங்கா தன்னை சிங்கள, பௌத்த தேசமாக வடிவமைத்து எம்மை சிறிலங்காவின் தேசிய வாழ்வில் இருந்து புறம்ஒதுக்கியிருக்கின்றமையால், நாங்கள் சிங்களவர்களிடம் யுத்தத்தில் பறிகொடுக்கும் – காலனித்துவ ஆட்சியாளர்களிடம் பறிகொடுத்த – இறைமையை மீட்டெடுத்து நிலைநிறுத்த வேண்டும் என்ற தீர்மானத்தை 1976 இல் தமிழர் எடுத்தார்கள். அதுவே அந்தத் தீர்மானத்தின் வாசகங்கள் ஆகும்.

தமிழர் தேசத்தின் தொலைந்த இறைமையை மீட்டெடுக்கும் ஆணையைத் தமிழ் மக்கள் 1977 தேர்தலில் ஒன்றுபட்டுத் திரண்டு பெரும் எண்ணிக்கையில் வாக்களித்து உறுதிப்படுத்தியிருக்கின்றார்கள்.

### மாறாத அடிப்படைகள்

நாங்கள் அந்த இடத்தில் இருந்து இப்போது நீண்ட தூரம் வந்து விட்டோம். ஆனாலும் சில அடிப்படைகள் மாறவே இல்லை.

இந்த நாட்டில் பௌத்த, சிங்கள தேசம் இருக்கின்றது என்ற எண்ணப்பாடு இங்கு நிலைநிறுத்தப்படுமானால், அதற்குப் பக்கத்தில் இந்த நாட்டில் தமிழ்த் தேசமும் இருக்கின்றது என்ற நிலைப்பாடும் நீடிக்கவே செய்யும்.

அத்தகைய மேன்மை உரிமை கோரும் பண்பியல்பு விலக்கப்படுமானால் – இந்தத் தீவு சிங்கள, பௌத்த தேசம் என அழைக்கப்படுகின்ற ஒரு தொகுதி மக்கள் கூட்டத்தினருக்கு மாத்திரமே உரியது என்பதல்ல என்ற கருத்து நிலைப்பாடு நிலைநிறுத்தப்படுமானால் – இது பல்மத, பல்லின, பல்மொழி தன்மை கொண்ட நாடு என்பதும், இங்குள்ள மக்கள் அனைவரும் சம உரிமைகள் கொண்டவர்கள் என்பதும் வரையறை செய்யப்படுமானால் – தமிழ் மக்கள் தங்களை வேறு விதமாக நினைத்துக் கொள்ளமாட்டார்கள் என்பதை நான் துணிவுடன் கூறுவேன்.

தாங்கள் 1929 இல், 1931 இல், 1934 இல், 1946 இல் உரிமை கோராத தமிழ்த் தேசம் என்ற இனத்துவ அடையாளத்தை 1970 இல் ஏன் அவர்கள் தங்களுக்காக வெளிப்படுத்திக் கொண்டார்கள்? அது 1972 இன் முதலாவது குடியரசு அரசமைப்பில் சிங்கள, பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களை புறமொதுக்கியதால்தான்.

### தமிழர் தேச எண்ணத்தை உருவாக்கியோர் சிங்களவரே

ஆகவே, நீங்கள் தான் தமிழர் தேசம் என்ற எண்ணக்கருவை – கோட்பாட்டை – உருவாக்கி உலவவிடக்காரணமானவர்கள். அந்த எண்ணக்கருவை இலகுவில் அழித்துவிட முடியாது. அது எஞ்சி நிற்கும்.

சிங்கள தேசம் என்ற எண்ணக்கரு நிலைத்திருக்கும் வரை தமிழ்த்தேசம் என்ற எண்ணக்கருவும் நிலைத்திருக்கும்.

இந்த இலங்கைத் தீவில் சிங்கள தேசம் இருக்குமானால் தமிழர் தேசமும் இருந்தே தீரும்.

இந்த நாட்டில் சிங்கள தேசம் என்ற அடையாளத்துடன் ஒன்று இல்லை, இருப்பது பல்லின, பல் மொழி, பல்மத அடையாளம் கொண்ட நாடுதான் என்று கூறும் துணிச்சல் உங்களுக்கு வருமானால் 'ஒரு நாடு' கோட்பாடு முழு அளவில் வெற்றி பெறும். தமிழர்கள் தங்களுடைய இறைமை மீள நிலைநிறுத் தப்பட வேண்டும் என்று வலியுறுத்தவே மாட்டார்கள்.

மாறாக சிங்கள தேசம் வலியுறுத்தப்படுமானால் தமிழர் தேசமும் வலியுறுத்தப்படும்; நிலைநிறுத்தப்படும் – என்றார் அவர். (உ)

## வெளிநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினம் நடைபெற்றபோது அந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இந்த அறிவிப்பை அவர் விடுத்தார்.

நாட்டின் சட்டம் மற்றும் அரசமைப்பு வரையறைகளின்படியே நாம் செயற்பட முடியும். அவற்றின்படி எந்தவொரு வழக்கிலும் வெளிநாட்டு நீதிபதிகளை எமது நாட்டுக்குள் நாம் கொண்டு வருவதற்கு இடமளிக்க முடியாது. அப்படியல்லாமல் வெளிநாட்டு நீதிபதிகளை நாம் கொண்டு வருவதானால் அதற்கு நாம் நாட்டின் சட்டங்களையும் அரசமைப்பையும் மாற்ற வேண்டும்.

இலங்கையில் உள்ள நீதிபதிகள் உலகில் வேறெந்த நாட்டின் நீதிபதிகளை விடவும் கல்வி, மதி நுட்பம், ஆற்றல், அனுபவம் ஆகியவற்றில் குறைந்தவர்களோ, சளைத்தவர்களோ அல்லர். அவர்கள் எந்த உள்நாட்டு மற்றும் அனைத்துலக விசாரணைகளையும் கையாளக்கூடிய ஆற்றல் கொண்டவர்கள். அத்தகைய நிலையில், இலங்கை தொடர்பான விசாரணைகளுக்கு வெளிநாட்டு நீதிபதிகளின் சேவையைப் பெறவேண்டிய அவசியம் இல்லை. – இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்கு மேலும் தெரிவித்தார். (உ)

## துணைவேந்தருக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றது.

இந்த தேர்தலில் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவம் மற்றும் வணிகபீட பீடாதிபதி வேல்நம்பி, விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியர் சிறி சற்குணராஜா, பேராசிரியர் மிகுந்தன், பேராசிரியர் விக்னேஸ்வரன் மற்றும் பேராசிரியர் வைத்திய கலாநிதி ரவிராஜ் ஆகிய ஐவரும் போட்டியிட்டு இருந்தனர்.

இத்தேர்தலில் பேராசிரியர் சிறிசற்குணராஜா 18 வாக்குகளையும், விக்னேஸ்வரன் 12 வாக்குகளையும், வேல்நம்பி 09 வாக்குகளையும், மிகுந்தன் 09 வாக்குகளையும், வைத்திய கலாநிதி ரவிராஜ் 09 வாக்குகளையும் பெற்றனர்.

ஒரே அளவான வாக்குகளைப் பெற்ற மேற்படி மூன்று பேராசிரியர்களுக்கும் மீண்டும் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் பேராசிரியர் வேல்நம்பி 14 வாக்குகளைப் பெற்றார்.

முதல் மூன்று அதிகூடிய வாக்குகளைப் பெற்றவர்களின் பெயர்கள் செனட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டு, செனட் சபையின் ஊடாக மூவரின் பெயர்களும் ஜனாதி பதிக்கு அனுப்பி வைக்கப் படும்.

எனினும், இவர்களில் ஜனாதிபதி தெரிவு செய்யும் நபரே யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தராக நியமிக்கப்படுவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாணசபையின் உறுப்பினர் அனந்தி சசிதரன்.

கேப்பாபிலவு மண் மீட்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும், வலிகாமம் வடக்கு மக்களின் மீள்குடியமர்வை வலியுறுத்தியும் மல்லாகம் பழம்பிள்ளையார் ஆலய முன்றிலில் நேற்று இடம்பெற்ற கவனவீர்ப்புப் போராட்டத்தின் முடிவில் அங்கு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். (உ)

# ஜெனீவா திருவிழா இன்று ஆரம்பம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையின் 34ஆவது கூட்டத்தொடர் இன்று 27ஆம் திகதி ஜெனீவா பலைஸ் வில்சனில் அமைந்துள்ள ஐ.நா.மனித உரிமைப்பேரவைமண்டபத்தில் ஆரம்பமாக உள்ளது.

ஐ.நாவின்மனிதஉரிமைபேரவையின் இவ்வாண்டுக்கான தலைவர் ஜோஹன் அலக்சாண்டர்தலைமையில்இக்கூட்டத்தொடர் நடைபெற உள்ளது. இவர் எல் சல்வடோர் நாட்டின் ஐ.நா நிரந்தர வதிவிடப்பிரதிநிதியாக கடந்த 2014 ஆம் ஆண்டு தொடக்கம் பணியாற்றி வருகிறார். எல் சல்வடோர் நாட்டின் பிரதிவெளிவிவகார அமைச்சராக 1986 முதல் 1989வரை பதவி வகித்த இவர் அதன் பின்னர் நியூயோர்க்கில் உள்ள ஐ.நா.சபையில் எல்சல்வடோர் நாட்டின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதியாகவும் சிலகாலம் பதவி வகித்தார். இராஜதந்திரத் துறையில்நீண்டஅனுபவம்கொண்ட இவர் இவ்வாண்டு ஐ.நா.மனித உரிமைப்பேரவைக்குதலைமை தாங்குகிறார்.

### ஐ.நா. செயலாளர்

34ஆவது கூட்டத்தொடரின் ஆரம்ப அமர்வில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகமாக இவ்வாண்டு பதவி ஏற்ற அன்ரோனியோ குடேர்ஸ் முதன்முறையாகஉலகத்தலைவர்கள் மத்தியில் உரையாற்ற உள்ளார். ஐக்கியநாடுகள்சபை செயலாளர் நாயகமாகப் பதவி ஏற்ற பின் மனித உரிமை பேரவைகூட்டத்தொடரில்பங்கு கொள்ளும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும். ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராக 10 வருடங்களாக பதவி வகித்த அன்ரோனியோ குடேர்ஸ் இவ்வாண்டு ஜனவரி முதலாம் திகதிஐக்கியநாடுகள்சபையின் செயலாளர் நாயகமாக பதவி ஏற்றுக்கொண்டார்.

போர்த்துக்கல் நாட்டின் பிரதமராக 1995ஆம் ஆண்டிலிருந்து2002ஆம்ஆண்டுவரை பதவிவகித்தஅவர்சிறந்தமனித உரிமை செயற்பாட்டாளராகக் கருதப்படுகிறார். சோசலிஸ்ட் இன்ரநஷனல் என்ற அமைப்பின் தலைவராக பதவி வகித்த பின் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கானஉயர்ஸ்தானிகராக பதவி ஏற்றார்.

### பிரபாவைச் சந்தித்தவர்

போர்த்துக்கல் நாட்டின் அரசியல் தலைவராக இருந்தவர் என்ற ரீதியில் இலங்கையின் இனப்பிரச்சினை பற்றி நன்கு அறிந்தஉலகத்தலைவராகவும் இவர் விளங்குகிறார். போர்த்துக்கல் ஒரு காலத்தில் இலங்கையை ஆட்சிசெய்தநாடாகும். 2005ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராகப்பதவிஏற்ற பின் இலங்கைக்கு விஜயம் செய்தஅவர்வன்னிக்குசென்று தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களையும் சந்தித்திருந்தார்.

வன்னிக்கு சென்று தமிழீழ விடுதலைப்புலிகளைச்சந்தித்த ஐ.நா. உயர்அதிகாரியாக அன்ரோனியோ குடேர்ஸ் விளங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அகதிகள்விடயத்திலும்மனித உரிமைவிடயங்களிலும்நீண்ட அனுபவம் உடையஐ.நா. செயலாளர்நாயகம்அன்ரோனியோ குடேர்ஸ் அவர்களின் சிறப்புரையும் இக் கூட்டத்தொடரில் முக் கிய நிகழ்வாகக் கருதப்படுகிறது.



### தலைவர்களின் அமர்வு

ஆரம்பநிகழ்வில் ஐ.நா. செயலாளர்நாயகம், மற்றும்ஐ.நா.மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் ஆகியோரின் உரைகளை தொடர்ந்து உயர் மட்டத் தலைவர்களின் அமர்வு இடம்பெறும். இந்த உயர்மட்ட தலைவர்களின் அமர்வு இரு தினங்கள் இடம்பெறும்.

மார்ச் மாதத்தில் இடம்பெறும் கூட்டத்தொடரில் முதல் அமர்வில் உயர்மட்ட தலைவர்களின் உரைகள் இடம்பெறும். அங்கத்துவநாடுகளின்அதிபர்கள், பிரதமர்கள், மற்றும் வெளிவிவகார அமைச்சர்கள் மட்டுமே இந்த உயர்மட்ட அமர்வில் உரையாற்றுவார்கள்.

இலங்கையின்சார்பில்வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நாளை செவ்வாய்க்கிழமை உரையாற்ற உள்ளார்.

இக்கூட்டத்தொடரில் இலங்கையில் உள்ள சில அரசியல்வாதிகளும், ஐரோப்பிய நாடுகளில் உள்ள தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும்கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர்கள் அரசசார்பற்ற நிறுவனங்களின் ஊடாகவேநுழைவுஅனுமதியைப்பெற்றுக்கொள்கின்றனர்.

நாடுகளின் பிரதிநிதிகள் மட்டும் அந்த நாட்டின் சார்பில் கலந்துகொள்ள முடியும். ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களோ அல்லது மாகாண சபை உறுப்பினர்களோ அந்த பதவி வழியாக ஐ.நா.மனித உரிமைபேரவைகூட்டத்தொடர்களில்கலந்துகொள்ளமுடியாது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில்பதிவிசெய்யப்பட்ட சில அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவே அரசபிரதிநிதிகள் தவிர்ந்த ஏனையோர் கலந்து கொள்கின்றனர். பதிவிசெய்யப்பட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் பார்வையாளர்களாக கலந்துகொள்வதற்கும் பக்க அறைகளில் இருமணிநேரத்திற்குமேற்படாதுகூட்டங்களைநடத்துவதற்கும் அனுமதி வழங்கப்படும்.

### நாடுகளுக்கே உரிமை

ஐக்கியநாடுகள்சபைஎன்பது நாடுகள் இணைந்து உருவாக்கிய சபையாகும். அங்கு நாடுகளின் நலன்களே முக்கியத்துவம் பெறும். பிரேரணையை முன்வைப்பதற்கும், வாக்களிப்பதற்கும் நாடுகளுக்கு மட்டுமே உரிமை உண்டு. பார்வையாளர்களாக கலந்து கொள்ளும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பிரேரணைகள் பற்றி அல்லது தீர்மானங்கள் பற்றிக்கருத்துச்சொல்வதற்கோ அதன் மீது வாக்களிப்பதற்கோ அதிகாரம் கிடையாது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள் ஆங்கிலம் மற்றும் பிரெஞ்ச் மொழிகளில் இடம்பெறுகின்ற போதிலும் உலகசனத்தொகைஅடிப்படையில் அரபு, சீனா, ஆங்கிலம், பிரெஞ்ச், ரஷ்யா, ஸ்பெயின் ஆகிய மொழிகள் ஐ.நாவின் உத்தியோகபூர்வ மொழிகளாக விளங்குகின்றன. இந்த மொழிகளைத்தவிரவேறுமொழிகளில் ஐ.நாவில்உரையாற்றமுடியாது.

இலங்கையிலிருந்துவருகை தந்து அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின் சார்பில் கலந்து கொண்ட ஒருவர் ஐ.நா.விதிகளுக்கு முரணாக தமிழில் உரையாற்றிய பின் அந்த அரசசார்பற்றநிறுவனத்திற்கு ஐ.நாவால் எச்சரிக்கை வழங்கப்பட்ட சம்பவமும் உண்டு. அது போல உயர்மட்டத்தலைவர்கள்,நாடுகளின் பிரதிநிதிகளின் உரைகள் முடிந்த பின் சில விடயங்கள் மீதுஇருநிமிடஉரையாற்றஅரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதுண்டு.

பாலஸ்தீனபிரச்சினைசம்பந்தமாக பேசப்பட்டுக்கொண்டிருந்த போது அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின் சார்பில் இலங்கையிலிருந்து சென்ற தமிழர் ஒருவர் இலங்கைப் பிரச்சினை பற்றி பேச முற்பட்ட போது அப்பேச்சு இடையில் நிறுத்தப்பட்டு எச்சரிக்கப்பட்ட சம்பவங்களும் உண்டு.

வாக்களிக்கும் உரிமை கூட 47 உறுப்பு நாடுகளுக்கு மட்டுமே உண்டு. இந்த 47 நாடுகளையும் ஐ.நா.பொதுச்சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் தெரிவு செய்கின்றன. உறுப்பு நாடாக இரு ஆண்டுகள் ஒரு நாடு பதவி வகிக்க முடியும்.

ஆபிரிக்காவிலிருந்து13 நாடுகளும், ஆசிய பசுபிக் நாடுகளிலிருந்து 13 நாடுகளும், லத்தீன் அமெரிக்கன் மற்றும் கரீபியன் பகுதியிலிருந்து 8 நாடுகளும் மேற்கு ஐரோப்பாவிலிருந்து 7 நாடுகளும், கிழக்கு ஐரோப்பாவிலிருந்து 6 நாடுகளுமாக 47 நாடுகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் உறுப்பு நாடுகளாக உள்ளன.

### உறுப்பு நாடுகள்

இலங்கை இம்முறை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் உறுப்பு நாடு அல்ல. ஆசிய பசுபிக்நாடுகளிலிருந்து பங்களாதேஷ், சீனா, இந்தியா, இந்தோனேசியா, ஈராக், ஜப்பான், கிர்கிஸ்தான், மொங்கோலியா, பிலிப்பைன்ஸ், கட்டார், கொரிய குடியரசு, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளே உறுப்புரிமை கொண்ட நாடுகளாக உள்ளன.

வருடாந்தம் மூன்று தடவை நடைபெறும் மனித உரிமைப் பேரவையின் கூட்டத்தொடரில் மார்ச் மாத கூட்டத்தொடரே முக்கியத்துவம் பெறுகிறது. அதில் நாடுகளின்உயர்மட்டதலைவர்கள் கலந்து கொள்கின்றனர். மார்ச்மாதகூட்டத்தொடர்நான்கு வாரங்களும் ஜூன் மாத கூட்டத்தொடர் மூன்று வாரங்களும், செப்ரெம்பர் மாதக் கூட்டத்தொடர் மூன்று வாரங்களும் இடம்பெறும்.

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் மனித உரிமை விடயங்கள் தொடர்பான யு.பி.ஆர். அறிக்கையும் இந்த அமர்வில் இடம் பெறும்.நான்குஆண்டுகளுக்கு ஒரு முறை அங்கத்துவ நாடு ஒன்றின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்படும். அந்த வகையில் மார்ச் 22ஆம் திகதி மத்திய ஆபிரிக்கா, கொங்கோ, மாலி, ஹைட்டி, லிபியா, உக்ரைன், கென்யா, சிறிலங்கா ஆகிய நாடுகளின் மனித உரிமைதொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படும். இந்த விவாதத்தில் நாடுகளின் பிரதிநிதிகள் மட்டுமே கருத்துக் கூற முடியும்.

அன்றையதினம் மாலை 2015ஆம்ஆண்டுசெப்ரெம்பர் மாதத்தில்இலங்கைதொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முன்னேற்றங்கள் தொடர்பான ஐ.நா.மனித உரிமை ஆணையாளரின் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படும். இந்த அறிக்கைமுன்கூட்டியே வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் அன்றைய தினமே உத்தியோகபூர்வமாக மனிதஉரிமைபேரவைக்கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை பற்றிய எதிர்பார்ப்பு தமிழர் தரப்பில் காணப்படும் அதேவேளை 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் நிறைவேற்றப்பட்டதீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கும் சில விடயங்களைநீக்கிமேலும்சில விடயங்களை சேர்த்துக் கொள்ளும் புதிய பிரேரணை ஒன்று முன்வைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப்பிரேரணையை பிரித்தானியா முன்வைக்க உள்ளது

இந்தபிரேரணைக்கானமுன் அறிவித்தலை பிரித்தானியா மனித உரிமை பேரவைக்கு கொடுத்துள்ளது.

2015ஆம்ஆண்டுசெப்டம்பர் மாதம் அமெரிக்காவினால் முன்வைத்துநிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு சிறிலங்கா அரசாங்கமும்அனுசரணைவழங்கியிருந்தது ஏகமனதாகவே அத்தீர்மானம்நிறைவேற்றப்பட்டிருந்தது.

அத்தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கும் விடயங்களை 18மாதங்களில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் இது தொடர்பான முழுமையான அறிக்கையை ஆணையாளர் 2017ஆம் ஆண்டு மார்ச் மாத கூட்டத்தொடரில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அந்த தீர்மானத்தில் சொல்லப்பட்டிருந்தது.

இலங்கை அரசாங்கம் வாக்குறுதி அளித்தவாறு எதனையும் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டுக்களைத் தாங்கி ஐ.நா.மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை வெளிவந்தாலும் இலங்கை அரசாங்கம் மீது ஐ.நா.சபை எந்த நடவடிக்கைகளையும்எடுக்கப்போவதில்லை என்பது திண்ணம். ஏனெனில் கடந்த 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம்ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையில் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளது, போர்க்காலத்தில் மானிடத்திற்கு எதிரான குற்றங்கள் இடம்பெற்றுள்ளன என அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தார். ஆனால்மானிடத்திற்கு எதிரான குற்றத்தை இழைத்த சிறிலங்கா மீது இதுவரை எந்த நடவடிக்கைகளையும்ஐ.நா.சபை எடுக்கவில்லை.

அதேபோன்றுதான் இம்முறை ஐ.நா.மனித உரிமை ஆணையாளர்வெளியிட இருக்கும்அறிக்கையிலும்சிறிலங்கா மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டாலும் அவை காலப்போக்கில்அழிந்துபோன அல்லதுமறக்கப்பட்டஅறிக்கைகளாகவே அமைந்துவிடும்.

ஐ.நா.சபையில்அளித்தவாக்குறுதிகளை நிறைவேற்றாது கால இழுத்தடிப்பு செய்து வரும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து நெருக்கடியை ஏற்படுத்தும் வகையில் செயல்படஐ.நா.சபையில் எந்த ஒருநாடும்இல்லைஎன்பதுதான் யதார்த்தம்.

ஐ.நா.பொதுச்சபையும், ஐ.நா.மனித உரிமைகள் பேரவையும் அரசுகளுக்கு இடையிலான ஓர் அமைப்பு ஆகும். அங்கத்துவநாடு என்ற வகையில் சிறிலங்கா அரசைக் காப்பாற்றும்செயற்பாடுகளிலேயே அனைத்துநாடுகளும்உள்ளன.

கடந்த ஆட்சிக்காலத்தில்மேற்குலக நாடுகள் சிறிலங்கா மீது அழுத்தங்களை கொடுத்து வந்தன. ஆட்சி மாற்றத்தின் பின் அமெரிக்கா, பிரித்தானியா உட்பட மேற்குலக நாடுகளும் சிறிலங்காவை காப்பாற்றும் முயற்சிகளிலேயே இறங்கி உள்ளன.


இதன் ஒரு கட்டம் தான் இம்முறை இலங்கை தொடர்பாக பிரித்தானியா முன்வைக்க உள்ள பிரேரணை. 2015 செப்ரெம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் பொது நலவாய நாடுகளின் நீதிபதிகள், வழக்குதொடுநர்கள், வழக்கறிஞர்கள் உள்ளடங்கிய நீதிவிசாரணை நடத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த வாக்கியத்தை நீக்கி உள்நாட்டு விசாரணை என மாற்றும் பிரேரணையை பிரித்தானியா முன்வைக்க உள்ளது.

இதன் மூலம் சிறிலங்காவின் இராஜதந்திர நடவடிக்கைகள் சர்வதேசத்தில் வெற்றி பெற்றிருக்கிறதுஎன்றேசொல்லவேண்டும். (உ)

(நன்றி – தினக்கதிர் இணையம்)

# மண் மேடு சரிந்து வீழ்ந்ததில் இருவர் பலி; சிலர் படுகாயம்

## மாத்தளை லக்கலவில் நேற்று சம்பவம்



மாத்தளை - லக்கல களு கங்கை வேலைத் திட்டத்தில் அகழ்வுப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்த பகுதியில் மண்மேடு சரிந்து விழுந்ததில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானார். மற்றொருவர் 8 மணித்தியாலங்களின் பின்னர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பல பணியாளர்கள் மேற்படி வேலைத்திட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இதன்போது மண்மேடு திடீரென சரிந்து அவர்களின் மேல் வீழ்ந்தது எனக் கூறப்படுகின்றது.

இதனால், ஒருவர் மண் மேட்டினுள் சிக்கி உயிரிழந்தார். மற்றும் சிலர் காயமடைந்தனர்.

ஒருவர் மண் மேட்டினுள் சிக்கி காணாமற்போனார். அவர் உள்ளே சிக்கியிருக்கிறார் என்பதை ஏனைய பணியாளர்கள் உறுதிப்படுத்தினர்.

பல்வேறு தரப்பினரும் இணைந்து 8 மணிநேரம் நடத்திய தேடுதலின் பின்னர் அவர் மண்மேட்டில் சிக்கியிருந்த நிலையில் உயிருடன் மீட்கப்பட்டார்.

உயிருக்குப்போராடிக்கொண்டிருந்த அவர் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார். (ம)

# வடமேல் மாகாண மருத்துவர்கள் இன்று 4 மணிநேரம் பகிஷ்கரிப்பு

மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து வட மேல் மாகாணத்தில் சகல அரச வைத்திய சாலைகளிலும் உள்ள வைத்தியர்கள் இன்று காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடத்தீர்மானித்துள்ளனர்.

சைட்டம் எதிர்ப்பு வைத்தியர்கள், மாணவர்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் தலைவர்கள் உட்பட பலரின் பங்குபற்றுதலுடன் இன்று மாலை குருணாகலை நகரில் கூட்டமொன்றும் நடைபெறும் எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. (ம)

# மகிந்தவின் நிதி மோசடி ஆவணம் சிக்கியதாம்

## நிதி அமைச்சு அறிவிப்பு

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி நிதி அமைச்சராகவிருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வெளியிடப்பட்ட 1895/19 ஆம் இலக்கமுடைய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் தற்போதைய நிதி அமைச்சரின் கைக்குக் கிடைத்துள்ளது என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவும் முன்னாள் மத்திய வங்கியின் ஆளுனர் அஜித் நிவாட் கப்ராலும், மத்தியவங்கியிலுள்ள இவர்களுக்கு சார்பானவர்களும் சேர்ந்து அரச நிதியை மோசடி செய்தனர் என்பதை இந்த வர்த்தமானி அறிவித்தல் எடுத்துக் காட்டுகின்றது என நிதி அமைச்சு விடுத்துள்ள அறிவித்தல் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# அரசில் இருந்து விலகும் செய்தி பொய் என்கிறார் அத்துரலிய தேரர்



கொழும்பு, பெப்.27

தான் அரசாங்கத்திலிருந்து விலகிச் சுயாதீனமாகச் செயற்படத் தீர்மானித்தார் எனச் சிலர் பொய்யான செய்தியை இட்டுக் கட்டுகின்றனர் என அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

சுயாதீனச் செயற்பாடு தொடர்பான செய்தி பொய்யானது எனவும் அவர் தெரிவித்தார். நேற்று களுத்துறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அமைச்சர் ராஜித சேனாரத்னவும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்.

'நான் அரசாங்கத்திலிருந்து செல்லப் போகிறேன் எனச் சிலர் கூறுகின்றனர். அரசாங்கத்துடன் தான் நான் உள்ளேன். இந்த அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கி எமது கொள்கையைச் செயற்படுத்துவது தான் எமது பிரதான பொறுப்பு'. - எனவும் தேரர் மேலும் தெரிவித்தார். (ம)

# வேலையற்ற பட்டதாரிகள் இன்று முதல் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப்.27

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் இன்று திங்கட்கிழமை முதல் காலவரையறையற்ற போராட்டத்தை இரவு, பகலாக முன்னெடுக்கவுள்ளனர் என்று அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகம் ஊடக அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்குமாறு கோரி மத்திய, மாகாண அரசுகளுக்கு கடந்த காலங்களில் பல வழிகளிலும் கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் இன்று வரை வடமாகாணத்தைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் தமக்கு வேலைவாய்ப்பை வழங்க வலியுறுத்தியே இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது என அவர்கள் அறிவித்துள்ளனர். (ம)

### சு.கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதுவுமிருப்பின் அதனை நேற்றைய தினத்துக்கு முன்னர் தெரிவிக்கும்படியும் அந்த அழைப்புக் கடிதத்தில் கோரப்பட்டிருந்ததாம்.

பெரும்பாலும், ஐ.தே.கவுடன் சேர்ந்து நல்லாட்சி அரசு அமைப்பதை விடுத்து அதிலிருந்து வெளியேறுமாறு சு.க. அதிருப்திக் குழுவினர் கட்சித் தலைமையைக் கோருவர் என எதிர்பார்க்கப்பட்டது.

### ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளோடு இலங்கையின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பங்குபற்றுகின்றார்.

இலங்கை தொடர்பான விடயம் மார்ச் 22 ஆம் திகதி சபையில் எடுத்துக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2015 செப்ரெம்பரில் இலங்கை தொடர்பாக அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அம்சங்களை நிறைவேற்றுவதற்கு இலங்கைக்கு மேலும் தாராளமான கால அவகாசத்தை வழங்கும் பிரேரணை ஒன்றை அன்றைய தினம் பிரிட்டன் முன்வைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

### பாடகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலைஞருமாவார். 1995கள் தொடக்கம் யாழ்ப்பாணத்தின் பிரபல நட்சத்திரப் பாடகராக விளங்கிய அவர், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் பிரதான பாடகராகவும் விளங்கினார். 'இந்த மண் எங்களின் சொந்த மண்...' என்பது உட்பட இவரின் சுதந்திர எழுச்சியூட்டும் புரட்சிப் பாடல்கள் மக்கள் மத்தியில் அவருக்குப் பெரும் வரவேற்பைத் தந்தன.

பிரபல தென்னிந்தியத் திரைப்படப் பாடகர்களுக்கு நிகராகத் தமது கணீரென்ற குரலினால் பாடி பல்லாயிரம் ரசிகர்களைக் கவர்ந்தவர் சாந்தன் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

### ஓட்டோவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணியது. எதிர் குழுவின் ஓட்டோ ஒன்றை வீதியில் இழுத்துச் சென்ற அக்குழு, பின்னர் அந்த ஓட்டோவை வெட்டியும், கொத்தியும், புரட்டித் தலைகீழாகப் போட்டும் துவம்சம் பண்ணியது.

சம்பவத்தைக் கேள்விப்பட்டு விரைந்து வந்தனர் யாழ். பொலிஸார். பொலிஸாரின் தலைக் கறுப்பைக்கண்டதும் அட்டகாசக் குழு தலைதெறிக்க ஓடித் தப்பியது.

இரண்டு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட முறுகலை அடுத்தே ஒரு குழுவைச் சேர்ந்தோர் திரண்டு வந்து அடாவடித்தனம் பண்ணி, ரகளை செய்தனர் என்றும் கூறப்பட்டது.

அப்பகுதியில் கைவிடப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றைக் கைப்பற்றிய யாழ். பொலிஸார், சந்தேகத்தின் பேரில் நான்கு பேரைக் கைதுசெய்தனர் எனவும் அறியவந்தது. (உ)

### நெல்லியடியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் காணியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை தென்னம்பிள்ளைக்கு பசளை இடுவதற்காகக் கிடங்கு வெட்டியபோது சந்தேகத்திற்கிடமான பொருள்கள் தென்பட்டமையை அடுத்து காணி உரிமையாளரால் அது குறித்து நெல்லியடிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

பருத்தித்துறை நீதிமன்ற அனுமதியுடன் விசேட அதிரடிப் படையினர் மூலமாகக் குண்டுகள் மீட்கப்பட்டு முள்ளிப் பகுதியில் வைத்து அழிக்கப்பட்டுள்ளன என நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். (உ-23)

# ஈழத்தமிழ் மக்களுக்காக லண்டனில் நேற்று மாலை கவனவீர்ப்பு போராட்டம்



லண்டன், பெப்.27

இலங்கையில் தமிழ் மக்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து புலம்பெயர் தமிழ் மக்களால் லண்டனில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி போராட்டம் நேற்று மாலை 4 மணி முதல் லண்டனில் உள்ள பிரிட்டிஷ் பிரதமரின் இல்லத்துக்கு முன்னாள் இடம்பெற்றுள்ளது.

தமிழ் மக்களின் சமகால கோரிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபையிடம் முன்வைக்கும் முகமாக, இந்த மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஐ.நா. தீர்மானத்தில் சொல்லப்பட்டுள்ள கலப்பு நீதிமன்றப் பொறிமுறையை மாற்றுவதற்கு அல்லது நீடிக்கப்பட்ட கால அவகாசத்திற்கு பிரித்தானிய ஆதரவு வழங்கக்கூடாது எனவும் இதன் போது வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை படைகளால் அபகரிக்கப்பட்ட கேப்பாபிலவு மக்களினது நிலங்களை மீளக் கையளிக்குமாறும், அதே போன்று வடக்கு கிழக்கு தாயகத்தில் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள விடுவிக்கப்படாத காணிகளைப் பெற்றுத்தரவும் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, நேற்று முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மருத்துவப் பேரவைத் தலைவரை சுகம் விசாரித்தார் ஜனாதிபதி

திடீர் சுகயீனமுற்று கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இலங்கை மருத்துவப் பேரவையின் தலைவர் பேராசிரியர் காலோ பொன்சேகாவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று நேரில் சென்று சுகம் விசாரித்துள்ளார்.

சைட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருபவர்களில் முதன்மையானவராக பேராசிரியர் காலோ பொன்சேகா காணப்படுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# இந்திய மீனவர் தொடர் அடாவடியால் வடமராட்சி கிழக்கில் வலைகள் சேதம்!

## இரண்டு கடற்படைப் படகுகளைத் தினமும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்த அரச அதிபர் நடவடிக்கை





இந்திய மீனவர்களது அடாவடிகளால் உள்ளூர் மீனவர்களது 40 லட்சத்துக்கும் அதிகம் பெறுமதி கொண்ட வலைகள் நேற்று முன்தினம் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் மருதங்கேணி பிரதேச செயலர் கே.கனகேஸ்வரனுக்கு இந்த விடயம் தொடர்பாகத் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு நேரில் சென்று சேத விவரத்தைப் பார்வையிட்டு மதிப்பிட்டதுடன், உரிய தரப்புக்களுக்கும் விடயத்தைப் பிரதேச செயலர் தேரியப்படுத்தினார். இந்த விடயம் தொடர்பாக அரச அதிபருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இதன்போது, இரண்டு கடற்படைப் படகுகள் தினமும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் என்றும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அரச அதிபர் தெரிவித்துள்ளார் என்றும் கூறினர்.

இந்தியா மீனவர்களின் 150 இற்கும் மேற்பட்ட இழுவைப் படகுகள் மாமுனை - கட்டைக்காடு வரையான கடற் பிரதேசத்தில் கரையில் இருந்து 200 மீற்றர் வரையான பகுதிக்குள் பிரவேசித்து மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டன.

இவ்வாறான அவர்களது நடவடிக்கையால் உள்ளூர் மீனவர்களின் 40 லட்சத்துக்கு மேற்பட்ட பெறுமதியுடைய வலைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன என்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

சேதமடைந்த வலைகளையும் பிரதேச செயலருக்குக் காண்பித்தனர்.

பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள், கடற்படையினரின் அவதானிப்பு நிலையத்தில் ஒன்றுகூடித் தமது பாதிப்பை வெளிக்காட்டினார்கள்.


கடந்த 15 திகதி தொடக்கம் பல நூற்றுக் கணக்கான இந்திய இழுவைப் படகுகள் வடமராட்சி கிழக்கின் மாமுனை - சுண்டிக்குளம் வரையான கடல் பகுதியில் அத்துமீறுகின்றன என்று கடற்றொழிலாளர்கள் கூறியுள்ளனர்.

இதற்குரிய தீர்வுகள் மிக விரைவில் அரசால் எடுக்கப்பட வேண்டும் என்றும் தொழிலாளர்கள் தெரிவித்தனர். (ஐ-35)

# பிரதமர் ரணில் - மஹிந்த சிங்கப்பூரில் இரகசியப் பேச்சு

கொழும்பு, பெப், 27

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கிடையில் கடந்த 17 ஆம் திகதி சிங்கப்பூரில் இரகசியமான பேச்சு ஒன்று நடந்துள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.



பிரதமர் ரணில், தனது ஆஸ்திரேலிய விஜயத்தை முடித்துக்கொண்டு வரும் வழியில் கடந்த 17 ஆம் திகதி சிங்கப்பூரில் தங்கினார்.

சிகிச்சை பெறச் செல்வதாகக் கூறி அதற்கு முன்னர் மஹிந்த ராஜபக்ஷ சிங்கப்பூர் சென்று அங்குள்ள ஷெங்ரிலா விடுதியில் தங்கியுள்ளார்.

அமைச்சர் சாகல ரத்நாயக்கவும் சிகிச்சைக்காக செல்வதாகக் கூறி இலங்கையில் இருந்து சிங்கப்பூர் புறப்பட்டுச் சென்றிருந்தார்.


பிரதமர் ரணில், அமைச்சர் சாகல மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ஆகியோருக்கு இடையிலான இரகசியமான பேச்சு கிராண்ட் ஹயட் ஹோட்டலில் கடந்த 17 ஆம் திகதி நடந்துள்ளது என்று சிங்கள இணையத்தளம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

ராஜபக்ஷவினருக்கு வெளிநாடுகளில் உள்ள பணம் தொடர்பான பல தகவல்களை விசாரணை அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

இந்தத் தகவல்களை மூடி மறைத்து ராஜபக்ஷ குடும்பத்தினரைக் குற்றச்சாட்டுகளில் இருந்து காப்பாற்றுவது எப்படி என்பதே சிங்கப்பூரில் நடந்த இரகசியமான பேச்சின் பிரதான நோக்கம் என்று சிங்கள இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், எவ்வித அழுத்தங்களுக்கும் அடி பணியாது விசாரணைகளை மேற்கொண்ட நிதி மோசடி விசாரணைப் பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களை இடமாற்றம் செய்து ராஜபக்ஷவினரைக் காப்பாற்றுவது என்று முதல் கட்டமாகக் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. (ஐ)

# நயினாதீவு வைத்தியசாலைக்கு வடக்கு சுகாதார அமைச்சர் விஜயம்



நயினாதீவு பிரதேச வைத்தியசாலைக்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் சனிக்கிழமை திடீர் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

வைத்தியசாலையின் நிலைமை தொடர்பில் ஆராய்வதற்காகவே அமைச்சர் திடீர் விஜயம் மேற்கொண்டிருந்தார் என்று அமைச்சரின் ஊடக பிரிவால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

அண்மைக் காலமாக இந்த வைத்திசாலைகளில் நிலவும் குறைபாடுகள் தொடர்பில் ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தன.

இந்த நிலையில் அங்குள்ள நிலைமைகளை நேரில் சென்று ஆராயும் பொருட்டே அமைச்சர் விஜயம் செய்திருந்தார்.

இதன்போது வைத்தியசாலையில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு தொடர்பிலும் கட்டட வசதிகள் தொடர்பிலும் வைத்தியசாலை நிர்வாகத்தால் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

தீவுப் பகுதி வைத்தியசாலைகளுக்கான மருந்துகளை தாமதமின்றி உடனடியாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு இதன்போது அமைச்சர் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

அத்துடன் வைத்தியசாலையின் கட்டடங்கள் 60 வருடங்கள் பழமை வாய்ந்தனவாக இருப்பதால் அவற்றைத் திருத்துவது பொருத்தமற்றதாக இருக்கும் என்றும் எதிர்காலத்தில் புதிய கட்டடங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். - என்றுள்ளது. (ஐ)

# தேசிய சுதந்திர முன்னணி விலகுவதை ஏற்கிறோம்

## மஹிந்த அமரவீர தேரிவிப்பு

கொழும்பு, பெப்.27

நாடாளுமன்ற உறுப் பினர் விமல் வீரவங்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து விலகிக்கொள்ள விடுத்துள்ள கோரிக்கையை ஏற்றுக்கொள்கிறோம் என்று முன்னணியின் செயலாளரான அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இனவாதிகள் இல்லாத, ஊழல், மோசடிகளுடன் சம்பந்தப்பட்ட அணிகளுடன் இணைந்து எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நோக்கம் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து விலகிக்கொள்வதாக தேசிய சுதந்திர முன்னணி அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கேப்பாபிலவில் மொரட்டுவ பல்கலை மாணவர்களும்!

முல்லைத்தீவு, பெப்.27

கேப்பாபிலவு பிலக்குடியிருப்பு மக்கள் தமது சொந்த நிலங்களை கையகப்படுத்தியுள்ள விமானப்படையினர் அதனை விடுவிக்க வேண்டுமெனக் கோரி தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மொரட்டுவ பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் நேற்று அவர்களது போராட்டத்தில் இணைந்து கொண்டனர். (ஐ-81)



# செயலமர்வு

அரசியலில் ஆர்வம் கொண்டுள்ள இலங்கைப் பிரஜைகள் சமூகத்தினுடைய தலைமைத்துவ சாத்திய வளத்தை விருத்தி செய்யும் நோக்கத்துடன், மாவட்ட மட்ட பிரஜைகளை ஒழுங்கமைக்கும் செயலமர்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச)

காலைக்கதிர்
Kalaikkathir



## சாந்தனின் இறுதிக்கிரியை நாளை கிளிநொச்சியில்



தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னணிப் பாடகர் எஸ்.ஜி.சாந்தனின் இறுதிக் கிரியைகள் நாளை கிளிநொச்சியில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரது பூதவுடல் நேற்று மாலை 6 மணி தொடக்கம் இரவு 11 மணிவரை யாழ்ப்பாணம் இன்பம் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. பின்னர் மாங்குளத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.

இன்று காலை தொடக்கம் நண்பகல் வரை மாங்குளம் மகாவித்தியாலயமைதானத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அங்கு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும். பின்னர் கிளிநொச்சி விவேகானந்தநகரில் உள்ள வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அவரது இறுதிக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-81)

## 'தமிழினத்தின் இசைக்குரல்' சாந்தனுக்கு வீரவணக்கம்

### ஜனநாயகப் போராளிகள் கட்சி தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பாடகர் எஸ்.ஜி.சாந்தனின் மறைவுக்கு ஜனநாயகப் போராளிகள் கட்சி வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளது.

'தமிழினத்தின் இசைக்குரல்' எஸ்.ஜி. சாந்தன் தமிழீழத்தின் வெற்றி, மகிழ்ச்சி, துன்பம், துயரம் அத்தனை நிகழ்வுகளையும் தனது குரலின் மூலம் வரலாற்றில் பதிந்துள்ளார் என மேற்படி கட்சி தெரிவித்துள்ளது.

"போர்க்களத்தில் மட்டுமல்ல, துயிலும் இல்லத்திலும் உன் குரல் ஓங்கி ஒலித்திருக்கின்றது. எங்கள் சார்பிலும் எமது மக்களின் சார்பிலும் உங்களுக்கு வீர வணக்கங்கள்" - எனவும் முன்னாள் போராளிகள் கட்சி தெரிவித்துள்ளது. (ம)

## கேப்பாபிலவு மக்களுக்கு ஆதரவாக பல்வேறு தரப்பினர் போர்க்கொடி

### கோஷங்களால் அதிர்ந்தது விமானப்படை முகாம்



முல்லைத்தீவு, பெப்.27

கேப்பாபிலவு - பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டம் நேற்று 27 ஆவது நாளாகத் தொடர்ந்தும் இடம்பெற்ற நிலையில், அவர்களுக்கு ஆதரவாக இலங்கை ஆசிரியர் சங்கம் உள்ளிட்ட பல அமைப்புக்கள் நேற்று விமானப்படை முகாமுக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் இடம்பெறும் இடத்திற்கு நேற்றுக் காலை சென்ற இலங்கை ஆசிரியர் சங்கம், புளியங்குளம் இளைஞர் அணி, யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள், மொரட்டுவ பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள், இலங்கை முதலுதவிச் சங்க உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், நலன்விரும்பிகள் எனப் பல அமைப்பினரும் தனி நபர்களும் நூற்றுக்கணக்காகத் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கேப்பாபிலவு மக்களின் நிலங்களை உடன் வழங்கு, எமது நிலம், எமது வயல், எமது காடு, வீதி ஓரமே எமது வாழ்விடமா? எங்கள் நிலம் எமக்கு வேண்டும், கேட்பார் இல்லையென நினைத்தாயோ கேப்பாபிலவு மக்களை? போன்ற பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-81)

## கிளிநொச்சிப் போராட்டத்திற்கு பல்கலை மாணவர்கள் ஆதரவு





கிளிநொச்சியில் இடம்பெற்று வருகின்ற காணாமற்போனோரின் உறவினர்களின் போராட்டத்திற்கு அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் ஆதரவு தெரிவித்து நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாகக் கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்ட காணாமற்போனோரின் உறவினர்களது சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. நேற்று ஏழாவது நாளாகவும் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

பல்வேறு தரப்பினரும் அவர்களுக்கு ஆதரவை வெளிப்படுத்தி வருகின்ற நிலையில் நேற்று மேற் படி பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, நல்லாட்சியா நாடக ஆட்சியா?, எங்களால் கையளிக்கப்பட்ட எமது உறவுகள் எங்கே? போன்றன உட்பட பல்வேறு பதாகைகளை தாங்கியவாறு கிளிநொச்சி திரேசா ஆலய முன்றிலில் இருந்து ஊர்வலமாகப் போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் கந்தசுவாமி ஆலயத்திற்குச் சென்ற பல்கலைக்கழக மாணவர்கள் அங்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-70)

## கிளிநொச்சி புதுமுறிப்பு வித்தியாலயத்தில் வகுப்பறைத் தொகுதி எரிந்து அழிந்தது





கிளிநொச்சி, பெப்.27

கிளிநொச்சி புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நேற்றுப் பிற்பகல் வகுப்பறைத் தொகுதி ஒன்று தீயில் எரிந்து முற்றாக அழிந்துள்ளது. நான்கு வகுப்பறைகளைக் கொண்டதும் கிடுகினால் வேயப்பட்டதுமான தற்காலிக வகுப்பறைத் தொகுதியே எரிந்து அழிந்தது.

தீபரவியதைக் கண்ட பிரதேச மக்களும் அது தொடர்பாக அறிந்த பொலிஸாரும் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து தீயை அணைக்க முற்பட்டனர். எனினும், தீ வேகமாகப் பரவியதால் அந்த வகுப்பறைத் தொகுதி முற்காக எரிந்து அழிந்தது.

மின்னிணைப்புக்கள் இல்லாத மேற்படி வகுப்பறைத் தொகுதியில் மின் ஒழுக்கு ஏற்பட சந்தர்ப்பம் இல்லை. அது எவ்வாறு எரிந்தது என்பது தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, தீயணைப்புப் படையினர் இருந்திருப்பின் இந்தக் கட்டடத் தொகுதி முற்றாக எரிவதைத் தடுத்திருக்க முடியும் என்று கருத்து வெளியிட்ட மக்கள் கிளிநொச்சியில் தீயணைப்புக் கருவிகளுடன் கூடிய வாகனம் இல்லாமையால் தீயினால் பெரும் சேதனங்கள் ஏற்படுகின்றன எனவும் கவலை வெளியிட்டுள்ளனர். (ம-70)

## வறட்சியினால் மின்சார சபைக்கு ரூ. 5,100 கோடி செலவு

நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக நீர் மின்சார உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதால் அடுத்த ஆறு மாதங்களுக்கு எரிபொருள் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டிய நிலைக்கு இலங்கை மின்சார சபை தள்ளப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. -

இதனால், அந்த ஆறு மாத காலத்துக்கு மட்டும் இலங்கை மின்சார சபைக்கு மேலதிகமாக ஐயாயிரத்து 100 கோடி ரூபா மேலதிகமாகச் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இதேவேளை, இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்காக எரிபொருள் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் புதிய ஜெனரேட்டர்கள் சிலவற்றைக் கொள்வனவு செய்யவும் மின்சாரசபை நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறப்பட்டது. (உ)

## கைதான நபர் உயிரிழப்பு: ஐந்து பொலிஸார் கைது!

### பேலியகொடையில் சம்பவம்

கொழும்பு, பெப்.27

பேலியகொடை பொலிஸ் குற்றப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட 41 வயதான சந்தேகநபர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

உபபொலிஸ் பரிசோதகர் ஒருவரும் நான்கு கான்ஸ்டபில்களுமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர். இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

காரொன்றைக் கொள்ளையிட்ட விவகாரம் தொடர்பில் கடந்த 15 ஆம் திகதி பேலியகொட பொலிஸாரால் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கடுவலை - நவகமுவ பகுயைச் சேர்ந்த ஒருவரிடம் துப் பாக்கி இருக்கின்றது என வாக்குமூலம் அளித்தனர். அதற்கமைய நேற்று முன்தினம் மாலை பேலியகொடைப் பொலிஸார் சந்தேகநபரின் வீட்டுக்குச் சென்று அவரைக் கைதுசெய்தனர்.

பின்னர் துப்பாக்கி இருக்கும் இடத்தைக் காட்டுவதற்காகச் சந்தேக நபரை அழைத்துச் செல்லப் பட்டபோது அவர் தப்பி ஓட முற்பட்டார் எனவும், அதன்போது திடீரென சுகயீனமுற்றார் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது.

இதனால், அவரை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் அவர் உயிரிழந்துவிட்டார் எனவும் அந்த அலுவலகம் தெரிவித்திருந்தது.

ஆனால், உயிரிழந்தவரின் உடல் அதிகமாக நசுக்கப்பட்டிருந்தது என சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதற்கமைய அதிக இரத்தப் போக்கு அல்லது உடலில் நீர் குறைவடைந்தமையே மரணத்துக்கு காரணமாக இருக்கலாம் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கு அமைய இந்த விடயம் குறித்து விசேட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.